உ


சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அறம் நானூறு

அருள் நெறி அகவல்

நால்வர் பொற்றாள் நம்முயிர்த்துணை துணையே



திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் மாணிக்கவாசகர்

மு. குப்புசாமி


உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அறம் நானூறு

அருள் நெறி அகவல்



மு. குப்புசாமி

டாக்டர் மா. செல்வராசன்
தமிழ்ப்பேராசிரியர்
சென்னைப்பல்கலைக்கழகம்
சென்னை 600 005.

தொடு நடை

ஈராயிரம் ஆண்டு இலக்கியப் பழமையுடன் இலங்கிவருவது நம் இனிமைத் தமிழ். முத்தமிழ் என்று முழங்குகின்றோம்; ஐந்தமிழ் என்று அகவுகின்றோம். இருந்தும் நற்றமிழ் மணந்த நற்காலம்; பிற இன ஆளுகை பிறமொழி அழுத்தம் பெரிதும் இல்லாத பொற்காலம்; ஆனால் தமக்குள் போரிடுவது தலையாய கடன் என்று தறுக்கிய கற்காலம்; தமிழன் என்னும் தன்னிலை உணராமல் தனித்தனியே பிரிந்துகிடந்து பெருமைப்பட்ட முற்காலம்; அதுவே சங்க காலம்.

'தண்டமிழ் பொதுவெனப் பொறாமல்' சண்டையிடுவதே சால்பெனக் கொண்டனர். மன்பதை வரலாறு மக்கள் வாழ்வில் தொடங்குவதினும் மன்னர் வரிசைகளை வகுத்தளிப்பதிலேயே வளரக் கண்டனர். நிலமும் நீரும் பிற நிலையில்லாப் பொருள்களும் நிறைந்தால்தான் குலமும் கொற்றமும் கொழுக்கும் என நினைத்தனர். எனவே வலமும் இடமும் வளமான மண்ணை வளைப்பதற்கு வரிந்து கட்டினர். வாளென்றனர், வேலென்றனர், போரென்றனர்; புகழ்ந்தனர்; போற்றினர்; புரந்தனர்; பாடல் புனைந்தனர்; அதுவே 'புறம்' என்றாயிற்று; புறம் புறம்பானது அகம் ஆயிற்று. அக் காலத்தில் அகம், புறம் என்னும் இலக்கிய வகைப்பாடு இரண்டு. இவற்றை இயற்றுவதே பாட்டு என இலக்கியம் இருந்த நிலை.

யார் யாரோ, எவ்வெப்போதோ பாடிய பாடல்கள் வாய்மொழி என்றாலும் வரையப்பட்டமையால்தாம் வாழ்கின்றன. இரைந்து சிதறிய முத்துகளை எழிலுறச் சேர்த்து மாலையாக்குவது போலப் பரவிக் கிடந்த பாடல்களைத் தொகுத்துப் பனுவல் ஆக்கினர்.

நானூறு என்னும் எண்ணில் பல நற்றொகுப்புகள். அகநானூறு, புறநானூறு, நற்றிணை நானூறு, குறுந்தொகை நானூறு, என எட்டுத்தொகையுள் செம்பாதி இவ் வகையின; வனப்பின. நானூறு என்பது அடுத்த காலத்திலும் பழமொழி நானூறு, நாலடி

நானூறு, என வளர்ந்தது. மரபைப் போற்றும் மாண்பினர் பழங்காலப் பாவலரும் தொகுப்பாளரும்!

மரபு வளர்ப்பதில் மனம் செலுத்தி மட்டற்ற மகிழ்வு கொள்பவர் புலவர் மு குப்புசாமி அவர்கள். ஆழ்ந்த புலமையர், அகன்ற பேரறிவினர், அனைத்துலகும் சுழன்றவர், அருந்தமிழ் ஆற்றலர், புகழுடைப் பொறியாளர், புறம்போற்றா நெறியாளர், பொதிகைத் தமிழின் புரவலர் எனப் பலவாறு பாராட்டிப் போற்றிப் பகர்ந்தார் என் அருமை நண்பர் அருந்தமிழ் ஆர்வலர் பெருஞ்சைவ அறிவினர் திரு மு கந்தசாமி அவர்கள். சைவ நெறியே சாகாநெறி எனச் சாற்றுபவர் இவர். அமைதியை ஆக்கும் நெறி எனச் சாதிப்பவர். அறிஞர் குப்புசாமி அவர்களின் அருந்தமிழ் ஆற்றலும் சைவம் ஏற்றலும் இவர் அகம் கவர்ந்தன. பல்லாண்டுகட்குமுன் யாத்துப் பாதுகாத்து வைத்திருந்த அவருடைய பாடல் தொகுதியைப் பதிப்பிக்கும் அரியர் கந்தசாமி அவர்களின் பேரார்வத்தில் பிறந்துள்ளது இப் பெருமைமிகு நூல்!

இறைவனை அடைதல் எளிதன்று; அரிதினும் அரிது என அச்சுறுத்துவர். வாடி வதங்கி நாடி தளர்ந்து வணங்கி வழிபட்டால்தான் காணுதல் இயலும் எனக் கட்டுரைப்பர். ஆனால் தொண்டிலே துலங்குபவர், அன்பிலே தோன்றுபவர், இரக்கத்தில் இருப்பவர், ஏழையின் சிரிப்பில் தெரிபவர் எனப் பலவாறு விளக்கங்கள் பகர்வோரும் பலர்.

கடுநடை நடந்தும் கால்கள் நலிந்தும் என்பாய் ஊர்ந்தும் கயிலாய இருக்கைக் கடவுளைக் காணுதல் இயலாமை என்பதனை ஏற்றவர் போலும் அறிஞர் குப்புசாமி அவர்கள். கடிதினும் கடுமையைக் கையாளுதலே காணும் நெறி எனக் கண்டார் போலும்; **அறம் நானூறு** என்னும் அருள்நெறி அகவல் ஆம் இந்நூலை ஆக்கியுள்ளார்.

சிவநெறியே செந்நெறி, மற்றவை சிறுநெறி என்று சிந்திப்போர் உளர். ஆயினும், எல்லா நெறியும் இறைநெறியே என இயைந்தவர் பலர். அருள் நெறியும் அமைதியும் மட்டுமே நல்வாழ்க்கைக்கு அடிப்படை என நவிலும் அறிஞர் குப்புசாமி அவர்கள் அதற்குச் சிவநெறிச் செய்திகளையே தேர்ந்தெடுக்கின்றார்.

சிவனுக்கும் முருகனுக்கும் செப்பியுள்ள திறங்கள் பல்லோரும் ஏற்கெனவே பாடிப் பராவியவை. வாழும் கடவுளர் எனின்

வளர்ந்துள்ள பேரருள் நிகழ்வுகளை வரைதல் வேண்டும். புதிது புதிதாகப் புரந்தருளும் செய்திகள் இருக்குமானால் அவற்றைப் புனையும் போதுதான் புத்துணர்ச்சிக் கொள்வர்.

தன்னினும் மேலானவன் தலைவன் என்பது சாற்றாமலே சாலும். அத்தலைவனை வணங்கலும் வழிபடலும் வாழ்த்தலும் வாயாரப் புகழ்தலும் வழிவழி மரபு. அதனை வழுவாது வழுத்துவன இப்பாடல்கள். தனிமனிதன் உணர்வுக்குத் தடையில்லை. கட்டற்ற மனத்திற்கு இதுவே கட்டு என்று கருதுவோர் உரிமைக்குக் காப்புண்டு. எனவே அன்பே சிவம், அறிவே சிவம், அருளே சிவம், அறமே சிவம், அனைத்தும் சிவம் என அறிந்தாற்போல் அகவுவோர் சிவநெறிச் செம்மல்கள். ஆனால், சிவம் செம்மைத் தவம், நேரிய வாழ்வு நெறி. எனவே முழுமுதற் கடவுள் முக்கண்ணன் என்பதை முற்றும் ஏற்றவர் புலவர் குப்புசாமி அவர்கள். உணர்ச்சி மோதும் அவர் உள்ளத்துப் பிறந்த அனுபவ உண்மைகளில் சிவநெறியாளர் திளைக்கலாம்.

தேவாரம் திருவாசகம் ஆகிய இசைப்பாடல்களுக்கு முந்திய ஆசிரியப் பாக்களால் ஆனது இந்நூல்! ஆயினும் மெல்லிசைபோல் மேவுகிறது நெஞ்சை! ஒவ்வொரு பாட்டிற்கும் உள்ள உயிர்ப்பான தலைப்பு உறுபொருள் உணர்த்துவதாம்.

ஆற்றோட்டை போல் அமைந்த பாடல்கள் இப்பனுவலை அணிசெய்கின்றன.

தென்னர் நாயகன் தீந்தமிழ் மேயவன்
நல்லோர் தலைவன் நோயுளார் வாயவன்
தூயோற் கீயும் தொழிற்றுறை போயவன்
உள்ளக நைவார்க் குறுதுணை ஆயவன்
முன்னோ னெவர்க்கும் உலகெலாம் தாயவன்
மாயவன் மலரோன் ஓராப் பேரெரி
ஏயநின் றெல்லா வுயிர்க்கும்
தாயவன் தந்தை தானவன் றானே

- பாட்டு 88

ஏலவே கேட்ட எழில்மிகு சொற்கள் பல இன்னொலி எழுப்புதலை இப்பாடலில் காணலாம்.

மாசில் காட்சி மறையோய் போற்றி
தூசறு உள்ளத் தலைவ போற்றி
தேசுறு தில்லைத் தேவே போற்றி
ஏசறு நிலையின் எழிலோய் போற்றி
காசறு பண்பின் கடவுள் போற்றி
பேசாச் சிறப்பி னல்லோய்
அருள்நெறி யப்பா போற்றி போற்றியே!

- பாட்டு 40

மாசில், காசறு, தொய்யில் உலகம், சிவணிய, பெருங்கேழாகம், அரிமதர் மழைக்கண்கதுமென, வரூஉம், கவாஅன், செயிர்தீர், ஓம்புமதி, நளியிரும், அடுக்கம், கல்பொர முதலாய சொற்கள் பழங்காலப் பெட்டகங்களில் பரவியவை. பாவலர் குப்புசாமி அவர்களின் பழந்தமிழ் அறிவு இவ்வாறு பல பாடல்களில் பதிந்துள்ளது.

அரசியல் தில்லியை அருள்நெறித் தில்லி அறநெறித் தில்லியாக ஆங்காங்கே பாடுகின்றார் புலவர். எந்நாட்டவர்க்கும் இறைவன் என்பரால் இந்த எண்ணம் இனிதே இவரிடம் எழுந்துள்ளது. முருகன் மீதும் முற்றாக் காதல் முழுமையாக முகிழ்ந்துள்ளது இவரிடம்! தந்தையும் மகனுமே சால்புளார் எனச் சிந்தையும் செயலுமாய் உள்ளார் இவர். அவரையும் பாடி இவரையும் தேடி அருள் மழை பொழிகின்றார். மனம் எங்கே பதிகின்றதோ அங்கே மலர்கின்றது - பாவலர் குப்புசாமி பகர்வதுபோல் பரம்பொருள் ஆயினும் பகுத்தறிவு ஆயினும் அமைதிக்கு ஆவன என அகங் களிக்கலாம்.

உருக்கம், இரக்கம், கிறக்கம் சுரக்கும் ஊற்றுணர்வை இப்பாடல்கள் ஒன்றிப் பாடினால் உருவாக்குவன. காலத்திற்குஏற்பக் கவிதை யாத்தல்பற்றிக் கவலையுறாமல் கடுநடையே ஆயினும் தொடுநடை எனத் துணிந்தவர் பாவலர் குப்புசாமி; அதனை உணர்ந்தவர் சிவநெறியர் கந்தசாமி. இவ்விரு சாமிகளையும் பாராட்டுதல் இனிது. வாழ்க தமிழ்; வளர்க தொண்டு.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அறம் நானூறு

அருள் நெறி அகவல்

முகவுரை

பண்டைநாட் சங்கத்தொகைநூலாய புறநானூற்றின்கண் ஒருசில பாக்களே இறையருண் மாட்சியினை விதந்தோதி அருள்நெறிவழிபாடு வீடுபேறு இவற்றைக்குறித்து வருவனவாயிருத்தலும் பெரும்பகுதியுள் உலகியல்வழக்கச்செய்தி, அவற்றுளும் புலாலுண்ணல் கள்ளருந்தல் போர்க்களவென்றி வெறியாட்டு இவைபோல்வனவே பெரிதும் பரந்து கிடத்தலும் காண்கிறோம். பிறசங்கப் பாக்களுள் திருமுருகாற்றுப்படை தவிர ஏனைய பலவும் (நற்றிணை குறுந்தொகை போல்வன) இப்பெற்றியன வேயாயிருக்குமாறும் தெரிந்துள்ளோம். எனவே காலப் போக்கில் நாகரிகஉணர்வு மேம்பட்டும், மக்களிடையே அருளொழுக்கம்சிறந்து, பூசல்கள்குறைந்தும் வரவேண்டுமென விழையும் இற்றை நாளில், புறநானூறு போன்ற தொகை நூல்கள் இலக்கியவளன் ஒன்றிற்காக மட்டுமே படிக்கற்பாலனவே யன்றி, இறையறிவுப் பெருக்கத்திற்கு வெகுவாய்ப்பயன்படாவகையில் நிற்குமாறுகாண்டு மாகலான், இங்ஙனமல்லாது இலக்கியச்செறிவோடு வீடுபேற்றுநெறி விளக்கமும் ஒருங்கிணைந்த பாடல்கள் பெருமளவில் இந்நிலவுலகின்கண் வழங்கிவரல்வேண்டும் என்று பலரும் அவாவுதல் இயல்பே யன்றோ. சங்ககாலத்தின் பின்னர், தேவாரம், திருவாசகம் இன்னும்பல அரிய சைவநெறி நூல்கள் வெகுவாக மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தமையே நாளாவட்டத்தில் நற்பண்பு தொடர்ச்சியாக வளர்ந்துவரும் திறத்திற்குச் சான்று பகர்வ தாயிற்று.

அகவற் பாக்கள் சங்ககாலத்தில் பெரிதும் வழங்கிவந்தமை யாதினாலோ வெனின் இவ்வகை யாப்பில் கருத்துத் தடை சிறிதும் இல்லாது எளிதாக ஆற்றொழுக்குப் போல் (கடுமையான இலக்கண வரையீடின்றி) செய்யுள் இயற்றல் கூடும் என்பது நுதலியேஎனக்

கோடலாகும்.சுருங்கிய சொற்களால் பெருவிளக்கங்கள் அமையப்பெற்ற இவ்வாசிரியப் பாக்கள் அடிவரையின்றி மிகநீண்டு விளங்கிவருதலும் காண்கின்றோம். திருஞானசம்பந்தப்பெருமான் அவர்கள் அருளியுள்ள திருவெழு கூற்றிருக்கையும், திருவாசகப் பகுதியில் காணும் அகவற்பாக்களும் சீரிய சிவநெறிச் செந்தமிழ்ப் பாடல்களாக மிளிர்வன வாயின. சங்கச் சான்றோருள் பாலைக்கௌதமனார், கோவூர்கிழார், முடிநாகராயர், கணியன் பூங்குன்றனார் போன்ற பல அறநெறிப் பெரியோர்கள் சைவநெறிக் குறிப்பினை ஆங்காங்கே விளக்கியும் பேரின்பநிலை இதுவிது எனச்சுட்டியும் பாடிச்சென்றுள்ளவாறு தெரிந்துள்ளோமாயினும், நானூறு பாடல்களில் மிகச்சிலவே இத்தகையவாதல் கண்கூடு. மிகப்பல இறைநெறிப் பாக்கள் மறைந்து பட்டன என்பது, இவற்றுள் காணப்படும் முத்தீ வேள்வி, ஆனிலை யுலகம், நீல மணிமிடற் றொருவன் போன்ற சொல்லாட்சி ஆங்காங்கே வழங்கு வதிலிருந்து உளவினால் உய்த்து உணரக் கிடக்கின்றது.

பழங்கால இலக்கியவழக்காகிய போர்க்களவென்றிச் சிறப்புரை இற்றைநாட் சிறப்புவாழ்க்கைக்கு உதவாதெனும் உணர்வு மேலிட்டு அருள்நெறியும் அமைதியுமே நல்வாழ்க்கைக்கு அடிப்படை என நாமனைவரும்தெரிந்து தெளிந்தோமாகலின் சங்கப்பாக்கள் போன்ற அகவல் இலக்கியம் உருவாக்கி அவற்றுள் இறையருளால் இதுவரை நமக்குப் பல சான்றோர் வாயிலாகத் தெரிவிக்கப் பெற்றுள்ள சிவநெறிச் செய்திகளையெல்லாம் அமைத்துப்பாடுதல் நன்றாகுமெனத் தோன்றியது. இந்நோக்கத்துடன் இதுபோழ்து புதிதாகச் செய்து வெளியிடும் **அறம் நானூறு** என்னும் இந்நூலினைச் சைவமும் தமிழும் விரும்பிப்பேணும் மெய்யன்பர் பலரும் வரவேற்பரெனத் துணியலாயினேன். அனைத்துப் பாடல்களும் பொதுவியல்திணை, இயன்மொழித்துறை என்னும் வகையில் அமைந்துள்ளன. ஆற்றுப்படை, செவியறிவுறூஉ என்னும் துறைப் பாடல்களும் இதனுட் பலவே.

புது தில்லி , 2004 மு.குப்புசாமி

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அறம் நானூறு

அருள் நெறி அகவல்

நாத்தழும் பேறவே ஏத்துகோம் தேத்தமிழ்க்
கூத்தப் பெருமான் கழல்

எல்லா வுயிர்க்கு மிரங்கி யருளாளல்
நல்லாற்றிற் செல்வார் நெறி

இரும்புலி யுரியி னானை
இமயமால் வரையி னானைத்
துரும்பொடு திகழு மெல்லாம்
தோற்றுவித் தியக்கி னானை
அரும்புகழ்த் தமிழாற் சைவ
நெறிவிளக் கேற்றி வைத்த
பெரும்பெயர்ப் புலியூ ரானைப்
பேசிநா னுய்ந்த வாறே

மால்பட் டயனொடு மாலுடன் றோர்கால் மிகத்தளரக்
கால்பட் டயர்ந்தனன் காலனும் கால்விரற் கீழுழந்த
தால்பட் டகந்தையும் தீர்ந்ததே தென்னர்கோன் தூக்கியகைக்
கோல்பட் டழுங்கின கூக்குர லிட்டுயிர்க் கூட்டங்களே

அறம் நானூறு
அருள் நெறி அகவல்

பகுதி - 1

(1)

அலகில் வேட்கை விலகா வுலகத்துப்
பலநாட் பழகியும் சீர்பல வகுத்தும்
தலைநா ளன்ன நிலைமகிழ்ந் தூக்கும்
வென்வேற் கொற்றவன் வழங்கிய நலனே
சாலும் சாலுமெனச் சிறத்தல் வேண்டின்
வேறுவே றினத்தர் நாடிகந் தொரீஇக்
கருங்கல் நெடுவரைக் கானதர் மருங்கில்
கோடுயர் அடுக்கம் பலபுறக் கொழிய
மாவின் றியங்கும் தாவி லூர்தியிற்
கால்கிளர்ந் தென்னக் கடுவிசை யேகி
எண்டோள் முக்கணன் இமயக் கவாஅன்
விண்டோய் விழுநக ரென்னக் காண்வர
யாணர்ப் பெருநீர் யமுனையங் கரையகம்
மீமிசைச் சமைத்த கோயில் நண்ணி
ஆலமர் செல்வ அருட்டிரு குமர
அண்டர் நாயக தண்டமிழ்க் கடவுள்
அழகமர் வேலோய் பழையோய் இளையோய்
மடநடை மஞ்ஞை இடனறிந் திரியும்
வடநாட் டேரக வண்மை யோயெனத்
தளரா மாட்சித் தலைவனை யேத்தி
அறநனி சான்ற திறஞ்சால் வாழ்க்கையர்
புறஞ்சொல மாட்டார் பொழுதுவீண் கழியார்
தூசறு காட்சித் தவநெறிப் பெரியோர்
ஈசனுக் கன்பரொடுங் கூடி
மாசில் முருகனைப் பேசினிர் சென்மோ

— தில்லியூராற்றுப்படை 1

(2)

எய்யா நல்லிசைத் தொய்யி லுலகம்

எய்தன் முன்னிய மெய்ம்மறை யாளர்
செய்தவம் காண்டிகு மல்லமோ மைதீர்
எரியுமிழ் அகலத்து விரிசடைக் கோமான்
திரிசடைக் கருளிய தீதறு நெறியும்
தெரியாது பிழைத்த வரிசிலைக் காமன்
எரிபட விழித்தும் இரங்கிய வாற்றொடு
பரியுகந் தேறிப் பாண்டியற் களித்த
துரிசறு காட்சியு மேத்திப் பெரிதுகந்து
பொய்யி லுள்ளமொடு போற்றுபு சென்மார்
வையகத் துயிர்க்கெலாம் துணைநாம் காண்கென
ஐயன் புரக்கு மாறுணர்ந் துய்வகை
அருளன்றி யின்மையா னவ்வயி னெழீஇச்
சீரொடு சிவணிய நோன்பு
பாரிடைப் பரந்த நீர்மைத்தா லெனவே

— அருள்வழி உய்தி 2

(3)

இரும்புபழுத் தன்ன பெருங்கே ழாகம்
திருந்திழை யோர்பாற் பொருந்தவு மறுபால்
அரும்புணத் திரியும் சுரும்பிமிர்ந் தாங்கு
பெரும்புகழ்ப் புலியூர் விரும்பிவந் தேத்தும்
துரும்பினே மெம்மையுந் தள்ளா தேற்க
அருந்தவச் செல்வன் ஆல வாயன்
மருந்தா குவனெம் மாற்றரு பிணிக்கும்
நறுந்தாது மலிந்த நாண்மலர்க் கொன்றையன்
பருந்து மோர்கிலாப் பொரியரைக் கோங்கம்
நெருங்கி யோங்கிய நீள்வரை மருங்கில்
பொறித்தேர் நிறுத்திய கல்பொர வெழுந்த
இருங்கடல் இலங்கை வேந்தன்
உரங்கெட இரங்கி வரங்கொடுத் தோனே

— இலங்கைக்கோற் கருளல் 3

(4)

கள்ளயின் றிமிரல் தள்ளாச் சுரும்பின்
மழவ ரலைக்கும் முழைவாய்க் கல்லதர்

காவல் வேண்டிற் படைக்கலங் கொண்மெனக்
குறிஞ்சிக் கிழவன் துணைவகுத் தாங்கு
நரம்பிசைக் கிரங்கிய புறந்தாழ் சடையன்
ஆனாச் சிறுமை அரக்கர் கோற்கும்
வாணாள் தந்த வகையுரைத் தீமே
நீடமைத் தேறல் நிறைய மாந்திக்
காடகந் திரிதரும் கடுவ னேய்ப்பப்
பொல்லா வுலகர் பொய்மயக் கயராது
கொல்லா நெறிகைக் கொண்மா ரோச்சிய
ஓங்குபடை இலங்கை வேந்தற் காண்டிகும்
அரிமதர் மழைக்கண் தெரிவை வாழ்கெனத்
திரிசடைக் கருளிய விரிநூன் மார்பற்குப்
புரிசை மாடம் பீடுகெழ வியற்றி
எரியுகைத் தன்ன மூவிளக் கார
வரிசை பலவும் வகுத்தோன்
துரிசறு நீற்றொடும் துலங்கிய வாறே.

_ இலங்கைக்கோன் மேலது நீறு 4

(5)

வளிநிலை யுழக்கிய நளியிரு மீர்ஞ்சடை
நாற்புறம் புடைப்பினு நல்லோர் மகிழ
ஒளியுமிழ்த்து மிளிரல் தவிராச் சிறப்பின்
அளியன் பெரியன் ஆல வாயன்
பொய்யில் தலைவன் பொன்மலர்ச் சேவடி
எளிதுறற் கேங்கின மாகக் களிமிகத்
துளிதலை பெய்த தூவா முன்றில்
அளற்றிடை யுழந்த குருளையுந் தள்ளான்
கேழற் கீத்தன காண்கென ஞாழல்
துமிதரப் பொதுளிய தெண்ணீர்க் கரைநின்று
நற்றவ முனிவரர் பலருகந் தேத்தி
ஆனிலை யுலகம் சென்மார் வகுத்த
ஆகுதி வேட்டலும் அறிந்த மாறே. அதாஅன்று
வல்வினைத் தொடர்பவம் ஒல்லையிற் கழன்றற
எல்லா வுயிர்க்கும் இனிய செய்கெனும்
பொன்செறி அருள்வழக் கல்லது
நன்னெறி பிறவெதும் நாமறி கிலமே

_ அருள் வழக்கே நன்னெறி 5

(6)

ஒலிதிரைப் பௌவத் தலைப் பெதிர்வானாது
புடையிரிந் தொல்கிய மரக்கல னேய்ப்ப
வல்வினைப் பவஞ்செறி அல்லலின் இளைக்கும்
மல்லன் மாநில மயக்ககன் றொரீஇத்
தில்லையங் கூத்தன் நல்லடி சென்மார்
செய்தகு நல்லற மிரண்டே யவைமுறை
விரிசடைப் பெரியோன் வண்மைக் கவன்புகழ்
நாத்தழும் பேற நின்றுநின் றேத்தலும்
ஆருயிர்க் கெல்லா மிரங்கி
அருள்வழிப் படலுமென் றறிந்த மாறே
_ அறம் இரண்டே 6

(7)

அறநூல் தெரிப்பன சொல்கெனிற் கேண்மோ
வல்வினைத் தொடர்பாற் பவத்தொட ரென்றலும்
அவ்வினை தானும் மூன்றெனக் காணலும்
முன்வினை யெச்சம் இற்றைவினைப் பயனென
முத்திற வுழல்வதும் நிரல்பட லாயின்
மாயையுங் கன்மமும் கழீஇ மேலோன்
அருள்வீழ் வமைத்தலும் காட்டுப
பொருள்செறி சிவநெறிப் புலவன் மாரே
_ அருள் வீழ்ச்சி 7

(8)

வயினெழுந் தார்க்கும் வள்வார்த் தெண்கிணை
துயிலெழுப் புற்ற நவ்வி வெருவலின்
இனம்பயிர் கானதர் அலைஇய முனிவரர்
துயிலா நோன்பின் தவநெறி பயிற்றித்
தொய்யில் உலகம் மெய்யுறக் காட்டுபு
தொன்னூல் விரித்தன பலவே அவற்றுள்
இறையுயிர் தளையென் றெண்ணிய மூன்றும்
நிலைஇய பெற்றிய வாகியெஞ் ஞான்றும்
முந்துநாட் டொடங்கி முத்திக் காலையும்

உள்பொரு ளென்னலும் காண்கம்
ஒள்ளிய சிவநெறித் தெள்ளி யோரே
_ முப்பொருளுண்மை 8

(9)

கழன்றிரி யுடலங் கழலா துகைக்க
அழலுரு எந்தைதாள் தொழுதேத் துகெனப்
பழமறை அருளும் பாங்குரைத் தீமே
கழலா வுடலொடுங் கடவுட் சேர்மார்
ஆணவங் கழன்ற நீணெறி யாளர்
உழலா துயிர்த்திரட் குறுதுணை யாகி
மாயையொடு வல்வினை சாய்தலின் உய்ந்த
வழக்குரை காண்டிகு மாக மிழற்றிய
தொன்னூல் விளக்கத்துத் தூசறு காட்சிச்
சிவவொளிச் சித்தர் வாழ்க
அவரடிக் கன்பரும் வாழ்கவா லினிதே
_ கழலா உடலம் 9

(10)

மின்சாய் வன்ன பொன்றயங் கவிர்சடை
நாற்புறஞ் சுழல ஏற்றுமிசை விரைவோன்
நுவலா மொய்ம்பிற் சிவணிய காணூஉ
அருந்தவச் செல்வற் காளா யினமால்
இனைய லோம்புமதி மனனே முனைநாள்
பெருந்தவ மியற்றியும் திருந்தார் மூவெயில்
வியனகர்க் கோட்டம் பெயர வாங்கி
ஏவல் கொண்ட எய்யாச் சிறப்பொடு
பிளிற்றெழு களிற்றி னுரிவை கழற்றி
வெளியிடைப் போந்த விளம்பா வீரமும்
மாயோன் மயங்கிய ஞான்றின் தீயாய்ச்
சேணெழ நின்ற செப்பருந் திறமும்
சடையிடைக் கரந்த சிறுவெண் டிங்கள்
விண்ணிழி யாற்றொடும் துண்ணென நிறீஇ
மண்ணகர் தேவர் மயக்கற நஞ்செடுத்
தெண்ணா தருந்திய எழில்சேர் மிடறும்
இன்னன பலவும் ஏத்திச் சென்மெனப்

பொன்செறி புலியூர் பாட
என்னோ நோற்றதிந் நன்னிலந் தானே
_ வீரச் செயலேத்தல் 10

(11)

காட்டகம் திரிதரும் கலிமா வுரிவை
வேட்டரைக் கசைத்த வியன்தில்லைக் கூத்த
வீட்டகம் கூட வழியருள்
நாட்டகத் தோமெலாம் நயந்திட்ட வாறே
_ வீடுபேறு வேண்டல் 11

(12)

மட்டார் குழலி மலைமகள் பாகர்
எட்டா நலம்பல எட்டுவிப் பாரவர்
சுட்டாப் பெருமை சிவணிய
பட்டி சுரத்தெம் பசுபதி யாரே
_ சுட்டாப் பெருமையர் 12

(13)

எரியுகைத் தன்ன விரிசடைப் பெரியோன்
பரியுகந் தேறிய பாங்கும் தெரியிழை
திரிசடைக் கருளிய தீதறு நெறியும்
தெரியாது பிழைத்த வரிசிலைக் காமன்
முறிந்துபட விழித்த முக்கட் பொறியும்
புரிசை மூவர்ப் பொடித்தும் புரந்த
வரிசை பலவும் வாழ்த்துகம் வம்மோ
வரிவளை யம்மை பாகன்
குரிசில் ஆலவாய்க் குழகனா மெனவே
_ இறை வாழ்த்து 13

(14)

சிறப்பளிப் பாரவர் சிற்றம் பலவர்
பிறப்பறுப் பாரவர் பேரூர்த் தலைவர்
இறப்பொழிப் பாரவர் என்ப
சிற்றுயிர் போற்றும் சிவநெறி யார்க்கே
_ இறப்பொழித்தல் 14

(15)

விடையுகைத் தருள எழுந்த ஞான்றும்
துடியிடை யொருபான் மகிழுங் கூத்தன்
படைமழு வேந்தினும் சடைவிரித் தாடினும்
அருள்நெறி பயிற்று மடியார்ப் புரக்கும்
மடைமலி நாரை நன்னகர்
நடஞ்செயு நம்பனென் னெஞ்சகத் தானே

_ அடியார்ப்புரத்தல் 15

(16)

நடுக்குற் றென்னுளம் நையுங் காலை
உடுக்கை யாட்டி ஒய்யென வரூஉம்
இடுக்கண் நீக்கிக் காக்கும்
தடக்கை நான்குடைத் தாழ்சடை யானே

_ இடுக்கண்நீக்கல் 16

(17)

வெற்றி யேதரும் கற்றை வார்சடை
ஒற்றி யூரனைப் பற்று வாரொடும்
சுற்ற மாகுதி ரென்ப
நற்றவச் சிவநெறி நன்கறிந் தோரே

_ அடியார்சுற்றம் 17

(18)

நள்ளி ராவினும் துள்ளி யாடுவார்
கள்ள மில்லவர் கருத்து ளோங்குவார்
வெள்ள மார்சடை யுள்கின்
ஒள்ளிய நெறிகண் டுய்வகை யாமே

_ உய்வகையாமாறு 18

(19)

கோள்வினை யான்மிகக் குலைந்துநைந் தேனை
ஆள்வினை யூக்கிய அவிர்சடைப் பெரியோன்
நாட்பட்ட போதும் மறவான்
ஆட்பட்டு நானிங் கமர்ந்திட்ட வாறே

_ நாட்படினும்மறவான் 19

(20)

கால னார்விழக் காலுந் தூக்கினான்
சால நீள்வரை மேல னேயென
நீல கண்டனை யேத்தி
ஓல மிடுபவர்க் குயர்வா கும்மே

_ உயர்நிலை ஓலம் 20

(21)

விடைமிசை யேறிய சடைய னார்கழல்
கடைய னேனையும் காக்கும் பரிசொடு
கால்விர லூன்றிக் கடுந்திற லரக்கனை
மால்வரை யடர்த்த வீரமும்
நூல்வழி யெங்ஙன் நிகழ்த்தவல் லேனே

_ நூலால் நுவலொணான் 21

(22)

நானா வுயிர்க்கும் நலிவகற் றேனாய்
நானா யிரவகை நைந்தேற் கிரங்கி
ஆனான் துணையெனக் கண்ணலென் றோராது
வானோர் வணங்கும் விரிசடை யப்பனை
ஏனோ முனைநாள் ஏத்தா திருந்தேன்
தேனா ரமுதனைத் தேரார்
ஆனாத் துயரா னலமந்த வாறே

_ ஏத்தார் அலமரல் 22

(23)

உள்ளுறு கருவியொடு புறக்கருவி சிவணிய
உடலகத் திருப்பஃ தோருயிரே போல்
மட்பொலி யுலகுக் கெல்லா முற்பட
ஒன்றுள ததன்றிறம் கருவிகட் கெட்டா
உருவும் திரிபும் உறாஅது யாதும்
பற்றுக் கோடில தாகிச் சுட்டிகந்து
கேடில் மெய்ப்பொருள் என்ன ஈறின்றிப்
பேறறி வாற்றலி னோங்கும்
யாங்ஙனும் நிறைந்து நீங்காப் பொருளே

_முதல்வன் உண்மை 23

(24)

அளக்கலா அளவினன் துளக்கலா நிலையோன்
தோற்றமும் தொலைவும் இல்லாத் தலைவற்குப்
பேரெது சாற்றினும் ஆற்றா தாகலின்
எண்வகைப் பண்புதெரிந் தவ்வகை எண்ணுகம்
முற்று மறிவோன் முடிவி லின்பினன்
பற்றறு வியல்பினன் பேரருட் செல்வன்
தன்வய நிற்போன் தீர்விலா வாற்றலொடு
இயற்கை உணர்வினன் உடல்தூ யோனென
இத்திறம் அவன்புகழ் பாடி
மெய்த்தவத் தாரெலாம் மகிழ்ந்திட்ட வாறே
_எண்வகைப் பண்பு 24

(25)

சிவத்தொடு சிவணிய சீவான் மாநிலை
சூடும் நெருப்புமெனச் சொல்லுமா றுளதால்
நெருப்பிடை ஒளிபோல் மாயையா மென்குப
நெருப்பினுக் குள்ளும் புறத்தும் நீக்கற
இருக்கும் நிறைபொருள் சூடெனும் அருவம்
சூடிலை யாயின் தோன்றா
நெருப்பும் ஒளியுமென நிறுவிய வாறே
_சிவனும் சீவனும் 25

(26)

பொதுமன் றாடும் புரிசடை வேந்தன்
கதுமென வரூஉம் கடுவினை கழற்றும்
புதிய மல்லேம் பண்டே யடியோம்
வினைவயின் திரிந்து திருந்தா வாழ்க்கைப்
பெருந்துய ரான்மிக வருந்திய ஞான்றை
அருந்தவ முனியெனத் தருந்தன் றாளே
செந்தமிழ்ச் சிவநெறி பாடி
முந்துவினை களைதன் முன்னி யோர்க்கே
_செந்தமிழ்ச் சிவநெறி 26

(27)

தேங்கமழ் புரிசடைத் தென்றிசை நல்லோன்
யாங்கணும் நிறைந்த ஓங்கெழிற் பெரியோன்
தீங்கெதும் வாரா துலகங் காக்கும்
வீங்கிள வேனிலும் விரலிமிர் யாழும்
மாலைத் திங்களும் மென்பூங் காற்றுமெனப்
பேரின் பருளும் பெற்றி
யாரே அறிவரிப் பாரகத் தானே
_வீங்கிளவேனில் 27

(28)

உடலுங் கருவியும் சாரா வுழல்வும்
உடலொடு கருவி துய்த்திரி உழல்வுமென
இருவகை யானும் இளைப்பன உயிரெலாம்
அறிவிலா தாணவ இருட்புலம் புறல்கெட
மாயையும் வினையும் தொடர்பறுத் தாண்டவன்
உயிர்சிறிது பயிற்றல் உயர்நிலை யெனினும்
அந்நிலை மருங்கும் ஆணவந் தளையே
ஆணவஞ் சாய்த்துத் தூய மேனிலை
கூட்டுதல் ஆமால் வீட்டுநெறி யென்குப
மொழிந்தவிம் மூவகை நிலையும்
பழந்தமிழ்ச் சான்றோர் பகுத்தறிந் தாரே
_ ஆணவஞ்சாய மேனிலைகூடல் 28

(29)

படைப்பே புரத்தல் துடைத்லென் றிவற்றொடு
மறைத்தலும் மறைக்கும் அருள்வழங்கு நல்லோன்
அயன்அரி அரற்கும் தொழில்வரை யறுக்கும்
உயிர்க்கறி யாதொளித் துயிர்வினை துய்த்தபின்
உரிய காலையிற் சொரியுமா லருளே
ஐந்தொழி லிதுவென் றோதுப
பைந்தமிழ்ச் சிவநெறிப் புலவன் மாரே
_ ஐந்தொழில் 29

(30)

சான்றோர் தந்த சிவநெறி கேட்பின்
உலகியல் வழக்கி னுயிர்கட் கெல்லாம்
நல்லது செய்யா தொழியினு மவைகட்
கல்லது பயிற்றல் ஆகா தெனலே
முதல்வன் தான்செய் மன்னுயிர் யாவும்
முட்டின்றி வாழ்தல் முன்னி யோனே, ஆகலின்
முட்டுற வவைகட் குன்னலும் ஒட்டாது
பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புகென
வகுத்தனர் நல்லோர் வீடுபெறற் பொருட்டே

_ சிவநெறி 30

(31)

பண்டு வானவர்க் காக மால்விடம்
உண்ட கண்டனை ஒப்பி லப்பனை
விண்டுவும் காணா விறலனை
அண்டர் தலைவனை அரற்று வாமரோ

_ அண்டர் தலைவன் 31

(32)

ஒன்றாய் வேறாய் உடனாய் நிற்கும்
கன்றா வன்ன பொன்றலில் அருளோன்
உடலகத் துயிர்போ லொன்றி யுணர்த்தியும்
கட்கொளிக் கதிரெனக் காட்டிவே றாகியும்
அகர வுயிர்போல் உடனிருந் தியக்கியும்
கலத்தல் பண்பு தொழிற்பா டென்றிவை
முத்திறத் தானும் விரைஇ முன்னோன்
உயிரொடு பயிலக் காண்கம்
செயிர்தீர் புலவர் செப்பிய வாறே

_ முத்திறம் நிற்றல் 32

(33)

வாரீர் வடபான் மால்வரைக் கோட்டம்
சேரீர் அருள்நெறிச் சீலரொடு மரீஇத்
தேரீர் பெருமான் துணைக் கழல்
நேரீர் இனிப்பிற வாப்பெரு நிலையே

_ அருள்நெறி 33

(34)

புறம்பயத் தெழுந்த திறம்பா நல்லிசைப்
பேரருட் கடவுட் சீருகந் தேத்தி
வடபுலம் விரைஇய வண்டமிழ்ப் புலவோர்
தடவரை இமயக் கவாஅ னாங்கண்
சிவநடம் காணூஉச் செப்பிய உரைக்குச்
செய்யுமோர் கைம்மா றறியேம்
மெய்யுணர் வூக்கிய முறைமை யானே
_ சிவநடம் கண்டார் உரை 34

(35)

முன்செய் வல்வினைக் கென்செய் வாமெனக்
கொன்வயங் கிளைத்த மக்கட் கெல்லாம்
உலையா நோன்பின் நிலைஇ உலகிடைப்
பல்லுயி ரோம்பும் பாங்குகைக் கொண்மெனத்
தென்றிசை நல்லோர் வழிதெரித் தனரே
மின்றயங் கவிர்சடை பேணி
நின்றவ ரெல்லாம் நலம்பெற்ற வாறே
_ நல்லோர் வழி 35

(36)

பொல்லா வுலகில் பொய்ம்மலி கொடுநீர்ப்
பல்லா யிரவர் பழியுறக் கண்டும்
நல்லா றுணரா திரிதல் நன்றோ
பல்பிறவி யிகந்து மன்பதைக் கூட்டால்
இன்னா தினிய தெதுவென வகுக்கும்
நுண்ணுணர் வுற்றதும் கோன்னிலை கொல்லோ
எவ்வெவர் தீங்கும் கவ்வையென வகற்றிச்
செம்பொருட் காளாய் நிற்பார்
ஆருயிர்க் கிரங்குவர் வீடுபெறு மாறே
_ ஆருயிர்க்கிரங்கல் 36

(37)

தில்லையுட் சென்மினோ தில்லையுட் சென்மினோ
வல்வினைத் தொடர்பவம் ஒல்லையிற் கழன்றற

எல்லையில் நாடகத் தில்லையுட் சென்மினோ
அளக்கொணாப் பொருளொடு துளக்கறு காட்சியும்
கிளக்க லாகாக் கைவண் மையுமெனப்
பேரருட் சிவன்புகழ் பேசிநின் றூக்கி
ஆருயிர்க் கெல்லா மன்பு
நேருறப் பயிற்றல் நல்லோர்க்குத் தகுமே

_ தில்லை சேறல் 37

(38)

நால்வகை நெறியும் நிரைநிரை கிளப்பின்
உழவா ரப்பணி செய்துடல் இடிற்பின்
நாண்மலர்ப் பணிசெயப் பிறந்ததன் மேலோர்
செறிவியல் நிறைவுற ஏகலு நிறையின்
அறிவொளி நல்லுடல் மேவிப் பிறப்பர்
பிறந்தார ரயினும் அவருட் பலருடல்
எரிகற் பூர மொக்க
அருட்கலப் புறுதலும் அறிந்த மாறே

_ நால்வகை நெறி 38

(39)

கூற்றம் குமைத்த குரைகழற் பெருமான்
ஆற்றல் அளத்தல் ஆமோ அதனால்
மாற்றரு மொய்ம்பின் மறலிவா ராது
நோற்பார் திறனே நவிலக் கேண்மோ
வயின்வயின் எழுந்த வம்ப வெவ்வினை
செம்பொருட் காட்படு வார்தமைச் சேரா
அருளால் இருவினை மாயையோ டகல
உயர்நெறிக் கேகுத லல்லது
துயர்நர கில்லையாம் தண்ணளி யார்க்கே

_ வினைசேரா வழி 39

(40)

மாசில் காட்சி மறையோய் போற்றி
தூசறு உள்ளத் தலைவ போற்றி
தேசுறு தில்லைத் தேவே போற்றி
ஏசறு நிலையின் எழிலோய் போற்றி

காசறு பண்பின் கடவுள் போற்றி
பேசாச் சிறப்பி னல்லோய்
அருள்நெறி யப்பா போற்றி போற்றியே
_ போற்றி இசைத்தல் 40

(41)

அளறே கொல்லோ ஆறே கொல்லோ
களரே கொல்லோ கானகந் தான்கொலோ
உளங்கனி வின்மையால் உடல்வீழ் வஞ்சித்
தளர்வேன் சாய்விடம் யாண்டைய தாமோ
சாய்விடம் ஒழிமார் சாவிறந் தோங்கவும்
ஆய்வகை உண்டென் றறிந்தோர் கூறுப
அருள்நெறிக் கூட்டான் மருள்வினை தீர்ந்தற
ஆணவம் அகற்ற லாயின்
நீணெறி சாருமென நிகழ்த்திய வாறே
_ சாவா நிலை 41

(42)

பிறப்பிறப் பற்ற பிஞ்ஞுகற் காளாம்
சிறப்புறப் பெற்ற சிவவொளிச் சித்தர்
அறப்பறை சாற்றி அருள்பெற்ற வாயில்
திறப்புற லாயிற் றென்ப
புறத்துறை நோக்காப் பெருமறை யோரே
_ அறப்பறை 42

(43)

வண்டுலாம் கொன்றை வார்சடை யீசனைப்
பண்டெலாம் தேராது போயின வீணாள்
தண்டுழாய் மலரவன் தாமரை மேலோன்
கண்டிராக் கடவுள் கால காலன்
அண்டர் கோனடிக் கன்றே
எண்டிசை யுலகும் தொண்டா யினவே
_ எண்டிசைத் தொண்டர் 43

(44)

எல்லா வுலகும் இன்புறச் சமைத்த
நவிலாச் சிறப்பின் நீள்சடை வேந்தன்

வாழிய பெரிதென வேத்திச் சென்மார்
புதுநெல் புழுக்கிய நெய்ம்மலி வல்சியொடு
பழம்பல எடுத்துப் பன்மலர் தூஉய்
நற்றமிழ் இசைக்க நலம்பெற் றாரே
உலகியல் வளனிவ் வகைதுய்த் தோர்பின்
வீடுவிழைந் தியற்றிய பீடும் கேண்மோ
உள்ளக நெகிழ உயிர்த்திரட் கிரங்கித்
தெள்ளிதின் நின்ற நல்லோர்
வள்ளியோ ராகிய வழக்கறிந் தீமே
— இசையும் இரக்கமும் 44

(45)

அகத்திற் போற்றியும் புறத்துவழி பட்டும்
இருவகை யானும் முருகற் பேணி
எய்யாப் புகழ்நிலை எய்தினர் பலரே
இருவகை ஒருங்குறல் ஏற்ற மேயெனும்
பெரும்பொருள் விளக்கி யார்க்கென்
கருங்கல் நெஞ்சமும் கனிவா கியதே
— அகவழிபாடும் புறவழிபாடும் 45

(46)

நனிபே சுமினோ நனிபே சுமினோ
பனிமா லிமயப் பொருப்பகத் தானடி
நனவொடு கனவும் நனிபே சுமினோ
தனிவே லவனைத் தணிகா சலனை
முனிவ ரார்பலர் முழங்கிநின் றார்த்துக்
காத்தருள் எமையென வேத்திய பாவிசை
நாத்தழும் புறுமது காண்மோ
தேத்தமிழ் இறைவன் தெளிவித்த வாறே
— தேத்தமிழ் இறைவன் 46

(47)

முன்வினை முடிச்சவிழ்த் துய்தல் முன்னியோர்
பொன்றிகழ் புலியூர் மன்றகம் நாடித்
தென்னகக் கூத்தற்குத் தொண்டா யினரே

தொண்டா கியவர் கண்டபே ரறமும்
பல்லுயிர் ஓம்பிப் பகுத்துண லாமால்
நல்வழி யிதுவே யென்ப
தொல்புகழ்ச் சிவநெறித் தலைமை யோரே
_ முன்வினை முடிச்சவிழ்த்தல் 47

(48)

சிவனே என்பிழை எவையும் பேணா
தெற்புறந் தருமெனப் பொற்பம ரவன்கழல்
போற்றுவன் போற்றிப் பெரியோய் என்குவன்
பவமறுத் தாளும் தவநெறிக் கோவே
அவஞ்செய் திழியுமிவ் வாத னேனையும்
சிவக்கடல். சேர வூக்கிக்
கவற்கடல் போக்கிய கடவுளோ யெனவே
_ கவற்கடல் நீத்தல் 48

(49)

கனிவுசால் கற்பகக் களிறே போற்றி
கற்றை வார்சடைக் கடவுள் போற்றி
வெற்புயர் விறலின் வேல போற்றி
பொற்பமர் தில்லை மன்றுள்
முற்பட நடித்த முனிவ போற்றியே
_ போற்றி இசை 49

(50)

அன்றெனக் கிரங்கிய அருளொளிக் கடவுள்
இன்றுமென் னுள்ளுகந் தருளுவன் மாதோ
என்றுமெற் குறுதுணை யாகிய
மன்றகத் தாடியை முன்மொழிந் தேனே
_ என்றும் துணை 50

(51)

பொறிசிறி தில்லேன் புகலறி யேனே
நெறியறி யேன்மிகத் தளர்வுறு வேனைச்
செறிவருட் குறிப்பால் சேர்த்தியே லுய்வேன்
அறிவரும் பொருளே ஆலவாய்க் கடவுள்

தறியிலாக் களிற்றி னலையும்
சிறியேன் றனக்கும் சிறப்பருள் வாயே
_ தறியிலாக் களிறு 51

(52)

மயலறுத் தாண்ட வயலூர்க் கடவுள்
அயலா னென்றெனைத் தள்ளுங் கொல்லோ
தள்ளா தேற்கும் வள்ளயிற் பெரும்படை
ஒள்ளியோய் முருகவென் றோவா தரற்றித்
தெள்ளியே மாயினேம் தமிழறிந் தேமே
புள்ளியல் கலிமா வுகைக்கும்
துள்ளலின் விரைஇய தவநெறி யானே
_ புள்ளியற்கலிமா 52

(53)

வாணாள் வழிப்பயன் வினவு திராயின்
நீணா கப்பூண் ஆகங் கொண்டான்
தூணா யெரியிற் றுலங்கிய பெரியோன்
பேண தார்க்கும் பேசுநல் லார்க்கும்
தானே முன்னின் றீயும் தண்ணளி
வானோர் தலைவன் வண்டமிழ்க் கடவுள்
ஆணவங் கழற்ற நீளெரி காட்டினன்
ஆணவங் கழன்ற மாணல மன்றே
இறையடி கூட்டும் நெறியென
மறையோர் தெரித்த முறைமை யானே
_ ஆணவம் கழலல் 53

(54)

முதனூல் விரித்த நுதல்விழிப் பெரியோன்
கதுமென வந்தெனைக் கூட்டிய கேண்மோ
வயின்வயின் எழுந்த வம்ப வினையடல்
தாங்க லானாத் தமியனை நோக்குபு
எல்லையில் அருளோன் தில்லையங் கூத்தன்
ஒல்லான் இனியிவன் வல்வினைக் கென்றறிந்
தென்பழ வினையறப் போக்கினன்
பிழைபொறுத் தாண்ட பிஞ்ஞகன் றானே
_ பிழை பொறுத்த பிஞ்ஞகன் 54

(55)

ஆட எடுத்தனன் அம்பலத் தான்கழல்
சூட எடுத்தனன் என்றலை மேலெனப்
பாட எடுத்தனன் பாடாப் பெரும்புகழ்
வேட மெடுத்துரை வழக்கின்
நாட நமக்கருள் கூடிய வாறே

— ஆடும் கழல் 55

(56)

ஐந்தெ ழுத்தினால் ஐயன் சேவடி
நைந்து நாடொறும் நவிற்று வாரவர்
பைந்தமிழ் பாடக் கேட்டிகும்
ஐந்த வித்தவன் அரனே யெனவே

— ஐந்தவித்தான் 56

(57)

அஞ்சி னாலரன் அடிமலர் ஏத்துவார்
அஞ்ச லின்றி யெவ்வுலகும் ஆளுவர்
எஞ்ச லின்றியெவ் வுயிரும் பேணிச்
செஞ்சொ லாளுவார்க் கெல்லாம்
தஞ்ச மாகிய திருநெறி யாரே

— திருநெறித்தஞ்சம் 57

(58)

கந்தனென் றேத்திக் கனிவொடு நாடொறும்
செந்தமி ழாற்சிவ னாரடி போற்றுவார்
முந்துசெய் தீதற வோங்கலான்
வெந்துயர்ப் பவநோய் வீட்டுகிற் பாரே

— சிவனடிச் செந்தமிழ் 58

(59)

படர்சடை மேவிய பால்வெண் ணிலவணி
அடல்விடை யூர்தி அருட்பெரு மான்றனைக்
கடல்விடம் அடக்கிய கடவுளை
நடவரங் ககத்தனை நினையநன் றாமே

— இறைநினைவு 59

(60)

ஐந்தொழில் தலைவர் ஆலவாய்க் கடவுள்
பைந்தமிழ் நல்லிசைப் பாற்பட் டனரே
வைந்நுதி யன்ன அறிவர்
ஐந்தெழுத் தோதி அருள்பெறு மாறே
_ பைந்தமிழ் இசை 60

(61)

காளை யூரும் கண்ணுதற் கடவுள்
நாளை யென்னா தின்னே யருளும்
வேளை யிதுவே வெவ்வினை தீர
வாளை துள்ளு மூரன்
தாளை யேத்தக் காழிநகர் சென்மோ
_ இன்னே அருளும் 61

(62)

எண்ணாப் பெருஞ்சீர் உண்ணின் றூக்குபு
நண்ணாத் திருவடி நண்ணுதற் குறுவழி
தொன்னூல் பயின்றும் கேள்விமிக் கூர்ந்தும்
நுண்ணிய பேசியும் உண்மையறி வானலால்
தெளியகில் லாரெனத் தெரிந்தா மன்றே
தெளிவுறற் பொருட்டிங் குறுதுணை நாடின்
அருள்நெறி ஒன்றே சாலும்
பொருள்தேர் புலவர் பேசிய வாறே
_ உண்மை அறிவு 62

(63)

மணிமிடற் றரவும் அணியா கும்மே
துணிவெண் டிங்களும் ஈர்ஞ்சடைக் கணியே
நான்மறை தெரித்த வான்புகழ்ப் பெரியோற்கு
நாஞ்செய் கைம்மா றெதுந்தெரி கிலமே
எண்ணில் பிறவி இகந்தற மண்ணில்
இத்திறம் ஊக்கி னானை
எத்திற மேத்தினும் இணையா காதே
_ கைம்மா றெதுவோ 63

(64)

நில்லா வுலகிடை நிற்றலெற் கோவெனப்
பல்லோர் பயனுரை புகல்கெனக் கேட்பின்
எல்லா வுயிர்க்கும் இன்புசெய் பெருமான்
பொல்லா ரிணைமலர் போற்றுமிப் பிறவி
நல்லா றன்றோ நானிலத் தார்க்கெலாம்
ஒல்லாப் பிறவி ஒல்லையிற் கழிந்தற
வல்லோன் சேவடி வணங்குதும்
கல்லா னிழலிடைக் காட்டிய குறிப்பே
_ பிறவிப்பயன் 64

(65)

தொல்வினைத் திறலடல் ஒல்லா தெவர்க்குமெனப்
பன்னூல் விரிக்கினும் விரிக்க, நன்னூல்
பிழைசெய் தார்க்கும் பழவினை பாற்றற்
குய்தியுண் டெனலாற் பொய்தீர் புலவன்
பொருளுரை தேர்ந்த பேரறி வாளர்
மிழற்றிய கேட்டிகு மல்லமோ அழற்படு
மெழுகென ஊழ்வலி தீர்த்தன் முன்னியோர்
தாழா துஞற்றும் தரந்தெரிந் தீமே
தாழா துஞற்றுநர் தளர்வில் காட்சியர்
தாழ்சடை விரிபுனல் தில்லையங் கூத்தற்கு
அயரா அன்பின் பெயராது நின்று
தமக்கென வுழலார் பிறவுயிர்க் கிரங்கி
வாழ்வியல் வகுக்க அடங்கும்
ஊழ்த்திற லென்குப உலைவிகந் தோரே
_ ஊழையும் உப்பக்கங்காணல் 65

(66)

அற்றே மற்றே மென்றுளந் துளங்கி
ஆனாத் துயரா னலமந்து தேம்பும்
ஆர்கலி யுலகர்க் கொருதுணை யுண்டே
வற்றா நல்லிசை விரிசடைக் கோமான்
பொற்றாள் இணைமலர் உற்றநந் துணையென

நெஞ்சக நைந்து நெக்குநெக் குருகி
வஞ்சக மின்றியெஞ் ஞான்றும்
அஞ்செழுத் தோதுவார் அஞ்சலில் லாரே
_ அஞ்செழுத்தோதல் 66

(67)

அருளே நந்துணை அருளே நம்முதல்
அருளே பொருளென் றறிந்திசி னோர்வயின்
வல்வினைக் கொடுஞ்சுமை வலிதீர்ந் ததுவே
பொல்லா மாயை பொய்ம்மயக் காணவம்
ஒல்லையிற் கழன்றறத் தில்லை சென்மினோ
தில்லை மன்றுசென் றுய்ந்த
நல்லோர் பலரவர் நமதகத் தாரே
_ வினைவலி தீரல் 67

(68)

பாம்பதிர வெறிந்த தாம்பவிழ் தடியும்
அருட்புறம் பேயெனல் கடுப்பத் தெருணின்று
முன்செய் வினைத்திறல் முறிமா ரூக்குபு
பல்வகைச் சில்பலி தூஉய் ஒல்லெனும்
ஆர்ப்புடை விழவின் பாறப்பட் டெழூஉம்
கொன்னீர் மரபும் சாலாது மன்னோ
வினைதாக் கொருவுதல் நினைஇய நல்லோர்
மெய்ம்மறை யோர்பால் உய்தி காணூஉ
எல்லா வுயிர்க்கு மிரங்கிய நிலையிற்
செம்பொருட் சிவனார்க் காளாய்த்
தம்பொருள் பேணும் தலைமை யோரே
_ வினைதெறல் 68

(69)

நில்லா வுலகை நிலைசெய் கோமெனப்
பல்கா லூக்கியும் பயன்றெரி கிலரே
கொல்லா நெறியே கடவுட் கூட்டெனப்
பேரருட் செல்வன் படைத்த வாருயிர்க்
கின்னா தவிர்த்தலும் இனிய செய்தலும்

மேலோர் நிலைநெறி யென்குப
நாலா வகையான் நலம்தெரிந் தோரே
_ மேலோர்நிலை 69

(70)

வயின்வயின் உழந்த வல்வினைப் பவநோய்
ஓய்ந்தறன் முன்னியோர்க் குரைப்பதொன் றுண்டே
எல்லா வுயிர்க்கும் ஏமம் செய்வோன்
தில்லை நல்லூ ராடும் தேவன்
ஆருயிர்க் கெவர்வந் தருந்துணை செயினும்
நேருகந் தவர்தமை ஆட்கொள் குவனே
உயிர்த்திறம் பேணா துழலும் கொள்கையர்
எவரா யினுமவர் தவறுடை யோரே
பவச்சுழல் பாற்றுநல் லோர்க்குத்
தவமெனப் படுவது தண்ணளி யாமே
_ தண்ணளியே தவம் 70

(71)

நாற்படை யுழக்கிய வேற்படைப் பெரியோன்
கூற்றற வெருட்டல் கேட்குதி ராயின்
அலகில் எந்தை மலரடி யிருக்கையுள்
முன்புபோல் நிலைத்தல் முன்னிய நல்லோர்
அறிவொளிப் பெருக்கத் துரைத்தன கேண்மோ
சாவா நிலையுடைச் சைவ நன்னெறி
ஆருயிர்க் கெல்லா மன்பு
சேருவார்க் கன்றே சேருமா லெனவே
_ சாவாநிலை 71

(72)

அருள்வழிப் பெருக்கத் தமர்தரு பெரியோன்
மலரடி சிவணிய தலைமை யோர்வயின்
உலவாப் பெருந்திறல் உறுந்திறம் நுதலியோர்
சிவனோ டிரண்டறக் கலக்குநா ளென்றெனின்
அவனருட் பணிநின் றாணவம் அறுங்கால்
பவந்தீர்ந் தவனோ டொன்றுவ ரென்ப
இத்திற மொழுகி மேனிலை
உற்றவர் பலரிவ் வுலகத் தானே
_ உலவாத்திறல் 72

(73)

கோணிய பிறையன் கொன்றையந் தாரன்
மாணிக் கருளிய மறைவல் லாளன்
பொய்யில் புலவன் பேரருட் டலைவன்
எய்யா நல்லிசை ஏறமர் செல்வன்
தீதில் கொள்கைத் தவநெறி யாளர்க்கு
யாதோர் குறையும் சேராப்
பாது காப்பாய்ப் பரந்துநின் றானே
_ பாதுகாப்போன் 73

(74)

பல்வகைப் பிறவி முன்புழந் திற்றைநாள்
நல்லுடல் இதுகொண்டு நானிலத் தோரெலாம்
பின்னைப் பிறவி ஒழிமா ரூக்கிய
நன்னெறிச் சிவப்பே றெண்ணுங் காலை
அந்நெறி நிறைவின் அடைஇய நிலையுறன்
மூவகை யாற்றின் நிகழு மென்பரால், அவைதாம்
உடல்விடா மறைவும் உடல்கொடு சேறலும்
உடல்விட் டெய்தும் உயர்நிலை தானுமென
முத்திறப் பாட்டான் அமையு மென்குப
எத்திற மாயினு மாகுக
அத்திறம் கலந்தார் அரன்கலந் தாரே
_ மூவகையில் சிவப்பேறு 74

(75)

நுங்கோ யாரென வினவி னெங்கோ
கங்கையஞ் சடையன் அங்கைவெங் கனலன்
எங்கணும் நிறைந்த முக்கட் செல்வன்
அருள்வடி வாகிய அம்பலக் கூத்தன்
யார்வந் தேத்தினும் இன்னருள் செய்யும்
எல்லா வுயிரும் இறைவழித் தாகலின்
நல்லா றுய்த்தல் அவற்குரித் தேயெனப்
பல்கா லுணர்த்திய மாட்சியர்
வினைதெறன் முன்னிய நினைவி னோரே
_ ஏத்துவார்க் கருள்வோன் 75

(76)

முதல்வன் வருந்திறம் மூவகை கேண்மோ
மாயையி னீக்கக் குடிலையொடு வரூஉம்
கன்ம நீங்கக் குரவ னாய்வரும்
ஆணவ நீங்கப் பேரறி வாய்வரும்
மூவகை உலகரும் மேனிலை யுய்க்குமென
ஆய்வகை தேர்ந்த நல்லோர்
வாய்மொழி கேட்டோர் வினைதீர் குவரே
_ மல நீக்கும் முதல்வன் 76

(77)

எம்மான் பெருந்திறல் இசைக்கப் புகினே
இசையா நல்லிசை ஏற்றத் தோனவன்
எண்ணில் கோளமும் கோளிடை யுயிரும்
நினைந்துழிச் சமைத்த நண்ணரும் பெரியோன்
அவன்சீர் அளத்தல் எவர்க்குமொல் லாதால்
அருள்மிகு நல்லோ னெனவே
தெருளுறு நெறியில் தெரிந்துநின் றோமே
_ அளக்கொணாச் சீரோன் 77

(78)

ஊழ்வினை வாட்ட உலைந்துநின் றார்க்கெலாம்
கேழ்கிளர் மார்பன் கண்ணுதற் கடவுள்
தாழ்சடை நல்லோன் தில்லையங் கூத்தன்
வாழ்வருள் வானிது விளம்பக் கேண்மோ
ஆழ்கட லன்ன அருளியல் பெரியோன்
நல்லதே செய்யும் நீர்மை
அல்லாற் பிறிதொன் றில்லா னெனவே
_ நன்றே செய்வோன் 78

(79)

பொய்யில் நல்லிசைப் பிறைச்சடைப் பெரியோன்
ஐயா எனவந் தடிபணி வார்க்கெலாம்
தொய்யி லுலகம் தரூஉம் மைதீர்

தொய்யி லுலகுற லானாது நையும்
நானிலத் தோர்க் நவிலுவ துளது
மெய்ம்மறை மேவிய முருகலர் கொன்றையன்
சேவடி பரவிச் சிறப்புறல் தேராது
உய்த லொல்லுமோ உலகிடை யீரே
ஆய்ந்தாய்ந் தியற்றும் அறிவியல் கொண்டே
உய்ய லாமெனின் உய்ந்தோர்க் காணேம்
அறிவுகொண் டறியாப் பெருந்திற லறிவனை
நெக்குநெக் குருகி நனவொடு கனவும்
ஆற்றேன் அருந்துயர் மாற்றுகென் றரற்றி
நோற்பார் நிலனிடைப் பல்வகை யுயிர்க்கும்
ஏற்புடை இனியன ஆற்று வாரெனின்
ஊன்றுகோல் போன்றுவந் தவர்ப்புரக் குவனே
நான்ற மலர்த்தாட் பெரியோன்
ஆன்றோர் வாய்மொழி ஆணையி னெனவே
_ அறிதற் கரியான் 79

(80)

எல்லா வுயிர்க்கும் ஏமம் தரூஉம்
பொல்லார் திருவடி போற்றி னுய்குவம்
பிறவா யாக்கைப் பெரியோ னருட்சீர்
மறவாது நின்று மயக்கறுத் தீமே
அளியன் பெரியன் ஆல வாயன்
எளிதின் நமைவந் தாட்கொள் வோனை
ஏனோ தேராது முன்னம்
ஆனாத் துயரா னலமந் தேமே
_ எளிதின் அருள்வோன் 80

(81)

காலங் கடந்தோன் குறிப்பறிந் துரைக்கின்
அழலமர் தோற்றத் தெழில்சே ராகம்
யாவர்க்கு மெட்டா தெவரு முணருதற்
கொல்லாக் கடுவிசை எல்லை காட்டுபு
வியன்சீர் ஒளிக்கதிர் வேகத் தானே
சாவாப் பெருந்திறல் சாற்றும் போலும்

நிலைஇய பெற்றியன் உலையா நல்லிசை
ஓங்குபுகழ்ப் பெரியோன் தேங்கமழ் மலரடி
அன்றோ நமக்குத் துணையென
நின்றா ரெவர்க்கும் நீணெறி யாமே
_ காலங் கடந்தோன் 81

(82)

பொல்லாத் துயரம் போக்குதல் முன்னியோர்
எல்லோர்க்கு மேலோன் ஈர்ஞ்சடை யோனெனப்
பல்கால் சிவனடிக் கன்புசெய் தேத்தலும்
தொல்லுயிர் பேணும் நல்லா றமைதலும்
இவ்வழி நிற்குவ ரென்ப
செவ்வழி தெரிந்த சிறப்புடை யோரே
_ துயர் போக்குவோன் 82

(83)

ஒன்றுநன் றறியாப் புன்றலைச் சிறியேன்
தொன்றுதொட் டுழந்த வல்வினைப் பவநோய்த்
திறலற எடுத்த நறவுமிழ் மலர்த்தாள்
ஒல்லைவந் தெற்கோர் துணையா கியதே
இடக்கழ லடைக்கலம் சுட்டுநல் லிடக்கை
வெருவரல் தவிரெனும் வலப்பால் திருக்கை
தழலவிர் திருக்கை தமருகக் கையென
நாற்கை வீசிய நவிலா நாடகம்
பார்க்கப் பெற்றா ரெல்லாம்
சேர்க்கப் பெற்றார் சிவன் சேவடிக்கே
_ திருநடக் குறிப்பு 83

(84)

சீரார் பெருநகர்ச் சிற்றம் பலவர்
சேரார் மூவெயில் சீறிய ஞான்றும்
பாரா தவர்பிழை பொறுத்தனர் கண்டீர்
ஆர்ஆர் அடிபணிந் தேத்தினும் அருள்தரப்
பாரோர் செய்த பெருநகர்க் கோயில்
ஊரு ராங்கண் உயர்த்த வெல்கொடிப்

போரே றூரும் புரிசடைக் கடவுள்
வாரீ ரவரிசை பாடத்
தேரீர் சிவநெறித் தொண்டரொடு கூட்டே
_ பிழைபாராப் பெரியவர் 84

(85)

விரிநீர் வியன்புலம் பெருகிய சிறப்பிற்
சிவநெறிச் சீலர் கவலின்றி யோங்குதற்
குரிய காலம் இதுதெரிந் தேமே
காலந் தாழா தாலமுண் டாற்கே
ஓலம் ஓலமென் றேங்குப
நாலா புறத்தரும் நலம்பெற்ற வாறே
_ ஆலமுண்டாற்கே ஓலம் 85

(86)

மருந்தென எழுந்த குருந்தடி நீழல்
திருந்தடி காட்டிய தனிப்பெரும் கடவுள்
அருந்தவச் செல்வப் தெருந்துறைத் தேவற்குச்
சொல்லாப் பொருளியல் சொல்லற விளக்கி
எல்லோர்க்கு மேனின் றிமைக்கும் பெரியோன்
அவன்கழற் பணியி னன்றே
பவக்கடல் நீந்தும் பாங்கா கும்மே
_ வாதவூரர்க் கருளியோன் 86

(87)

சடையணி கொன்றையன் சிவபுரத் தெம்மான்
அருளமர் திருக்கையால் அமைவா கும்மே
வலக்கைத் துடிகொண் டுலகுபல வாக்கலும்
இடக்கை யங்கி துடைப்பதும் குறித்தோன்
அருட்கழல் சுட்டும் திருக்கை மருளற
மறைத்தலு முரியன் முற்பவ வல்வினை
ஆணவம் அழுத்தி இன்புசெய் வலக்கால்
நீணலஞ் சான்ற நாடகம்
காணீ ரெனநமைப் பேணிய வாறே
_ திருநடக் குறிப்பு 87

(88)

தென்னர் நாயகன் தீந்தமிழ் மேயவன்
நல்லோர் தலைவன் நோயுளார் வாயவன்
தூயோர்க் கீயும் தொழிற்றுறை போயவன்
உள்ளக நைவார்க் குறுதுணை ஆயவன்
முன்னோ னெவர்க்கும் உலகெலாம் தாயவன்
மாயவன் மலரோன் ஓராப் பேரெரி
ஏயநின் றெல்லா வுயிர்க்கும்
தாயவன் தந்தை தானவன் றானே

_ நோயுளார் வாயுளான் 88

(89)

ஆகுதி வேட்பார்க் காகுமெல் லாமெனக்
கானெரி யோம்பிய கல்லா முனிவர்க்கு
மெய்யுணர் வூட்டப் பையவந் தவர்மனை
இழையணி நெகிழ்த்த ஈர்ஞ்சடைப் பெரியோன்
வேள்வி முற்றிய வேங்கையோ டரவும்
விறல்பட அணிந்த திறனறிந் தேமே
அரன்சே வடிநினைந் தரற்றி னல்லது
தவம்பிற வாமோ தெளிவுடை யீரே
அரனடி நெகிழ்வார் ஆருயிர்க் கிரங்குவர்
இற்றே நற்றவ மென்குப
சொற்றிறம் பில்லாச் சிவநெறி யாரே

_ மெய்த்தவம் 89

(90)

உலகுபுகழ் விழுச்சீர் அலைவாய் முருகிடை
விரைசெலன் முன்னிய நரைத்தலை முதியோர்
ஆண்டாண்டு தோறும் அவ்வயின் ஈண்டுபு
விரைமலர் தூஉய்ப் பரவிப் பேணி
எய்யா நல்லிசை இளையோற் காளாய்
மெய்யுணர் வெய்திய வழக்கறிந் தீமே
ஐயுணர் வதுகொண் டோச்சிச்
செய்யுநற் பணியிது செப்பிய வாறே

_ அலைவாய் நற்பணி 90

(91)

ஒப்பிலி ஒருவர் இருவுரு வாயினர்
மூவர்க்கு மேலவர் நால்வர் வாயினர்
ஐவரை யடக்குவர் அறுவரோ டெழுவர்
எண்சித்தி யோங்கும் பொன்பதி சேர்ந்தெனப்
பத்தரார்ப் பதினொன் றுண்டு
பன்னிரு கைத்திரு விடங்கழி முருகே
_ விடங்கழி அறுமுகனார் 91

(92)

சீலம் நோன்பு செறிவறி வென்னும்
நால்வகைத் திறனும் நவில்கெனக் கேட்பின்
சீலத் தொழுகுவார் உடல்வீழ்ந் திடுமேல்
நோன்புறல் நுதலித் தோன்று மறுபிறவி
நோற்பார் உடல்விழல் செறிவுகைக் கொளற்கே
செறிவுற் றிறந்தார் பேரறி வாளராய்த்
தோன்றுவார் தோன்றின் அவருடம் பிடாஅர்
முந்துநூல் பலவிது மொழியக் கேட்டோம்
இத்திறம் நிகழ்தலு மன்றி
நாலுமோர் பிறவியுள் நடக்கலு மாமே
_ நால்வகை நோன்பு 92

(93)

திரிபுர மெரித்த பெருந்திறல் விரிக்கின்
ஆணவம் கழற்றி அறிவளிப் பானிது
விறல்பட ஆற்றிய வழக்கெனக் காண்மோ
மாயை யாலரன் மாண்புமறந் தாரை
மீட்பான் எழீஇய கோட்பா டிதுவே
விரவார்க் கிதுசெய் ஞான்றே விரவிய
வானோ ரகந்தையும் வீழ்த்தல் குறித்தோன்
புன்னகை யாற்புரம் பொடியா யினவே
பொடியா யவரையும் அடிசேர்த் தவருள்
இருவர் காவலர் குடமுழக் கொருவரென
எந்தை ஆண்டமை எண்ணிச்
சிந்துமா லென்கண் சிறுதுளி பலவே
_ புரஞ்செற்றும் புரவலன் 93

(94)

உலவாச் சுழற்சி உலகிய லோரெலாம்
பலவா றேத்திப் பயில்வகை தவிரார்
சிறுதினை மலரொடு தூஉய்ப் பெரிதுவந்து
நறுந்தண் சாரற் குறுந்தொடி மகளிர்
வேலற் பரவி வேண்டுந பெற்றென
யாணர்ப் பெருநக ரவரும் பேணித்
திருவடி தொழுதல் தெரிந்தா மன்றே
புறவழி பாட்டிற் பெருக வோங்கியார்
அகவழி பாடும் உடனியை வாரேல்
பிறப்பினி எய்தப் பெறாஅர்
காலங் கடந்தோர் கழறிய வாறே
_ புறத்தும் அகத்தும் வழிபடல் 94

(95)

வேண்டுவார்க் கீயும் விரிசடைக் கோமான்
வேண்டாச் சிறாஅர்க்கும் வழங்கிய நீர்மை
காண்டிகு மல்லமோ யாமே ஈண்டிய
தொல்வினை தொலைத்தற லொல்லா தார்க்கும்
அருளே உருவாம் அம்பலக் கூத்தன்
தெருளியல் பிறங்கக் கூட்டி மருளற
நினையாப் பல்சீர் அனைத்தும் தரூஉம்
ஆண்டாண் டுயர்நிலை யதற்கே ஈர்க்குமென
வரையாப் புகழ்ப்பா விரைந்து நாம் வரைகம்
நல்லன சேர்ப்ப தல்லால்
பொல்லதொன் றில்லாப் புரிசடை யோற்கே
_ எல்லாரையும் ஈர்ப்போன் 95

(96)

அறிந்தி யானிழைத்த பெரும்தூ சுளதோ
அறியாப் பிழைக்கே அல்லலுற் றேனோ
எவ்வகை யாயினும் செவ்வேட் பரம
நின்னடி யின்றுநா னுள்ளி வந்தெனப்
பழவினை பாற்றுதி மலைகிழ வோயே

வரையா வண்மை நிறைபுகழ் முருக
பேசாச் சிறப்பிற் பெருவிறல் கடவுள்
அழற்பிழம் பாகிய பழந்தமிழ்ப் பெரியோய்
அடிமுடி யில்லா வடிவேல் தலைவ
துரும்பினே னென்னையும் வருந்தலென் றேற்றுன்
திருந்தடி பொருந்தச் செய்தி
மருந்தென மிளிரும் மாதவத் தோயே
_ உள்ளினேற் குயர் மருந்து 96

(97)

பகலெரித் தன்ன பொறிகிளர் பறந்தலை
அகலு ளாங்கண் இகலெதிர் காணுஉப்
பகைதெற லானா தினைய லோம்புமதி, வகைதேர்
அறவோர் மலிந்த அருந்தமிழ் நாட
பிறையணி கொன்றைப் பிஞ்ஞகப் பெருமான்
நிறையருள் நீர்மை நீதேர்ந் திலையோ
அருளா னாகா தொன்றிலை காண்மோ
வயினெழுந் தார்க்கும் வம்ப மள்ளரும்
உள்ளிரிந் துன்னடி படியக் கொள்வோன்
வள்ளெயில் வடவரைக் கோமான்
ஒள்ளியோன் சேவடி உள்கமா லறுமே
_ அரசர்க் கறிவுறை 97

(98)

அறவோர் யாரென அறைதல் வேண்டின்
பிறவோ ருயிர்க்கும் பீழைசெய் யாராய்த்
தண்ணளி யேமிகும் தலைமையோ ரவரே
நுண்ணிய நூல்பல தேர்ந்தோ ருள்ளும்
உண்மை யறிவுறா துழல்வார்க் காண்டிகும்
வண்மை தேரா வன்க ணாரின்
திரிதரு வாரவர் தெளிவுறல் விழையின்
அரியயற் கரிய பெரியோய் எனவே
எரியுமிழ் சடைய னார்க்கு
விரிபுகழ் பாடப் பெரிதுவாழ் குவரே
_ இறை பணியில் தெளிவு 98

(99)

மயலற வெழுந்த வயலூர்க் கடவுட்
கயலா னல்லேன் அடிதொழும் புடையேன்
கயல்சேர் காழிக் கடிகமழ் தாரன்
என்றெனை ஏற்குவன் கொல்லோ தென்புல
மன்றகத் தாடும் மறைவல் லாளன்
பொன்றா வுடல்தரப் போதுவ தென்றோ
வல்வினைக் காற்றேன் பல்கால் தளர்ந்து
சொல்ல லானாச் சிறுமை வாட்டவும்
கொழுகொம் பில்லாக் கொடிப்பயி ரேய்ப்ப
வருந்துவேற் கீய விரைதி
திருந்துவேற் குமர பெருந்தவத் தோயே
_ வல்வினைக் காற்றேன் 99

(100)

அடக்க லாகா ஐம்புலன் ஒடுக்கிக்
கடக்க லாகாப் பிறவிக் கடலறக்
கடவுத லுண்மையின் கடவுட் பெயரோன்
வடவர் நாட்டெழு வான்கோட் டிமயத்
தடவரை நச்சிய தாழ்சடைப் பெரியோன்
படர்தரு வெவ்வினை பாற்றிப் பவமற
மடக்க லாயினன் மாயையோ டாணவம்
இடக்கழ லடைக்கல மாக
நடக்குறிப் புணர்த்திய நீள்சடை யானே
_ கடவுள் எனும் பெயர் 100

பகுதி - 2

(101)

செந்திலம் பெருந்துறைச் செவ்வேட் பரமன்
கற்றறிந் தார்நவில் கந்தக் கடவுள்
கவலொழித் தாளும் குறிப்புணர்ந் தீமே
ஐந்தொழி லீசன் அருட்டிரு முருகன்

மைந்துமலி தடக்கை ஏந்திய வேலே
மலந்தொலைத் தாளும் மாண்பி னதுவே
ஊழ்வலி தீர்த்தற் குறுதுணை யாமால்
சாவும் தவிர்க்கு மென்னப்
பாவலர் ஏத்திய பரிசுபல கேண்மோ 101

(102)

அதள்விரித் துலர்த்திய அகனெடும் புறவில்
கதனாய்ச் சூழலொடு கான்புறக் கொழிந்தெனப்
புதன்மறை வேடன் புட்சிமிழ்த் தாங்கு
நல்லர்நீ ராடி அல்லமறைந் தியற்றும்
பொல்லா வுலகர் பழிபிழைத் தீமே
முன்வினைத் திறல்தரு வெம்மையற வோட்டிப்
பிறவா நெறிபுகன் முன்னிய அறவோர்
நிறையருள் நீணெறி பயிற்றிய காண்டிகும்
பிறவோர் துணையெதும் வேண்டகில் லாச்சீர்
பிறையணி சடையர் தாளே
முறையுறப் பணிந்த மேன்மையா னெனவே 102

(103)

தண்டாது மலிந்த வண்டிமிர் கொன்றையன்
எண்டோள் முக்கண்ணன் இருங்கட லுமிழும்
ஆல முண்டான் அரைக்கட் சுற்ற
இரும்புலி அதளுடை விரும்பலென் னோவென
ஒருங்குட னெழுந்த ஒல்லென் கணமும்
வையைக் கரையகம் வேந்துசினந் தோச்சிய
கோல்பட வழுங்கிய குவலயக் கூட்டமும்
விண்ணிழி நீர்த்திறல் விரிசடை யடக்கி
மண்ணவர்ப் புரந்த தண்ணளி மாண்பும்
நினைதொறும் நினைதொறும் நெகிழ்க்கும்
வினையற வெழுந்த நினவி னோர்க்கே 103

(104)

சிற்றம் பலவனைச் செம்பொருள் தேவனைச்
செற்றம் கலவாச் சிவபெரு மான்றனைக்
குற்றம் பலபுரிந் தேனையும் ஏன்று

சுற்ற மாக்கொளும் சீருடை யோனெனப்
பற்றினேன் நற்றமிழ்ப் பாவால்
நெற்றியோர் கண்ணனை நினைந்தெழுந் தேனே 104

(105)

பனிமலி வடரகப் பாங்க ரோங்குபு
யமுனையந் தெண்ணீர் புரப்பக் கவின்செறி
தில்லி நாப்பண் ஒல்லென் றெழுந்து
சுடர்விரித் தன்ன வடநாட் டொளிர்நகர்
நெடுவேள் வண்மை நிறையப் பாடிப்
படிதொறும் படிதொறும் பயின்றனர் அடியார்
அருணைத் தேவர்க் கடிதொழும் பியற்றுபு
ஆண்டாண்டு தோறும் அணிவிழாக் காண்கெனத்
தலைநாள் தொடக்கத் தோங்கி
உலையாச் சீரொடும் நிலைஇ யோரே 105

(106)

பழங்குறை வழிவரு மழுங்கா ஒழுங்கில்
அழுங்க லானா தலமரல் தவிர்மின்
ஆலம் விழுங்கிய அணிசேர் மிடற்றனைக்
கால காலனைக் கண்ணுதற் கடவுளைத்
தொழுதெழல் வல்வினைத் தீர்வா கும்மே
வழுதி கூடல் எழுபுடைக் கோல்வழி
உயிர்ப்பொரு ளெல்லாம் உலைந்தன கண்டீர்
அயிற்படை யப்பனை யேத்தச்
செயிர்வினைத் தொடர்பும் சிதைவா கியதே 106

(107)

நுண்ணுணர்வு கொண்டிங் கறித லல்லது
எண்ண லானா ஈர்ஞ்சடைக் கடவுள்
விண்ணிடை எண்ணிலி கோள்பல புரக்கும்
அளப்பில் சீர்த்தி துளக்கற் பாற்றோ
யாதும் ஒரேம் எதுவும் செய்கிலேம்
தீதகல் நெறியும் தெரியே மாக
வல்வினைச் சுழியில் ஒல்லென வழுங்கி
வயின்வயின் உழந்த வம்புசெறி பிறவி

ஒருமை தீர்கென வோங்கிப்
பெரியோன் கழலிணை பேணமா லறுமே 107

(108)

நீறணிந் தொளிரும் நீள்சடை வேந்த
ஏறூர் செல்வ நமவென ஏத்துவார்
போற்றி போற்றி யென்பார்
ஆற்ற லார்க்கும் அளப்பரி தாமே 108

(109)

ஆவி னன்குடி அருள்முரு கோனடி
ஓவி லாதெடுத் தோதும் உள்ளமே
கோவி லாமெனுங் கொள்கைய ராகித்
தாவில் வண்புகழ் பாடும்
நாவி னார்தமை நமனணு கானே 109

(110)

அஞ்சலென் றாண்ட அவிர்சடைக் கடவுள்
நெஞ்சகங் கொண்ட நீணெறி யாளர்க்கு
விஞ்சிய பொருளொன் றில்லென மொழிப
நஞ்சும் நினையா தருந்திய நம்பனை
எஞ்சா நல்லிசை இமையோர் தலைவனைத்
துஞ்சலும் துஞ்சலில் போதும் நினையத்
தஞ்ச மருளும் தலைமை யோனை
வெஞ்சிலை வேள்பட விழித்த
செஞ்சடை யப்பனைச் செப்பலுற் றேனே 110

(111)

நினையாப் பெரும்புகழ் நீள்சடை யானை
எனையாண் டருளிய எந்தைபி ரானை
முனைநாள் தொட்டே மொழிமா ரெழீஇ
வனைந்தநற் றமிழ்ப்பா அனைத்தும் கேண்மோ
வினையால் நனைந்திங் கினைய லோம்புமின்
கனைதிரைப் பெளவ நஞ்சுங் கருதா
தனைவரும் எழுகென் றூக்கிய
முனைவனை யேத்தும் முறைமையீ தெனவே 111

(112)

அயன்மாற் கரிய வியனெடும் பொறியின்
மயக்கற வெழுந்த மலையெரி தெரிமோ
எண்ணாச் சிறப்பின் இணைகழல் நண்ணி
அண்ணா மலையோய் பிழைபொறுத் தாளென
நெஞ்சக நைந்துக நன்றா கும்மே
நெடுவேள் அருட்டிற வலையுட்
படுவா ரெல்லாம் படிறகன் றாரே 112

(113)

கொடியோர்ச் சிதைத்த நெடுவேல் முருக
கூறுநர்க் கூறெதும் வாரா துகைக்கும்
சீருடை மரபிற் செவ்வேட் சேஎய்
ஆறணி ஈசற் கருமறை விரித்த
நூறு நூறடுக்கத்து நுவலா மாண்பின்
வீறுமலி விரகொடு விளங்குபு நின்ற
நீறணி மார்ப நிறையருட் டேவே
செய்த பிழையெதும் தெரிகின் றில்லேன்
உய்வகை காட்டு நல்லோய்
பெய்வளை தந்த பரங்குன் றோயே 113

(114)

நன்றே யன்றி ஒன்றுபிற உன்னாது
நின்னடி என்றும் நினைப்பித்த வேலோய்
பழவினைக் கிரங்கிப் பழிப்பட் டிரிந்த
சிறியேன் உளந்தளர்ந் தெய்த்ததும் அறிந்தோய்
அறியாப் பிழையான் அலமந் தேனை
ஆட்கொள் வாரெவர் அரசே நீயலால்
கோட்புலி யதளரைக் கசைத்த
வேட்கள நன்னகர் விளங்கி யோயே 114

(115)

உள்ளகத் துறைதரும் தெள்ளியோ னிவனெனப்
பன்னூல் விரிப்பப் பேதையே னுணராது

உலகியற் சுழல்வழி இழிதர லென்னோ
பலநாள் எந்தையொடு பல்புகழ் கண்டும்
அலைவாய்க் கடவுள் அடியிணை பரவியும்
கவற்கடல் இகவா தேனைப்
பவத்தொடர் பிணித்த வினைவழிச் செலவே 115

(116)

மறைபோ ரேத்துங் கறைமிடற் றெந்தை
நிறையரு ளன்றே நமைக்காப் பதுவே
பிறையணி கொன்றைப் பிஞ்ஞுகப் பெம்மான்
குறைதவிர்த் தாண்ட கூறா நல்லிசை
அறையுநர் அணிநா நலம்பெறப் பரவிய
கேட்டெழுந் தாரொடுங் கூடுக
வீட்டக நன்னெறி விழைகுவீ ரெனினே 116

(117)

முன்வினைத் தொல்லை மயக்கிற் றிளைப்பினும்
தமக்கென வழுத்தாது பிறருய வேண்டும்
நமரங் காள்நும் நெஞ்சுமகிழ் கென்ற
அமரர் கோனை ஆலவாய்க் கடவுளை
இமயச் செவ்வரை மேவி யுமையொடு
பொன்னரங் காடும் பெரியோன் றன்னை
உன்னி நின்றார்க் கெல்லாம்
நன்னயம் கூட நாங்கண்ட வாறே 117

(118)

அலைபுனற் சடையிடை நிலவஞ் சூடும்
தலைவ என்னையும் தாங்குதி சிலைவேல்
அவுணர் ஆட்டம் தவிர வாங்குபு
பல்கணச் சூழலொடு விண்கதிர் பரப்பிப்
பண்டெமக் களித்தென இன்றும் காண்கம்
அளப்பில் கோள்பல வளம்பெற உகைக்கும்
துளக்கறு நெடுவேட் கொற்றம்
விளக்கிய சீரின்நாம் வாழ்ந்த மாறே 118

(119)

யாவ ரேத்தினும் எவ்வகை யேத்தினும்
அவ்வவ ரகத்துள் அத்திறம் எழூஉம்
எந்தை காண்கென இசக்குநன் னூலே
செப்ப லானாச் சிவனடி யுன்னி
ஒப்பிலி யப்ப போற்றி போற்றியென
இப்பரி சேத்து நல்லோர்
எப்புறஞ் செலினும் ஏற்றம் பெறுவரே 119

(120)

பாட லானாப் பேரு ராங்கண்
நாடகங் காட்டிய நம்பெரு மானடி
கூட லாலவா யகத்தும் கூடும்
பாசூர் கூடும் புலியூர் கூடும்
வேளூர் கூடும் வியன்நாரை கூடும்
ஆரூர் கூடும் அரத்துறை கூடும்
தில்லி நல்லூ ரெல்லையுங் கூடுமெனத்
தேடி நான்மறை திளைத்துங் காணா
நீடுபுகழ் நம்பனை யுள்கிப்
பாடு வார்க்கிலை பவவினைத் தொடரே 120

(121)

அலைபுனற் செந்தில் அவிர்சடை வேந்தன்
சிலைவரை யாகச் சேரார் முப்புரம்
தொலைத்த ஞான்றினும் தீயதில் லானே
மலையக நிலைஇய மலையா விருக்கை
உலையா நோன்பின் உளுற்றுநர்க் கருளித்
தொல்வினை யாவும் தீர்க்கும்
ஒல்லெ னைம்புலன் ஒடுங்கிய வாறே 121

(122)

பகலெரித் தன்ன விரிசுடர் பரப்பி
அகடுற வெறிந்த இகல்வேற் காற்றாது
மைந்துபட உழலும் மருண்மலி சுற்றமொடு
வெந்தொழிற் சூரனும் வந்துவணங் கினனே
முந்திய தவங்கண்டு முழுமுதல் தந்த
நந்நா வலியான் நகர்பல சமைத்தும்

ஆர்கலி யுலகர்க் களிமிகச் சேர்த்தும்
சீருற வாண்ட பேரருட் செல்வர்
வாழிய முருகவென் றேத்திய போழ்தத்து
ஆணவம் அகன்றன ராகி யுய்ந்தெனப்
பாடுகம் பல்புகழ் சிறக்க
ஆடரங் கீசன் அணிகழற் கெனவே 122

(123)

ஆனைக் காவி னண்ணலை யேத்தினேன்
யான்றை யாவகை என்னையுங் காத்தனன்
யான்ஐ யாவெனின் ஏனோ எனவரு
வானை யானே முனம் தொழ
ஏனை யோரின் ஏன்மறந் தேனோ 123

(124)

மறன்செறி நாடுபல இறந்தன ராகி
அறவோர் மலிந்த ஆலவாய் நண்ணி
கூடற் குடவயின் குன்றக மேறி
நாடகங் காட்டு நம்பா காடகம்
தவிரா அரசே அவிர்சடைக் கோனே
தேட லானாத் தென்றிசைக் கடவுள்
எரியுமிழ் உருவோய் எனப்பல வேத்திப்
பரிசிலர் எழீஇய வரிசை
விரிக்குநர்க் கேதும் இல்லைவல் வினையே 124

(125)

பனிமா லிமயத்துத் தனிநெடு வேலன்
முனிவர ரேத்தும் மூவா முதல்வன்
நினையாச் சீர னவன்றிற மினைத்தென
யாரும் தேரா இயல்பினன் மாதோ
தேரா தாரும் தேர்கெனச் சிறிது
தன்னருட் கொற்றம் தெரியக் காட்டிப்
பொன்னவிர் சடையவை பொலியநின் றாடும்
நெடியோற் காளெனப் படுவர்
படிமிசை யுயிர்க்கெலாம் பரிவுடை யோரே 125

(126)

தென்புலத்து வழங்கும் தீதுதீர் சிவ்நெறி
மன்புலத் தார்பலர் ஓரா திரிந்து
வன்புல மழவரிற் சினைஇ நன்பல
ஆனாத் தவமிது நமக்கென மயங்கிக்
கொன்கழித் திடுவர்கொல் வாணாள் பலவும்
முன்பல பிழைசெய் தார்க்கும்
இன்புசெய் வானை இனந்தெரி யாரே 126

(127)

எல்லா வுயிர்க்கு மிரங்கி யருளல்
நல்லாற்றிற் செல்வார் நெறியெனுங் குறிப்பான்
ஏசில் நற்றவம் இயற்றுநர்க் காண்டிகும்
மாசு களைந்தார் மருள்களைந் தாரே
உற்றநோய் நோற்பார் உயிர்க்கிடர் செய்யார்
ஆண்டகை அருட்காட் பட்டென
யாண்டும் இடும்பை இகந்துநின் றாரே 127

(128)

நாடாள் கென்றும் காடாள் கென்றும்
ஆடா டென்றும் ஆர்த்தெழு முலகோர்
கேடில் சிறப்பிற் கண்ணுதற் காட்படின்
ஈடில் புகழொடு நீடுவர் மன்னோ
பன்னூல் ஆய்ந்த நன்னெறி அறிவர்
பகுத்துண் டுயிர்பல பேணிய வகுக்கும்
தொகைநூ லவற்றுள் தெரிந்தவர் கேண்மோ
தகைசால் அருள்நெறிக் கெதுவும்
மிகையா காதென மொழிந்த மாறே 128

(129)

அகிற்புகை படர்ந்தென மெல்லிழைத் துகில்பல
யவன ருகப்பப் பீலிபெய் தடுக்கிக்
கடற்படு நாவாய் உகைக்கும் முன்னாட்
பண்ட வாணிகர் வழக்கறிந் தீமே
தொழில்வன் மாக்களொடு தவநெறி யவரும்
பண்டே கொண்டது தென்னகங் காணென

நன்னூல் சிவநெறி நிரைநிரை யூக்குபு
தில்லை நல்லூர்த் துறையகஞ் சிவணிப்
பன்னாள் அறிவரொடு பயின்றிசி னோர்வயின்
சின்னா ளாயினும் செலீஇயர்
பொன்னார் அரன்கழல் பேணிய விரைந்தே 129

(130)

அறத்திறம் தெரிந்தும் அறியா மாக்களொடு
புறம்புறம் திரியும் பொய்யர்க் கொரீஇச்
சொல்லாச் சிறப்பிற் சிவபெரு மானடி
செல்லுதல் குறித்த நல்லோர்க் காண்கம்
வல்வினைத் தொல்லை வலிதொலைத் தோங்க
எல்லா வுயிர்க்கு மிரங்கு வீரென
ஒல்லைநன் னெறிதெரித் தாண்ட
தில்லைச் சிவன்கழல் சேர்கநம் தலையே 130

(131)

அறிவர்த் தாங்கிய அருள்நெறிச் சுற்றமொடு
மறையக நுண்பெருள் நிறைய வாங்கிப்
பிறவிப் பயன்கொண் டுய்ந்தோர்க் காண்டிகும்
வான்கிழித் தென்ன ஓங்குகல் விடரகப்
பாங்கர் விரையும் தீம்புனற் போர்யாற்
றேங்கொலி நசைஇய கடுவன் மானக்
கல்லென் குழுவொடு மரீஇ ஒல்லென
உலகியற் சூழல் அலைப்ப அலமந்து
புலன்பொறி கலங்குங் காலை
உலவே லெனவரும் நிலவணிந் தோனே 131

(132)

நகையா கின்றே நானிலத் தொருவன்
பிறர்க்கிடர் செய்கால் பழிப்படல் அறிந்தும்
பிறநாட் டவரொடு முரணித் திறலொடு
பகைமேம் பட்டுப் பல்லோர்ப் பிணிக்கும்
கொலைத்தொழில் நாணாக் கொடுவழக் கெவனோ
பறந்தலை மேஎய பாசறைக் கொற்றம்
சிறந்ததா மென்னல் யாங்கா கிடுமோ

மறந்தலைப் பட்டு மாழ்கும்
திறந்தவிர்ந் திடுக தீதுதீ தெனவே 132

(133)

மாலுந் தீர்ந்தார் வினையும் துரந்தார்
சால நன்றெனச் சிவநெறி யூக்கிக்
காலை மாலை நின்சீர் பரவும்
அடியார் குறைதீர்த் தருள்வாய் நலனே
செடியா ருடலம் சிதையா முன்னர்
வடிவேல் ஏந்திய நெடியோய்
படிமிசை வந்தெமைப் புரத்தல்நின் கடனே 133

(134)

அறிதொறும் அறிதொறும் அறியா முன்னாள்
பரிசுகண் டேங்கலின் அன்றிப் பிறிதிலை
அளவிலா ஒருவனை உளவுவழித் தேர்கம்
துளக்க லாகா நிலைநின் றானைக்
கிளக்க லாற்றா மாலயன் தளரவும்
தாட்டா மரைநலங் கூட்டிய
காட்டகக் கூத்தனை ஏத்து வாமரோ 134

(135)

மன்றகத் தாடும் பொன்றிகழ் சடையன்
சென்றுசென் றேத்த நன்றுதந் தருளும்
நான்மறை தெரித்த வான்புகழ்ப் பெரியோன்
எல்லா வுயிர்க்கும் இனியவே செய்யும்
அருள்நெறி யப்பனென் றோதிப் பொருளுணர்ந்து
மருள்களைந் திருந்தா ரெல்லாம்
பெருநெறி யூக்கிய புலவன் மாரே 135

(136)

அயில்வேற் கடவுள் ஆலவாய்க் கடவுள்
கைலைக் கடவுள் கண்ணுதற் கடவுள்
தொய்யா நல்லிசைத் தென்னர்நன் னாட்டுள்
ஒய்யென எழுந்த ஒளிசேர் கடவுள்
மைதீர் ஒழுக்கத்து மெய்ம்மறை யாளர்

பன்னூல் ஆய்ந்து பல்வகை யுன்னியும்
அருள்வழி தேரி னல்லது
பிறவழி யறிகொணாப் பெற்றி யானே 136

(137)

அயன்மாற் கரிய வியனெடும் சுடரோன்
அயலா னென்றெனைத் தள்ளுங் கொல்லோ
உயவல் நெறிசிறி தோரா துழலும்
கயவ மாக்களிற் களித்தலைந் தேனைப்
பழவினைத் திறலறப் பாற்றிக் கழுமல
நன்னகர் ஊக்கி நீணெறி பயிற்றிய
தென்னகச் சிவனே போற்றி
அன்னையு மப்பனு மாகி யோயே 137

(138)

முருகலர் கொன்றை மெய்ம்மறை யோனடிக்
குருகி யேங்கலிற் பிறிதிவண் வாரார்
வயின்வயி னெழுந்த முன்வினைத் தொடர்பறப்
பழையோன் கழல்புக விழைவுண் டாயின்
ஒல்லை மற்றிஃ தொல்லுமால் தில்லையுள்
யாரும் அறியா இயல்பினன் சேவடி
அருள்நெறிக் கூட்டத் தோங்கும்
பெருமூ தாளரொடு பேசினிர் செலினே 138

(139)

புலன்பொறி கலங்கிய நெறிமயக் கயர்வான்
அறிவழிந் தலமரு ஞான்றின் சிறிதுநீ
அஞ்சே லெனவருள் ஆலவாய்க் கடவுள்
செஞ்சொல் அளைஇய சிவப்பெருங் கடலவன்
நஞ்சணி கண்டன் எஞ்சாச் சிறப்பினன்
அவிர்சடை யாடல் தவிராப் பெரியோன்
யாவ ரேத்தினு மவர்ப்புரக் குவனே
பிறவா யாக்கைப் பெரியோன்
மறவா தருளும் அறநெறி யானே 139

(140)

கறைமிடற் றண்ணல் நிறையரு ளாளன்
பிறையணி கொன்றைப் பிஞ்ஞகக் கூத்தன்
வரையா வண்மை வியன்தில்லை யூரன்
நிரைநிரை யெழுந்த நீணெறி யாளர்க்குப்
பரிசில் தந்த பேசாச் சிறப்பினன்
எங்கோ னவனடி எங்ங னேத்துகேன்
செங்கோற் சிவபெரு மானென
எங்கணும் நிறைந்த முதல்வன் றனையே 140

(141)

சேண்டிகழ் மாடம் செவ்வரைக் கவாஅன்
பாண்டியர் செய்கெனப் பணித்த வாண்டகை
ஈண்டிய தொல்வினை தீர்த்த மாண்பினன்
வேண்டிய பெருநிலை யருளும்
வேண்டா தார்க்கும் வேண்டுமா றளித்தே 141

(142)

கூறாச் சிறப்பிற் கொன்றையங் கண்ணியன்
தாருங் கொன்றையா நயந்த தலைவன்
சீர்பல ஏத்தும் செல்வ மாக்கள்
பேரருள் சிவனடி பாடி யாறுணர்ந்து
நுண்ணறி வாளரொடு நோற்றலும் காணியர்
தென்னர்நன் னாட்டுழைச் சென்மென எழீஇப்
பொன்றிகழ் பேரவை நோக்கும்
வென்றிசால் கொற்றம் வாழிய பெரிதே 142

(143)

அறிவர்த் தேரா தகன்றபன் னாளும்
குறிக்கோ ளிலாது கழித்தநாள் பலவும்
எண்ணுதோ றெண்ணுதோ றெய்த்தனன் மாதோ
எண்ணாச் சீரனை நண்ணுதல் குறித்தோர்
வழிகண் டெழுந்த பழந்தமிழ் வழக்கின்
நாடொறும் வரைந்த நற்றமிழ் எல்லாம்
கொன்னாள் போக்கிய குறையறற் பொருட்டெனக்
கரைந்துகு நெஞ்சம் கனியப் புரைதவிர்
மேலோர்க்கு மேலாம் ஈசவென் றேத்திப்

பழவினை போக்க லாயினன்
மழவிடை யானருள் முன்னின்ற வாறே 143

(144)

உள்குவார் உள்கிற் றுடனிருந் தறியும்
வெள்ள நீர்ச்சடை வியன்சீ ராளன்
தள்ளா னென்னைத் தவறுசெய் தானென
அறியாது பிழைத்தன உள்ளங் கொள்ளான்
நன்றெதும் இயற்றா நாயி னேனையும்
வருகவென் றேற்ற முருகப் பெருமான்
ஏதுநான் செய்பணி யென்ன
வண்டமிழ் இசைபல வரைகவென் றானே 144

(145)

வன்புல மல்லது வியவாச் சுற்றமொடு
கொன்திரிந் துழலும் வம்பர்க் கொரீஇ
முன்னூல் தந்த மின்னவிர் சடயனை
அன்னையு மப்பனு மாகிய தலைவனைப்
பொன்செறி அரங்குட் பாடிநின் றேத்தத்
தென்னர் நாட்டுழைச் சென்மென விடுக்கும்
நன்னூல் சிவநெறி அறவோர்க் காண்டிகும்
தன்னே ரில்லா னருளால்
பின்னைப் பிறவி வாரா வாறே 145

(146)

பண்கேட் டிரங்கும் கண்ணுதற் பெரியோன்
விண்ணோர் தலைவன் வரையொணாச் சீரன்
நண்ணரும் பொற்றாள் எண்ணுவார்க் கெல்லாம்
தண்ணளி பெருகத் தவமா கும்மே
பண்ணிசைக் கிரங்கும் கோவை
விண்ணகத் தாரெலாம் வணங்கிய வாறே 146

(147)

இறப்பொடு பிறப்பிகந் திவ்வுல கிருத்தலே
சிறப்புடை மரபின் அறத்துறை யாமெனப்
பெருநூல் இயம்பப் பலரிஃ தோரார்

தேவ ருலகே முத்திநிலை யென்னப்
பிழைபடப் பேசி நிற்பர்
நகையா கின்றவர் நவின்றிட்ட வாறே 147

(148)

வானுற நிவந்த நீளெரி யோரார்
அலமரல் தவிர ஆணவங் கழற்றி
நலஞ்செய் வேந்தன் கழலிணை யேத்துகம்
கோடுயர் அடுக்கக் கூட்ட மீமிசை
இமய மால்வரை இருக்கையிற் றோன்றும்
தென்னகக் களந்தை யூருள்
பன்னக அணியனைப் பாடமா லறுமே 148

(149)

அறவோர்ப் பழிச்சி அண்ணலடி யேத்தல்
மறவாப் பெரியோர் முறையுறப் பேணிய
திறன்மலி யாகுதி எரியிற் றோன்றும்
வானுயர் அடுக்க நீள்கடை மாடக்
கோயில் நுழைவாய் குறிக்கொண் டெழீஇத்
தில்லை நல்லூர் ஒல்லையிற் சென்மெனப்
பல்புகழ் சேரப் பாடுக
தொல்சீர் எந்தை துணைநின்ற வாறே 149

(150)

பொன்னரங் கெழீஇய மின்னவிர் சடையினன்
முன்வினை பாற்றிய முதல்வற் காண்டிகும்
ஒலிதிரைப் பௌவத் துலகுயிர் தேற்றி
மும்மல நீக்கும் செம்ம லோனே
ஐயா றமர்ந்த மெய்ம்மறைக் கடவுள்
ஐயா என்பவர்க் கையம் நீக்குபு
மெய்யுணர் வூட்டி முன்வந் தருளும்
தொய்யி லுலகும் தருஉம்
செய்ய வேளெனச் செப்பலுற் றேனே 150

(151)

வேண்டுத லில்லான் வேண்டாமை யில்லான்
ஆண்டகை நந்தி அவிர்சடைக் கடவுள்
நான்மறை நவின்ற மேன்மை யோனே
மலரோன் மாயோ னாதிய ரோதும்
நயவுரை எதுவும் வியவா னாயினும்
சிலசொல் நாமும் பயிலின்
நலம்பெறும் நாவென நினைந்த மாறே 151

(152)

நரம்பிசைக் கீத்த வரம்பல கேண்மோ
வரம்பி லாற்றலன் புறந்தாழ் சடையன்
புரம்பொடி யாக்கியும் போற்றினன் மாதோ
ஆற்றே னடியேன் ஐய கோவென
நாற்றிறம் பயின்ற நிரைகேட் டெந்தை
கூற்றங் குமைக்குங் குறிப்பறிந் தீமே
பிரம்புகொண் டோச்சிய நிரம்பா மாறற்குத்
தன்றிறம் தெரித்தா னாக
மன்னுயி ரெல்லா மயர்த்துநின் றனவே 152

(153)

பிறையணி செஞ்சடை இறைவற் காளாய்
மாசில் கொள்கை மக்களொடு துவன்றி
நோற்பார் உயிர்க்கோர் உறுகண் செய்யார்
தவமே லிட்டுத் தலைவனொடு சிவணும்
பெரும்பயன் எய்துவர் பாரகத் தானே
அவரடிக் கன்ப ராகியோர்
சிவனொடும் ஒல்லை சேரப் பெறுவரே 153

(154)

எல்லா வுயிர்க்குநாம் இரங்குங் காலை
நம்மிலும் மேலோன் நமக்கிரங் கான்கொலோ
வலிசால் நிலையின் வார்சடைக் கடவுள்
புலியதள் அரையன் பொல்லா ரிணைமலர்
நலிவொழித் தெவர்க்கும் நீணெறி யுய்த்தென
ஒலிதிரை உலகு காண
ஞெலிதீ விளக்கின் நிறைந்துநின் றானே 154

(155)

அம்புலிக் கீற்றன் அவிர்சடை வேந்தன்
வெங்கன லேந்தி வியன்தில்லை யாடும்
செங்கணன் சிரபுரக் கோயிலு முகக்கும்
அங்கயற் கண்ணியோ டாலவா யுறையும்
எங்கரு ளோங்கு மாயினும்
அங்குவந் தாளும் அறநெறி யானே 155

(156)

மன்னா வுலகிடை மன்னலெவ் வாறெனின்
தென்னா டுடைய சிவன்கழற் காளாய்
மன்னுயி ரெல்லாம் தம்முயி ரென்றெணி
உறுகண் எவர்க்கும் செய்யா ராகி
அருளுரு வமைய வோங்கித் தெருளுற்று
மும்மல நீக்கம் பெற்றோர்
செம்பொரு ளோடு சிவணிய வாறே 156

(157)

கோள்வலிக் காற்றாக் குவலயத் தார்க்கெலாம்
அஞ்சலென் றூக்கும் அருமறை உண்டே
செஞ்சொலால் ஐயன் சீர்பல பாடி
நஞ்சணி கண்டன் நீள்சடை யப்பற்
காட்பட் டிருப்பரேல் அருள்பெற லாகும்
வேள்பட விழித்த எந்தை
தாள்படத் தலையகம் தான்சிறந்த வாறே 157

(158)

ஆல முண்டார்க் கடியவ ராகிச்
சீல நோன்புடைச் சைவருக் காளாம்
நீல கண்டக் குயவரொடு முரணி
அவருளம் தளரச் சீறிச் சிவையொடும்
நீர்த்துறை யாங்கண் நிறையருள் செய்மார்
மீமிசை எழுந்த தோமறு காட்சியன்
மூப்பிலர் சாவிலர் முதல்வனடி யாரெனத்
தெளிவுறக் காட்டுங் குறிப்பின்
இளமை யாக்கிய வளமை யோனே 158

(159)

படர்தரு வெவ்வினை பாற்றுகிற் பாரெலாம்
அடல்வெள் ளேற்றனை அவிர்சடை யப்பனைத்
தடக்கை நான்குடைத் தண்டமிழ் வேந்தனை
ஆறணி இறைவனை அயராத் தலைவனை
மறையோய் பெரியோய் மணிமுடிச் சடையிடைப்
பிறையுடை யோயெனப் பாடிக் குறைதவிர்ந்
தெங்கணும் இசைபெற நிற்பர்
பொங்கொளிச் சிவனார் பொதுநின்ற வாறே 159

(160)

கட்புல னாகாப் பெட்புடை இறைவற்
கன்பர் ஆகுவார் தம்திறன் கேட்பின்
உலகியல் துயரற வோட்டிப் பலவுயிர்க்
குறுதுணை யாகி அருட்டிறம் பயிற்றி
இடையூ றகற்றிக் கடைவழி காக்கும்
மறைபொரு ளொருவனை உளவுவழிக் காண்குவர்
அவன்றுணை யன்றி யேதும்
இவணா காதெனும் இயற்கை யானே 160

(161)

பல்லாறு தேரினும் பெருநூல் விரிக்கினும்
மல்லன்மா ஞாலத்து நெறியெலாம் பயிலினும்
உளவுவழித் தேர்ந்த மெய்யறி வூக்கி
எல்லா வுயிர்க்கு மிரங்கி யருள்கெனும்
நல்லாறு தெரித்த நான்மறை யோன்கழல்
ஒல்லைசென் றேத்தி னல்லது
வெல்லுத லொல்லுமோ வெவ்வினைத் திறலே 161

(162)

நீளெரி யாகி நமிர்ந்தார்க் கெம்மிடைக்
கோள்வலி நீக்கலும் கூடாது கொல்லோ
ஆட்பட் டரனடிக் கீழமர்ந் தோரெல்லாம்
கேளென ஆண்ட கூத்தன்
தாள்மலர் எற்குத் துணையாய வாறே 162

(163)

அயிற்படை யேந்திய அயராத் தடக்கையன்
எயில்பட நக்க ஈர்ஞ்சடைக் கடவுளென
மயிலிவர்ந் தருள்வோற் பழிச்சி வயின்வயின்
இன்மொழி பலகொண் டேத்த நன்பல
வேண்டியாங் கெவர்க்கும் விரைந்தளிப் போனவன்
யாண்டும் இனியவே பெருக்கும்
ஆண்டவன் பழநி அமர்ந்திருந் தோனே 163

(164)

மிடற்றினுக் கணிகறை அகலக்குச் சிவப்பணி
அடியவர்க் கணியே ஆலயச் சிவப்பணி
பெருக்கத்து வேண்டப் படும்பெரும் பணிவொடு
மறைமுத லோனடி மலர்பணி வீரெனும்
அறிவர் மணிமொழி தேர்க
பிறிதிவண் வாராப் பெற்றிவேண் டிடினே 164

(165)

செய்த பிழைக்கிங் கேங்குவன் கொல்லோ
செய்யாக் குறைக்கே சிதறி அதிர்வனோ
மைதீர் ஒழுக்க நெறியறி யேனாய்ப்
பொய்மலி யுலகிடைப் புலம்புற் றெய்த்தேன்
ஆனாத் துயருற் றிரிந்தேற் கிரங்கென
ஐயாற் றரன்கழல் பாடுவன்
தொய்யி லுலகம் எய்துதற் பொருட்டே 165

(166)

வாலறி விறைவன் சேவடிப் பெருஞ்சீர்
நூலறி வாளர்க்கும் நுவல லானா
உலகியல் வழக்கிற் பயின்றிசி னோர்வயின்
கரவும் மயலும் பெருக லல்லது
உள்ளகக் கவற்சுமை கழற்ற லொல்லுமோ
பற்றறப் பெரியோன் பொற்கழற் பேரிசை
தெற்றெனத் தெளிய லுற்றார்
நற்றவத் தோரிடை நண்ணமா லறுமே 166

(167)

பிறவி நீந்துதற் குறுதுணை கேட்பின்
பிறையணி கொன்றைப் பிஞ்ஞகன் தாள்மலர்
மறவாப் பெற்றி முறையுற நிலைஇக்
கறைமிடற் றிறையுறை கோயில் நண்ணி
மறைநான் கருளிய முதல்வ போற்றி
குறைதீர்த் தாளும் கொற்றவ போற்றி
நிறையருட் செல்வ போற்றி போற்றியென
அறையுநர்க் காகும் அணிபல
நறைவெள் ளேற்றன் நல்கிய வளனே 167

(168)

உலகினர் ஓராத் தலைமையோற் பேணி
அலகில் ஆற்றல் அளப்பரும் அறிவன்
யாங்கணும் நிறைந்தோன் எனப்பல வேத்திக்
காசில் மேனிக் கவலா நோன்பின்
தன்வய நிற்போன் பன்னருஞ் சீர்த்தி
பாடுத லல்லது பிறிதொன் றிலமே
செய்ய வார்சடை
ஐய னாரடி
உய்யு மாறருள்
செய்யு நேர்மையால்
கைவிட லில்லாக் காவ லேயென
மெய்யுணர் வெய்திய முதல்வற் காண்டிகும்
சைவநன் னூல்வழி நின்றார்
தொய்யில் உலகம் தேர்ந்துய்ந்த மாறே 168

(169)

வல்லோன் சிவனடி வாழ்கெனப் பாடிச்
சொல்லாப் பெரும்புகழ் சொல்லுகிற் போரெலாம்
காலற் காய்ந்த கால்விறல் திறலொடு
காற்பெரு விரல்கொண் டரக்கற் செற்ற
பெருஞ்சீர் உரைப்பர் பண்டொரு கானிடை
முனிவரர் வேள்வி முறித்ததும் விரிப்பர்
ஆணவம் சாய்க்கு மவன்கழல்
பேணிய சென்மெனும் நீணெறிக் குறிப்பே 169

(170)

முருகலர் கொன்றை முதல்வனொடு விரைஇய
அறுபான் மும்மையர் அடித்தொழும் புரைக்கெனின்
அருங்கலப் பெரும்பணித் திருநீல கண்டர்
இல்லை என்னல் இல்லா வியற்பகை
எல்லோர்க்கும் வளந்தரும் இளையான் குடியர்
பொய்வே டத்தரும் தமரெனு மெய்ப்பொருள்
அறவோர்க் கொருவுதல் புறகெனும் விறலர்
துலைக்கோல் கோவணத் தெதிரமர் நீதி
கோடரித் தொண்டர் வாளெறி பத்தர்
நீறுகண் டிகல்தீர் ஏனாதி நாதர்
எண்ணா வன்பிற் கண்ணப்ப தேவர்
கருவறைப் பணிக்காக் கயிறிழு கலயர்
என்றிவர் வரிசை இன்னமுங் கேண்மோ
மின்றயங் கவிர்சடை யுள்கி
வயினெழுந் தமைந்த வண்மை யோரே 170

(171)

மகட்குழ லரிந்தீந்த மானக் கஞ்சாறர்
தெரியாப் பிழைக்கழுங் கரிவாட் டாயர்
பெருகு நாண்மலர்ப் பணிசால் முருகர்
ஆலவா யாண்ட அகிற்கல் மூர்த்தி
அருந்தவ நீர்நிலை உருத்திர பசுபதி
நீளெரி கலந்த நாளைப் போவார்
துவரார் காழகம் துவைஇய குறிப்பினர்
பிழைகண் டத்தர்தம் தாளெறி சண்டி
உழவா ரப்பணித் திருநா வரையர்
இவரனை யார்சீர் இன்னம் தேர்கெனத்
தவறாச் சிவப்பணி யூக்கிப்
பவக்கடல் நீந்தினோர் பேரிசைத் தீமே 171

(172)

வேந்துபடு மலச்சிறை விலக்கிய குலச்சிறை
ஆரூர் நம்பி அடிதொழு மிழலை

ஆடரங் ககலாக் காரைக்கா லம்மை
ஆமூ ரரசர்க் கன்பரப் பூதி
இலங்குரு ஊதுவாய் களங்கெனும் நக்கர்
நீர்விளக் கெரித்த நிறையரு ணந்தி
குண்டர்தம் மிண்டுகண் டிளையாக் காழியர்
நம்பி துரிசுக் கழுங்குகலிக் காமர்
மெய்ம்மறை விரித்த மூல நாயனார்
தொண்டுகண் திறப்பத் துயர்தீர் தண்டி
எனவிவ் வரிசை முனைநாட் டொடங்கி
அனைவரும் உய்ய வூக்கிய
முனைவர் பலர்யான் மொழிந்த மாறே 172

(173)

வியப்பா கின்றுசிலர் வம்புசெறி யருட்பணி
மூர்க்கரா மொருவர் முதல்வர்க் கன்பர்
மறவியல் தயங்காச் செங்காட் டடிகள்
கல்லெறிந் துள்ளகம் நிறைவுறு சாக்கியர்
உவர்மண் காணினும் சிவமெனும் சேரர்
செருவீழ் சடைத்தலைக் கெரிபுகு சோழர்
இன்னோ ருலகியல் ஒட்டா ரென்னினும்
இறைவர் தாளிறை மறவா ராக
மறையோர்க் கீத்த வண்மையின்
குறையா நிலையகங் குறுகி யோரே 173

(174)

ஆகுதி நிறையருட் சோமாசி மாறர்
தொண்டர்கணம் பயிற்றிய தொல்சீர் நாதர்
கூத்தர் கழலே முடிகொள் கூற்றுவர்
அறப்பணி ஒழுக்கி னகலாச் சிறப்புலி
அடியவர்க் கெல்லாம் அருள்நர சிங்கர்
இவரே யன்றி யின்னங் கேண்மோ
பவமாக் கடல்புறக் கொழியச்
சிவனார் அடிமலர் சிவணிய நிரலே 174

(175)

நம்பர்க்கு மீத்த மீன்பத்த நுளையர்
அடியரை ஒதுக்கல்கண் டாற்றாக் கம்பர்

தொண்டியல் விளக்க விளக்கிடு கலியர்
தீமொழி புகல்வோர் நாவறு சத்தி
பாடற் பணியுடைக் காடவர் கோமான்
முடிவிளக் கெரித்த கணம்புல்ல நாதர்
கோவை பாடிக் குவைபெறு காரியொடு
புகலியர்ப் பேணிய பாண்டி நாட்டிறை
உள்ளமே கோயிலாக் கொண்டசீர் வாயிலார்
பாசறை யூக்கிய பொருட்பணி முனையர்
அன்ன மாட்சியர் இன்னங் கேண்மோ
கவற்கடல் நீந்துபு சென்று
சிவக்கடல் திளைத்தார் சிறப்புற்ற வாறே 175

(176)

எருத்தமர் வார்கழல் கருத்து ளிருத்தும்
செருத்துணை புகழ்த்துணை இடங்கழி கோட்புலி
வளவர் பாவை வரிச்செங் கண்ணன்
பூச லார்கழற் சிங்கரொடு நேசர்
காழியர்க் கன்பர் யாழிசைப் பாணரென
முன்செய் தவமலிந் தோங்கிய
தென்னர்தம் அடிமலர் தேர்கநன் னெஞ்சே 176

(177)

விடையூர் செல்வர்க் கடித்தொழும் பிகவாச்
சடையர் ஞானியர்க் கருள்மக வென்ன
நாவலூர்ப் பிறங்கிய நிறையருட் புலவர்
ஆல முண்டார்க் கணுக்கத் தொண்டர்
நம்பிதன் நாநல மேத்த
எம்பி ரான்கழற் கேகலு மாமே 177

(178)

முக்கட் செல்வர் முனிவரர் தலைவர்
செக்கர் வானிற் செழுந்தார் மார்பர்
அக்கரை யார்த்த அவிர்சடை வேந்தர்
தக்கன் வேள்வி தகர்த்தா ரெனினும்
அகந்தை நீக்கி அருளு நீர்மையர்

பகன்றைப் பல்பூக் கணநிறைந் தொளிரும்
களந்தை யூருட் கந்தன்
வளந்தந் தோச்சிய வாழ்த்துகம் பலவே 178

(179)

ஏற்கவும் படுங்கொல் இதுதொண் டாமெனப்
பாற்கட லோனு பனிமலர்த் தேவனும்
பாரகத் தோரும் பணிந்தெழு காலை
கூற்றுவர் வெருட்டல் தேற்றா தேமும்
நாற்கவி கொண்டடி போற்றுபு நிற்றல்
ஏற்றுயர் கொடிச்சீ ரெந்தை
ஆற்றிடை நிலவம் அணிந்தோற் கெனவே 179

(180)

முன்வினைக் காற்றாச் சிறியேம் கொன்னூர்
மாய வாழ்வியல் வெருட்டக் காயம்
தளர்ந்தேம் உள்ளகம் தானுழந் தெய்ப்ப
யாதினி செய்வேம் எனல்கேட் டிரங்குதி
வேத முதல்வ விரிசடைப் பெரியோய்
ஏதுநாம் சூழினும் சூழ்ந்துமுன் துயர்செயும்
ஊழ்வினை யான்மிக நைந்தேற் கருள்தரக்
கேழ்கிளர் அகலக் கடவுள்நீ விரைதி
அடியேம் கவற்சுமை தாங்கல்
ஆற்றா நிலைகண் டேற்றுவந் தருளே 180

(181)

மூவர்க் கரிய முழுமுதற் பெருஞ்சீர்
யாவரும் தேர்தல் யாங்ஙன மோவெனின்
மும்மலஞ் சாய்ம்மா ரெழீஇ இம்மையுள்
அம்மை யப்பற் காளென லாகும்
உயிர்த்திரட் கிரங்க லாற்றின் செயிரற
மாயையொடு வல்வினை ஒயு மாகலின்
ஆணவங் கழற்று மையன்
பேணிய நின்றார் பெட்டுறற் பொருட்டே 181

(182)

தக்கற் சாய்த்த முக்கட் கடவுட்
கொக்க நிற்பார் ஒருவரு மிலரே
அக்கரை யதளுடுத் தாடும் செல்வர்
பக்கநின் றாரும் அறியார்ப் பாடுமின்
எக்கர் மணல்செறி இருங்கடல் வரைப்பின்
செக்கர் வானொடு சிவணிய ஞாழல்
கொழுநிழல் அசைஇய சேவடி
தொழுதெழ வல்வினை தீருமா லெனவே 182

(183)

வெளிப்படக் கிளத்தலும் ஒல்லுமோ களிப்பருள்
ஒளிப்பிழம் புள்ளுறை ஒளிக்கவும் படுமோ
அளிய னல்லனோ ஆல வாயன்
யாரே யாயினும் எத்துய ருறினும்
கொடுவினை யலைப்புட் படாஅர் நெடுநாள்
அல்ல லறுப்போன் ஒல்லென வெழீஇ
நல்லவே உலகர்க் கீயும்
தில்லை யூரன் துணையீந்த மாறே 183

(184)

வடவர் நாட்டிடை இடந்தேர்ந் தடியவர்
வயினெழுந் தருத்திய வட்டிற் பால்வழி
வெள்ளை உள்ளகம் விளக்கிய காணூஉச்
செயிரறு மேனிச் செம்பொருள் தெரிமோ
அங்கிங் கென்னா தெங்கணும் நிறைந்த
திங்கட் சடைமுடிப் பொங்கொளிப் பெருமான்
யாவரும் அறியா இயல்பினன் மூவரொடு
தேவரும் மண்ணகப் பொறிவல் லாரும்
ஆய்த லானா தலமந்து நிற்ப
நிலவுல கெல்லா முணரக் காட்டிய
அலகில் சேவடி அரற்றக் கேட்டிகும்
வேதப் பொருளுரை விளக்கி
ஆதனே னெற்கும் அருள்தந்த வாறே 184

(185)

கோடா நெஞ்சன் தீவினை செய்யான்
கேடுறல் அரிதிஃ தறிகெனப் பாடிய

பொய்யாப் புலவன் வாயுறை தேரீர்
கோடா நெஞ்சம் கொண்டா ரெல்லாம்
தோடார் செவியன் தூவெள் ளேற்றன்
ஆடரங் கையற் காட்பட் டோரே
தீவினை யஞ்சலும் வஞ்சம் தவிர்தலும்
மேவுநற் றவமெனக் காட்டி
யாவர்க்கு மேலோன் எமையாண்ட வாறே 185

(186)

வெம்பவ நீக்க விழைகுவி ராயின்
மலர்தலை உலகில் மலவலை பிழைத்த
செம்மை யாளரொடு சிவணிய நோன்பின்
எம்மான் திருக்கழற் கெழீஇய ரோவெனத்
தம்பால் அணைந்த திருநெறி யார்க்கெலாம்
ஒல்லை உய்நெறி தெரித்துத் தில்லையுள்
நாடகங் காட்டுஞ் சீரடி
கூடுகம் என்பார்க் கன்பராய்ச் சென்மோ 186

(187)

யாமே பரமெனல் எப்பொருட் டோவெனில்
தொல்லுயி ரெல்லாம் தலைவனடி பேணி
வல்வினை தீர்ந்த ஞான்றின் ஒல்லெனக்
கடவுளோ டிரண்டறக் கலத்த லுண்மையின்
யாமும் இறையாந் தன்மை யோமெனும்
குறிப்பி னதுவே யல்லால் இறைவற்
கின்றே நாமொப் பென்னல் ஒல்லுமோ
இன்றே ஒப்பென் பாரெலாம்
ஐந்தொழில் என்னைகொல் ஆற்றாத வாறே 187

(188)

என்னென் கோவினி மின்னவிர் சடையன்
முன்னம் அணிந்த முதுகாட் டெலும்பொடு
வெள்ளெருக் ககலம் சூடி ஒள்ளரித்
தில்லை பாலை அல்லிமென் காந்தளெனத்
தண்பூத் தொட்ட வண்கைத் தொண்டர்
முல்லை அரளி எல்லவிழ் கொட்டியும்

கொன்றைக் கண்ணி இடையிடுபு பிணைத்த
பன்மலர்த் தார்நாம் கொள்வேம் காணெனப்
பெருகுநல் லருளியல் காட்ட
முருகலர் நறுவீ மிலைந்த மாறே 188

(189)

அணிசடைக் காம்பணி ஆரமும் பணியே
துணிவெண் டிங்கள் தலைக்கணி யாமே
ஏறேறு செல்வர்க்கு நீறுநல் லணியே
ஆறணிந் ததளரைக் கசைத்தார்
வேறெதும் வேண்டா விரகினர் தாங்கொலோ 189

(190)

சிற்றுயிர் துயருறின் எற்றென் றிரங்குவர்
மற்றையோ ருளமகிழ் வுறுத லூக்குவார்
நற்றவ முனிவரின் நிலைஇய பெற்றியர்
கற்றநன் னூலு ளெல்லாம்
தெற்றென நமக்கிது சொலப்பெற்ற வாறே 190

(191)

பைய ராவிவர்
மெய்ய ராமிவர்
செய்ய வார்சடை
தொய்வ கற்றலால்
உய்வு மாறருள்
செய்யு நீர்த்தென
ஐய மின்றியே
மையல் தீர்மினோ
தையல் ஒரிடங் கொண்ட
ஐய னார்க்குநா மாளா குவமே 191

(192)

சிறுநகைக் கெழுந்த பேரெரி யாலெயில்
ஒருநொடிக் கொழிந்த துணரார் கொல்லோ
பல்வகை அமரர்க் கெல்லாந் தலைவன்
முழுமுதற் செல்வன் மூவாப் பெற்றியன்

பிறவான் இறவான் பேசாச் சிறப்பினன்
எண்ணாச் சீர னாயினும் எண்ணில்
மண்ணகத் தார்க்கெலாம் மகிழ்பல செய்யும்
எம்பிரான் கழலிணை யிருக்க
வம்ப ராருழைச் சேறலிங் கெவனோ 192

(193)

எஃகுவலன் திரித்த இமையா விழியினன்
அஃகா நன்பல அளைஇ வெஃகாப்
பெருநெறி யாளர்க் களிப்பன காணூஉ
முன்னூல் விரித்த முறைதெரிந் தவர்வயின்
அருந்தமிழ்ப் புரவலன் முருக வேளடி
பொருந்துபு நிலைஇய ரென்னத் திருந்திய
அறநெறி வகுப்பன கொண்மோ
புறநெறி யாளர்செய் புன்மைதீர்ந் திடவே 193

(194)

உயிர்த்திரள் காக்கும் அயில்வேற் காமென
இலங்குநற் றமிழாற் புனைந்தபே ரலங்கல்
பண்ணொடு விரைஇப் பாரோர் மகிழ
மின்னியற் கருவிகொண் டின்னிசை நல்லோர்
ஒலிப்பதி வூக்கி உலகிடை விடுப்பரெனத்
தெளிந்திசி னோர்பலர் தேரக் கேட்டிகும்
சொல்லாச் சீரிற் றில்லியூர் நாப்பண்
எழுமுரு கோன்வரை இனைத்தென லாமோ
ஒண்டிறற் குறிஞ்சி வேந்தன்
பண்டுபோ லின்று பயிலிய நெறியே 194

(195)

யாரே என்னினும் எந்நா டெனினும்
நீர்ச்சடை யெந்தைதாள் நேர்பட வேத்தின்
சீர்பல வாகுமெனச் செப்பலுற் றேனே
தண்ணளி யுருவன் விண்ணோர் தலைவன்
உரையகங் கடந்த ஒள்ளெரிப் பிழம்பின்
வரையாப் பெருந்திறல் வண்மை யோனே
விரையார் விரிசடை யான்கழல்
விரையுநர்க் கெல்லாம் கரையுமென் னுளமே 195

(196)

வெள்ளே றுகந்த விரிசடை யப்பர்
தள்ளா விளையுள் தில்லி யாங்கண்
அருளுருக் கொண்ட முருக மாமலை
நண்ணுவோர்க் கெல்லாம் நலமா கும்மே
பண்ணிசை நல்லார் பலர்வந் தேத்தும்
ஒண்டிறல் நெடுவேட் காளாய்
அண்டினி ராயின் ஆம்பிறப் பறலே 196

(197)

பிறைசேர் செஞ்சடை மறையோற் பழிச்சிக்
குறையா நல்லிசைக் கறைமிடற் றோயெனத்
துறைதொறும் துறைதொறும் செல்வோர் நிறைவுற
வரையா வண்கை வேற்படை யோச்சித்
தலைநாட் போலும் தண்ணளி
வலைக்காட் படுவர் வழக்கறிந் தோரே 197

(198)

தவறா நோன்பின் தலைமை யோர்வயின்
சிவனார் அருளிய செம்பொருள் காண்மார்
பவச்சுழல் தவிர நீந்திக் கவலற்று
மெய்யுணர் வாளரொடு சிவணிய நிற்றற்குச்
சிவநெறி விளக்கம் தேர்க
அவலப் பிறப்பறல் நுதலினி ரெனினே 198

(199)

சில்பலிக் கென்று பல்லி லூழப்போன்
சொல்லாக் குறிப்பினின் றுணர்த்திய சொல்கென
நல்லோர் பலர்வேட் டிரங்கக் கேட்டிகும்
கல்லா னிழலடிக் குரவர் பெருமான்
வல்வினைத் திறலற வேண்டுநர்க் கெல்லாம்
அருள்நெறி விளக்க லாயினன்
பொருளிது காண்கெனப் புகட்டிய வாறே 199

(200)

தில்லி எல்லையுள் திரிதர எழுந்த
வெல்போர் வேலற் பழிச்சிய நாவினர்
விழாநாட் கண்ட வரிசை கேண்மோ
இருமூன்று அளவைக் கூன்பிறைக் காலத்துச்
சிவனடிக் கன்பரார் பலருடன் விரைஇக்
கூத்தரும் பாணரும் குறியுரைக் குநரும்
தேத்தமிழ் வல்ல திருமிகுந் தாரும்
தம்தொழில் முடிமார் துணைபெறல் நுதலி
மூவா முதல்வ மயிலூர் செல்வ
சாவா மருந்துடைச் சிவநெறித் தலைவ
இரங்குநர்க் கீயும் பரம்பொருட் டேவே
நலம்பல பெருக்கும் பொலம்பூட் சேஎய்
எனமிக வேத்தக் காண்கம்
வினைப்பவம் தீர்க்கும் விழைவி னானே 200

பகுதி - 3

(201)

அவிர்சடை யாரடி அன்பொடு பரவும்
திருமுறை வரிசை தெரிக்கப் புகினே
காழியர் வகுத்த கனிவுரை மூன்றும்
நாவுக் கரசர் நவிலிசை மூன்றும்
ஆரூர்த் தேவர் அணிநூ லொன்றும்
பெருந்துறைப் பிள்ளை அருந்தமிழ் ஒன்றுமென
ஒன்பா னாருரை ஒன்பதொடு விரைஇ
மூல னார்மறை பத்தென வாகப்
பதினொன் றாக்கியோர் பன்னிரு மெய்யர்
பன்னிரண் டென்னக்கொள்வர்
தொண்டர்சீர் விரித்த தேவர்வாய் மொழியே 201

(202)

ஊழி முதல்வன் உணர்த்திய மெய்ந்நெறி
ஏழிரு நூலா னியம்பக் கேட்டிகும்

போதஞ் சித்தியோ டுண்மை விளக்கம்
உண்மைநெறி உந்தி களிறுசங் கற்பம்
அருட்பயன் இருபா இருபது கொடிக்கவி
பிரகாசம் தூது பஃறொடை வெண்பா
என்றிம் முதுநூல் இனிதறிந் ததற்பின்
துகளறு போதம் சிவானந்த போதம்
சிவஞான தீபம் ஒழிவி லொடுக்கம்
கூறொணாச் சீர்பரி பூரணா னந்த
போத மென்பவும் பயின்று
தீதறு சிவநெறி தேர்கநன் னெஞ்சே 202

(203)

பல்லிணர் விரித்த பகன்றைக் கண்ணியொடு
மெல்லியற் காமெனத் தில்லையுஞ் சூடும்
சொல்லாச் சிறப்பினற் காணிய விரைஇச்
செலீஇய ரோவெனச் சிறந்திசி னோர்வயின்
நல்லா றுணர்ந்தன மாகத் தொல்வினைக்
கடுந்திற லோய்ந்தன கழன்றிரிந் தெனுமிது
பலர்வாய்க் கேட்டிகு மல்லமோ மலர்க்கணைச்
சிலைவேட் குருவுக விழித்த
பெரியோன் கழலிணை பேசுகம் பலவே 203

(204)

வரியிண ரூழ்த்த விரைமலர்க் கண்ணி
விரிசெஞ் சடையிடை ஒளிருங் கூத்த, நின்
பேரருட் டிறமிவண் யாரறி குவரே
அறியாத் தமியராய் அலைஇ யோர்க்கும்
குறைதீர்த் தூக்கிய பிறைநுதற் கடவுள்
விழிப்புல னாகா னாயினும் தொழில்மிக
அளியன் ஆயினன் காண்க
நளியிரு நிலத்தேம் நயந்துய்ந்த மாறே 204

(205)

காடகங் கொல்லோ நாடகங் கொல்லோ
வீடகங் கொல்லோ வினையேற் கொடுக்கம்
வாடா வுலகம் வழங்கு வோனடி

தேடா திரிந்து துயர்நனி யுழந்தேன்
மன்னுயிர்க் கிரங்கல் மறந்ததிங் கெவனோ
மறந்தே னாயினும் புறந்தள் ளாதே
யான்செய் பாடலும் கேட்கும்
தேன்செறி கொன்றையன் தேர்கநன் னெஞ்சே 205

(206)

அங்கயற் கண்ணியோ டால வாயுள்
பங்கயச் செல்வனும் பணிந்தெழ நின்றோன்
இமயா நாட்டத்து உமையாள் பங்கினன்
எமையாள் பவனென் றேத்தி இமவரை
இருக்கை நச்சிய ஈர்ஞ்சடை வேந்தற்குத்
தண்டமிழ் நூல்பல செய்கம் கண்டீர்
எழுத்துவரை இகந்தோ னாயினும்
வழுத்துவோர்க் கருளும் வண்மை யோனே 206

(207)

மாலுங் காணா மணிமிடற் றான்கழற்
காளாம் சைவத் திருவினர் அப்பர்
சூலை யுழந்தே மீண்டா ரெனறகிங்
ககச்சான் றேதும் காணகில் லேமே
அமணர் வாழ்க்கையிற் பிழைபல காணூஉச்
சொல்லும் செயலும் ஒவ்வாக் குண்டரின்
ஒல்லை நீங்கிய ஒளிநெறி யார்சீர்
பொறாஅ ராகிய புன்மையர் அவர்மாட்
டடாஅத செய்ம்மார் அடிசிலொடு விரைஇய
வஞ்ச நஞ்சால் குடர்நலிந் தாரே
யாங்ஙனங் கொல்லிது நீரறிந் தீரெனின்
அதிகைப் பதிகத் தரனடி நொடியும்
நினையா திருந்திலே னென்ற வாறும்
சலம்பூ தூபம் மறவா நிலையும்
பேசிச் சூலை போக்கலின்
சிவமே என்றுமவர் சேர்ந்திருந் தாரே 207

(208)

உழுதுண லாற்றா துழிதரு வோர்க்கெலாம்
தொழுதுண லல்லது தேரலொன் றிலையெனும்
பழுதில் கேள்விப் புலவற் காண்டிகும்
வழுதி கூடல் வான்றோய் புரிசை
எழுநிலை மாடத் தெழீஇய பிரானும்
உழவ மாக்கட் குழையிருந் தானா
வழுவில் மேழி யன்றே
உலகர்க் காக்கும் ஓங்குபுகழ்ப் படையே 208

(209)

அயன்மாற் கரிய வியனெடும் குரிசில்
ஆல வாயன் அவிர்சடைக் கடவுள்
உலையாச் சீரின் அலைவாய்க் கோயிலொடு
மலைவாய்க் கவாஅன் முன்னிக் கலைமலி
வடநாட் டேரகத் திடங்கொண் டானெனப்
பல்லாற் றானும் ஏத்துகம்
நல்லாறு தந்த நம்பிகாண் கெனவே 209

(210)

துடிகை யேந்தினார்க் கடிய ராயினீர்
முடிகை கூப்பவே படிற தோயுமே 210

(211)

ஊறெதும் வாரா துலகர்க் காக்கும்
ஆறெழுத் தமர்ந்த வையற் காண்டிகும்
பெரும்பெயர் முருக பீடுசால் இறையென
வெண்ணீ றணிவார் வினையகன் றாரே
அருள் நெறி யகத்து ளோங்கத்
தெருள்மலி கொற்றம் தேர்ந்த மாறே 211

(212)

பையர வொடுநில வணிவெண் ணீற்றன்
பொய்தீர் யாக்கைப் பெரியோற் காண்மின்
வையகம் உய்ய வூக்கிச்
செந்நெறி விளக்கிய சிற்றம் பலத்தே 212

(213)

நறவுமிழ் கொன்றைப் புறந்தாழ் சடையன்
அறவோர்க் கருளும் ஆல வாயன்
பிறவோர் பிறவியும் வாரா தேற்ற
பிறைமுடி யானடி பேசுகம் வம்மோ
நன்றே யுள்கி நின்றார்க்
கன்றே யருளும் ஐயனவ னென்றே 213

(214)

முந்தை இழைத்த மயல்செறி தொடர்பெழு
வினைவயின் இனைய லகல நினைஇ
அனலேந் திறைவற் காளா யினமே
ஆளா யினவர் யாரே யென்னினும்
பிழைநோக் காதருள் பிஞ்ஞகப் பெரியோன்
அடைக்கலம் தரூஉம் இடக்கழல் காண்கெனக்
குறிப்பருள் கையன் கூறாச் சீர்பல
அறிதுநா மென்னிற் சிறிதும்
அஞ்சலொன் றில்லையிவ் வகனிலத் தானே 214

(215)

பையர வணியன் மெய்ந்நிறை பொடியன்
மெய்யுணர் வதனொடு பொய்தீர் யாக்கை
வையகத் தோர்க்கருள் செய்ய மேனியன்
மேலோ ரெவர்க்கும் மேலா யினவன்
மருங்கி னோடா மறையோர் ப்பேணிக்
கேடொன் றணுகா தாளும்
பீடுடை யானைப் பாடுகம் வம்மோ 215

(216)

கறைசேர் மிடற்றன் கால காலன்
மறைசொல் நாவன் நிறையரு ளாளன்
குறையா நல்லிசைக் கொன்றையங் கண்ணியன்
அறைத லானாப் பெருநீர் மையனே
பிறைமுடிச் சடையோ னென்ப
புரைதீர் கேள்விப் புலவன் மாரே 216

(217)

நான்மறை தேர்ந்த நீணெறி யாளர்
பல்லோர்க் கருளுரை பயிற்றல் கடனே
பயின்ற ஒழுக்கிற் பிறழா வாழ்க்கை
ஆர்கலி யுலகர்க் கமைவரு கடனே
தொல்வினைத் துயரற வீட்டி ஒல்லென
நல்வழி காட்டல் அறிவர்க்குக் கடனே
பாம்பணி யீசன் பொற்கழல்
நாம்பணிந் தேத்தல் நந்தலைக் கடனே 217

(218)

நல்லவே எண்ணியும் நமருட் பலரிவண்
அல்லலுற் றலமரல் எவனோ சொல்கெனின்
தொல்வினைத் தொடர்பிஃ தன்றியும் கல்லென
இரங்கா உள்ளத்துப் பிறங்கிய தெனலே
தீதெதும் இயற்றா ராயினும் ஒல்லைசென்
றாருயிர்க் கருள்செய மறந்து
பேதுற் றொழிந்த புன்மையா னெனவே 218

(219)

நகுதக் கனரே இகல்வினைப் பவவழி
வெகுநா ளாய்ந்தும் விளக்கங் காணார்
பகுத்துண் டுய்தல் தேரார் பலரே
வகுத்தான் ஊக்கிய சிவநெறி யிதுவென
நன்னூல் பலசொலக் கேட்டும் பன்னாள்
அருள்வழிப் படாராய் அலமந் தாரே
அருள்வழிப் பட்டா ரெல்லாம்
இகத்திற் றானே எழில்பெற்ற வாறே 219

(220)

அறவே லோச்சிய திறன்மலி இறைகழல்
மறவே லென்றார் மொழிந்தன கேண்மோ
அவிர்சடை ஆணையின் தவிரா அண்டம்
நூறுநூ றடுக்கின் விரிந்துவிரிந் தகலினும்
அரியோய் பெரியோய் ஆலவா யோயென
விரிநூன் மார்பற் காளா யவரெலாம்
ஊரும் கேளிரும் உடையார் ஆவர்

ஆரும் தேரா இயல்பின்
நேரூர் பவனொடும் நிலைஇய வாறே 220

(221)

மெய்யுணர் வில்லார் மாண்பய னெய்தார்
ஐயுணர் விருந்தும் அல்லற் படுவரெனத்
தெய்வப் புலவர் தெரித்தன விரிக்கின்
மருளின் முதற்றே பிறப்பென லாகும்
நில்லா தனபல நிலைஇய என்னும்
மருள்கெடிற் கெடும்பிறப் பென்றார்
தெருளுரை யானே தெளிவுற்ற வாறே 221

(222)

வெகுசினம் அலைப்ப வீறுகொள் வேந்தர்
இகல்வேற் குண்டரொடு மலைஇப் பகல்பல
பெருந்துய ருழந்த காண்டிகும் அருந்தவர்
நல்லா றுய்ப்ப அருள்வயின் பலர்வந்து
சொல்லாச் சிறப்பிற் சிவணலுங் கண்டாம்
அறத்தா றிதுவென் றறிந்தா மன்றே
பொறையுடை யாரே பெரிய ராகலின்
பிறவுயிர் போற்றல் தானே
நிறைக்குமென் றுயர்ந்தோர் நவின்ற மாறே 222

(223)

ஈயா திவறுதல் மாயப் பிறவி
வித்தென விரித்த வண்டமிழ்ப் பெரியோன்
ஈதல் உவத்தல் இசைபட வாழ்தல்
சாவுந் தவிர்தற் குரித்தெனத் தெரித்தனன்
மாயை யொழிமார் மண்ணக நண்ணி
வையை தந்த விரிமணற் பரப்பின்
செய்ய வார்சடைக் காளா யினர்பலர்
மெய்யுணர்ந் தெழுந்த மணிமொழி அந்தணர்
நெஞ்சுகு நற்றமிழ் நேர்ந்தார்
அஞ்செழுத் தோதி அருள்பெற்ற வாறே 223

(224)

பாரோர் தலைவன் பனிச்சடை யீசன்
தேர்மகி ழிருக்கை யாரூ ராங்கண்

அறிவ ரீண்டிய அரண்குறு கேனாய்
நன்னெறி தேரா உலுத்தரொடு விரைஇக்
கொன்திரிந் துழன்ற புன்மை யேற்கும்
வலிந்துவந் தீத்த வள்ளல்
பொலிகழற் கென்கொல்யான் செய்கைம் மாறே 224

(225)

முன்வினை அவிழ்த்தலும் பின்வினை பிசைதலும்
தன்னைநன் குணர்ந்தார்க் கல்லதொல் லாதெனத்
தமிழ்மூ வாயிரம் தெரித்த தறிந்தேம்
தன்னை யுணர்வார் உன்னலும்
சென்னி சேர்க்கும் சிவன்சே வடியே 225

(226)

(தில்லியுள் முருகன் ஆலயம்)

ஓங்குபுகழ்ப் பொருநைப் படுகை கல்லி
வடவர் வடித்த தடந்தோட் படிமம்
நிறீஇய தில்லி முருகமர் வரைக்கண்
யாவர் செல்லினும் ஆவது நலனே
பகடுகொண் டுகைக்கும் பண்டகச் சாகாட்டுச்
சீழ்மரம் பிணித்த அச்சின்
ஏமத் தன்னவவன் இருங்கழற் புணையே 226

(227)

புல்லுணா வன்றிப் பிறதீ தென்னும்
ஆன்றோர் நல்லுரை தேரா ராகிப்
பெரியம் யாமெனப் பிதற்றித் திரிதந்து
நிணம்செறி வல்சி குரம்பையுட் பெய்வார்
பிணந்தின் பாரின் வேறல் லவரே
உயிர்ப்பொரு ளனைத்தும் ஊறின்றி வளர்ந்துய
இறைவ னன்றே முறைவகுத் தானிஃ
திறையும் நினையா தலைவிலங் கேய்ப்ப
வளருயிர் பலவும் வளர லொட்டா
திடைமறித் துண்ணுநர்க் கானின் கடைவழி
என்னா வதுகொல் இவர்க்கென நாணித்

தொன்னூல் சிவநெறி வழங்கும்
தென்னாட் டவரினைந் திளைத்த மாறே 227

(228)

பேசாச் சிறப்பிற் பெரியோன் கழற்சீர்
பேசலெவ் வாறோ பேசென் குவிரேல்
ஆசில் நற்றவா என்னுமின் ஆருயிர்
புரத்தல் ஓவாப் புனிதா என்னுமின்
பேரருள் ஒளியே அளப்பரும் ஆற்றலின்
துளக்க லாகாத் தொல்புக ழோயே
பிழைபொறுத் தாள்கெனப் பாடிக் குழையின்
மழையென வந்து காக்கும்
இழையொரு பாகத் தெந்தை தானே 228

(229)

உலகம் படைத்த ஓங்குபுகழ்க் கடவுட்கு
உலகிடைப் பிறவி உரைக்கவொண் ணாதே
அளவிகந் தானை அள்வுகொண் டளத்தல்
களவுநெறி என்கோ கொன்நெறி என்கோ
அறியா மாக்கள் வெளிறென் குவமோ
எத்திற மாயினும் அன்னார்
பொய்த்தவ வேடம் புலனா கியதே 229

(230)

காய்தல் உவத்தல் கொள்ளாக் கடவுளைப்
புகழ்ச்சொல் விரும்புவோன் புகழார்க் கிகலவன்
என்னல் என்னோ வென்னின் மற்றிது
இறைகழ லேத்துவார் ஆருயிர்ப் படைப்பெலாம் நிறையருட்
குரியவாக் காண்டல் மறவாது
உறுகண் எவர்க்கும் செய்யா ராக
ஆண்டவன் அடியிணைக் காளா குவரே
அத்திறம் நில்லார் அவன்செய லோரார்
இன்னா செய்வ ராகலின்
ஒன்னா ராயவர் ஒறுக்கப் பெறுவரே 230

(231)

(வாதவூ ரண்ணல் வரலாறு தெரித்தல்)

குருந்தடி யமர்ந்த அருந்தவர்க் காளாய்ப்
பெருந்துறைப் பிள்ளை யூக்கிய பணிவகை
யானறி அளவையுங் கேண்மோ தேன்செறி
கொன்றையங் கண்ணியர் கொள்கெனத் தந்த
பொன்கொண் டல்லாற் பிறர்பொருள் தொடாஅர்
விருப்பொடு சமைத்த திருந்தெழில் வியனகர்
ஓராச் சிலர்மெய் யுளவுசெய் கிலராய்ப்
பரிகொணர் கென்ற பாண்டியன் பொற்கிழி
கழிந்த திங்கென மருண்டுட னழுங்கித்
தென்னற் குரைப்பவும் தேராது காய்ந்தோன்
தெளிவுறற் கந்தணர் மெய்யெடுத் தியம்புழி
ஆர்த்தெழு புரவி அரபியர்க் காணூஉ
ஆழ்கென் னுள்ளம் போழ்கென் னாவென
ஆனாத் துயரா னயர்த்தனன்
ஏன்வெகுண் டேனென் றினைஇ யோனே 231

(232)

(பிரம்படி விளக்கல்)

பொதுமொழி யுரைத்த புன்மை யான்மிக
விதுப்புற் றரசற் கஞ்சிய நொதுமலர்
புறனுரைச் செயிர்வயின் தவிர்துநா மென்னக்
கரவுறு நெஞ்சமொடு கங்குல் மறைவில்
கலிமா வகற்றி நரிகொணர்ந் தாங்கண்
நிரப்பினர் நிரம்பா உணர்வி னோரே
கூர்த்தல் செல்லாக் கோன்கண் டிஃது
பேர்த்துமோர் சூள்கொல் லோவென வமைச்சர்ப்
பழித்தனன் வெந்துயர் பலசெய் வானாய்ச்
சுடுமணற் காட்டிடை நிறுத்தலும் திடுமென
வான்பெயப் பரந்த பெருநீர் வைகை
காவ லானாக் கலக்கிடை நின்றோன்
ஏவ லாளென் றிறைமே லோச்சிய
கோலடி எவர்க்கும் பயிற்றி
மாலறுத் தான்கழல் மொழிகநாம் பலவே 232

(233)

தம்முடம் பிடாஅத் தவர்பலர் முனைநாள்
தென்னகத் தோங்கிய குறிப்பறிந் தீமே
புலவர்ப் பேணும் பீடுகொள் மருங்கின்
அதிய மானவைக் கெழீஇய ஔவை
நெடிதுயத் தந்த நெல்லி மான
வடிவேற் போற்றுபு வடவர் நாட்டிடை
மலையுயர் மாடம் படைத்த அடிசில்
நறுநெய்ப் பூச்சொடும் நிறைய வாங்கி
உலவா யாக்கை யுறற்பொருட் டுண்ணியர்
வயின்வயி னூக்கு நெறியிற்
பயில்வோர் பலர்யாங் கண்ட மாறே 233

(234)

(ஆலங்கொணர்ந்த ஆரூரர்)

பகலோ னென்னச் சுடர்விரித் திவரும்
இவன்யா ரென்னின் இவனே வரைவிலங்
கதளரைக் கசைத்த நுதல்விழிப் பெரியோற்குத்
தொண்டரொடு விரைஇய தூசறு காட்சியன்
புதிய னல்லன் பனிமா லிருக்கையுட்
பன்னூல் ஆய்ந்த பெருமை யோனே
வாலிழை பாகர் பணிப்ப மேலெழுந்
தாலங் கொணர்ந்த அருந்திறல் சைவன்
முன்னாள் ஓர்பிழைக் காகச் சின்னாள்
நிலமிசை வந்துமிக அலமந் தெய்ப்பவும்
வருகவென் றேற்ற பெருமான்
சீரடி ஒல்லையிற் சிவணிய வாறே 234

(235)

அவிர்சடை யேத்த லறாஅ நோன்பின்
பெரியோர்க் கல்லது பிறர்க்கறி கொல்லா
நெடியோன் நல்லோன் நிறையரு ளாளன்
ஒளிப்பிழம் பாயெழுந் தோங்கி யோனே
அவன்சே வடியிணை அறிதுமென் றூக்குவார்
பொய்தீர்ந் துள்ளகம் நைய நாடொறும்
அருள்மேம் படலான் ஆருயிர்க் கிரங்கி
நல்வழி நின்றிடி னன்றிக் காணார்

காணா ராயினும் கண்டே மெனச்சிலர்
நாணா துரைக்கும் மழவ மாக்கள்
வாணாள் வழியடை யாராய்
வீணாள் பட்ட வினையினா ரெனலே 235

(236)

பன்னா டிகந்தும் பலவா றாய்ந்தும்
தென்றில்லை யொப்ப தேனில்லை யிங்கெனின்
பனிச்சடை யிறைவன் முனித்திரள் மகிழக்
குனித்தெழு கழலே இனித்தமுடைத் தெனும்
பெரியோர் பலரிவ் வூர்வாழ் வோரே
அவ்வூர்ப் புறவின் பொய்யா யாணர்
நெடுநெற் கழனி யூக்கி நடுநின்று
வடிவேற் சேஎய் விண்ணோர் தலைவ
பழங்குடி யோம்பும் பேரரு ளோயென
இன்னன பலவா றேத்தி மன்னுயிர்
அனைத்தும் பேணுவோ ராற்றல்
இனைத்தென லாகாச் சிறப்பறிந் தீமே 236

(237)

முன்வினைக் காற்றா மலைவினின் னைந்து
யாது செய்வேம் எனவிளைத் தோர்வயின்
தீதற வெழுந்த தென்றிசைக் கடவுள்
மையுற் றெய்த்தோர்க் கேதம் தவிர
நல்லா றுய்க்கும் நீள்சடை யோனே
அல்லல் என்றுகொல் தீர்துமென் பார்முனம்
உலகங் காக்கும் கொள்கை
உலையா நோன்பின் தலைமையோ னெனுமே 237

(238)

சிவன்சீர் ஓரா தலைந்திவண் பவக்கடல்
வயின்வயின் மூழ்கிப் பல்கா லிளைத்தல்
யாங்கா கியரென நாஞ்சிறி தாயின்
பாரிடை ஆனாத் துயர்நலிந் தோர்பலர்
அல்லலின் நீங்கல் எம்மனோர்க் கொல்லுமோ
தவஞ்சிறி தில்லேம் நுண்ணறி விலமே

எவணோ நாமும் ஏற்றம் பெறுதுமெனப்
பெரிதுழந் தழுங்கித் திரிதரல் காண்கம்
பெரிதுழந் தாரே யெனினும்
விரிசடை யவரையும் விலக்ககில் லாரே 238

(239)

மறித்தினிப் பிறவியுள் விழாஅமை குறித்தோர்
அறுத்தனர் பேரவா அண்டினர் மெய்ப்பொருள்
கற்பன கற்று நன்றாற் றினரே
வீழ்நாள் படாஅர் வினைவலி தீர்வர்
உள்ள துணர்வார் இனிப்பிற வாரெனும்
வள்ளுவர் வாய்மொழி உள்ளுகந் தாரே
நளியிரு மீர்ஞ்சடை யேத்தி
அளிமிகுந் தாரெலாம் அரண்பெற்ற வாறே 239

(240)

நயனில் கூற்றம் நண்ணா முன்னம்
பயன்செறி பணிபல செய்யி ரோவெனப்
பண்டே நான்மறை பயிற்றிய காண்டிகும்
பயன்செறி பணியிங் கினைத்தென விசைப்பார்
அருள்நெறி யன்றிப் பிறிதிலை யென்குப
எல்லா வுயிர்க்கும் ஏமம்
ஒல்லுமா றியற்றியோர் உய்ந்த மாறே 240

(241)

ஈர்ஞ்சடை யாற்கென வியற்றிய விழுநகர்
விண்ணோ ரேத்தும் பெண்ணா கடத்து
நாண்மகி ழிருக்கை நினைஇ நமர்பலர்
வயினெழுந்து தூஉம் மலர்வகை விரிக்கின்
தில்லை முல்லை தண்ணறுங் காந்தள்
கொன்றை கோங்கம் குவியிணர்க் குரவம்
பிடவம் பிச்சி பொலம்புரை அரளி
பகன்றை இலவம் அகனெடும் புன்னை
குறிஞ்சி ஞாழல் கூவிளம் செருந்தி
இன்னன விராஅய்ச் சார்த்துபு நன்பல
வான்கேழ் வட்டச் சாந்தொடு கமழும்

தெண்ணீர்த் துளிகொண் டேத்திவெண் ணீற்றுப்
படையணி பூக்கப் பொங்கலும் பழமும்
பொறியும் உளுந்தும் உளப்படப் பிறவும்
பல்லியங் கறங்கப் பரவும்
நல்லியல் சிவனடி நேர்கநன் னெஞ்சே 241

(242)

முருகிள வளநகர்ப் பெரியோன் உறையுள்
வரிசை ஆர வாழ்த்தி நாடொறும்
வழங்கு நெறிமுறை விளம்பக் கேண்மோ
விரிசுடர்ப் பகலெழப் புதுநீ ராட்டிப்
பொன்னவிர் படிமம் துவர வார்த்துப்
புலரிய காழகம் பொலியச் சார்த்தி
நறுநெய் விளக்கொடு நிறைகலன் பலவும்
நீறும் சாந்தும் நிமிர்வேற் படையும்
உச்சி யிலங்க ஒண்மணி முடியும்
காண்மார் எழுந்த கவுணிய முனிபலர்
நல்லிசை நாவின ராகி
ஒல்லை இவண்வந் துய்ந்திசி னோரே 242

(243)

ஆரூர் தில்லை அரத்துறை நெல்லை
பேரூர் பிடவூர் பேராக் கடவூர்
பாசூர் கூடல் குடமூக் கருணை
பாடலி குன்றம் பாவ நாசம்
வேடற் கீத்த வியன்கா ளத்தி
கறைமிடற் றொருவர் மேவுமறைக் காட்டொடும்
ஆனைக் காவணி சிரபுரம் நாரை
இனைய திருவூர் பலவும்
நினைய லாயினார்க் கில்லை நடலையே 243

(244)

இருங்கல் மால்வரை இமயக் கவாஅன்
ஒருங்குட னெழுந்த திருநகர் உரைக்கெனின்
பகலகம் அமர நாதகே தாரம்
தில்லி காசி திருமணி கரணம்

எல்லவிர் சடையின் எம்மோற் குகந்த
மான சரோவம் மலையகச் சாகரம்
பிரயா கையெனப் பலப்பல வாமே
பனிமா லிருக்கைப் பெரியோ னடிநிழல்
நினைஇ நின்றார்க் கெல்லாம்
இனித்துய ரிலையென் றறிந்த மாறே 244

(245)

ஆர்த்தெழு முலகிடை அலமரல் தவிரக்
காப்பிடம் நமக்கென ஒன்றுண்டு கண்டீர்
பாப்புனைந் தேத்தும் புலவரீ ரிப்புவி
மீமிசைப் பிறவி போலுண்டு கொல்லோ
பார்ப்பதி பாகன் பல்கணத் தலைவன்
நீர்ப்படு சடையன் நெருப்பவிர் திருக்கையன்
மருங்கி னோடாது நடுநிலை யோம்பி
அருள்நெறி பயிற்ற லாவார்க் கெல்லாம்
தெருள்நெறி கூட்டும் தெய்வம்
பொருளா யெம்மையும் போற்றிய வாறே 245

(246)

ஒளிசேர் யாக்கை உம்பரோடு விரைஇய
அளிசால் இருக்கையொன் றறிந்ததற் பின்னும்
கலங்கரை விளக்கம் காணார் மானக்
கலங்குபு விலங்கிற் கொன்திரிந் துழலும்
மலந்தலைப் பட்ட மழவ மாக்கள்
அலந்துநனி எய்ப்போர் பலர்யாங் காண்டிகும்
சிலம்பொலி மறைக்கட் டோன்றும்
நலங்கண் டுய்யார் புலம்புற்ற வாறே 246

(247)

மேலோர்க்கு மேலோன் ஆடக மறைக்கழல்
பொன்செய் யரங்குட் பெரியோர் மகிழப்
பல்லியங் கறங்கப் பனிச்சடை யிரிய
மெல்லியல் காணூஉ நடிக்குஞ் சீர்சொல
வல்லை யோநீ விளம்பென் பார்க்கெதும்

சொல்ல லானா திளைத்தேற் கிரங்கி
ஒல்லை எழூஉம் தில்லை யூர
யாதுந் தேரே னாயினும்
போதார் நினகழல் போற்றிகந் திலனே 247

(248)

விரிதல் ஓவாப் பெருவழி விண்ணிடை
எண்ணிலி அண்டம் எய்ப்பறப் பண்ணுதல்
யாங்ஙனம் நிகழுவ தோவென ஏங்கிப்
பல்கால் அயர்த்தன மாயினும் ஒல்காது
நூறுநூ றுலகு நொடிக்கட் பெருக்குவோன்
ஆறணி சடையனென் றறிந்தா மன்றே
மாய ஒளிகண் டினையும்
சேயென் றென்னொடு சிவணிய வாறே 248

(249)

முன்னை நாட்பல மறைதேர் முனிவரர்
தம்முடல் மறைத்துத் தந்தொழில் முடிமார்
நுண்ணுட லாற்பணி நிகழ்த்திய கேட்டிகும்
அத்திற நோன்பின் அயர்வற உஞற்றுநர்
மெய்த்தவ நெறிகொண் டுயிர்த்திரட் கிரங்கிச்
செய்நல மெல்லாம் பேணி
உய்ந்தோர் பலரிவ் வுலகத் தானே 249

(250)

உலகுபட வாட்டும் பல்பிணிப் புழுவின்
அலமரல் விலக்கி எமையாண் டுக்கிய
நலஞ்செறி கடவுள் புலனிகந் திருப்பினும்
கண்ணமர் நோக்கிற் கெழீஇத் திண்ணெனும்
இலிங்க உருவோ டிலங்குவன் மன்னே
இலங்குரு வதுவே இலிங்கமென் றார்போல்
கண்ணிற் காணா உயிரிங் குளதெனக்
காட்டும் தொழிலிவ் வுடலின் மேற்றே
மெய்யுறக் காட்டும் உடலிது வாகலின்
மெய்யெனும் பெயர்த்திஃ தென்ன
ஐயந் தீர்த்தார் அறநெறி யாரே 250

(251)

வானெழ நிவந்த வள்ளரைப் பொதும்பின்
ஆனிழல் விரித்த அறநெறி நான்கினொடு
வண்டமிழ் விளக்க நூலும் கொண்டெழுந்து
முனிகண முணர முன்னூல் நாட்டிய
பனிமலைப் பாங்கர் இனிதென மகிழ்ந்தோன்
வெம்புலி விடரகத் தாடும்
அம்புலிச் சடையனை அரற்றுக நாவே 251

(252)

பெறுதற் குரியன நம்மோர்க் கருள்வழி
உறுமென் னுணர்வே கயிறது வாக
முறுகத் தயிரளை ஆயர்தம் கோலிடை
எழூஉம் நெய்யென லாகும்
விறகுள் மறைந்த விளக்கன் னவனே 252

(253)

துன்று பொற்சடைக்
கொன்றை மேவிய
மன்று ளாரடி
சென்று பணியுமா
நின்ற நீண்மணி மாடம்
அன்றே என்னையும் ஆட்கொண்ட வாறே 253

(254)

என்றும் பேர்கிலா
நன்று மாணிக்
கென்று பாற்கடல்
மன்ற நல்கிய
வென்றி அணிகழல் வாழ்த்தித்
தொன்றுதொட் டடியார் தொழுதுய்ந்த மாறே 254

(255)

எளிதாகு மன்னே வளிவழங் குலகிடை
ஒளிசேர் யாக்கையோ டுலைவற மிளிரலும்
அளிசேர்ந் தோங்கி ஆருயிர்க் கிரங்கின்

பேரா வியற்கைக் கூறாக் கொற்றத்து
வரையகக் கோயிற் பிறைநுதற் கடவுள்
பல்லுயிர் படைத்தெனப் படைத்தன காக்கும்
நல்லோன் திருக்குறிப் பறிந்தன மாக
எல்லாம் அவர்க்குரித் தென்றுணர்ந் தேமே
அல்ல லெவர்க்கும் ஆற்றாது மன்னுயிர்
ஓம்புத லுண்மையின் ஆகும்
நாம்பல் வளனொடு நிலைக்குந் திறனே 255

(256)

பன்னக வணியன் பேரரு ளாளன்
தென்னக நிறைந்த தண்ணளி வேந்தன்
என்னக மோங்கும் எழிலார் தலைவன்
நன்னகர்த் தில்லை நாடக மேவிய
மின்னகச் சடையோன் புகழ்பல
சொன்னவ ரெல்லாம் சிறப்புற்ற வாறே 256

(257)

ஒன்றா யொன்றி ஈருருத் திரண்டென
முக்கணன் மூவுல கதிர நான்மறைக்
கழலது நாலும் குறிப்பறிந் தீமே
ஐந்தும் அஞ்சுமா றாறு காட்டினன்
எழேழ் பிறப்பும் எழாஅது பழியென
எட்டாப் பெட்பினோ டொட்டிய தென்குப
ஒன்பதும் ஒடுங்கிய தொம்பதம்
நன்னெறி சிவண நிலைத்திசி னோர்க்கே 257

(258)

அஃகா அறிவியற் பஃறொடை விரித்தென
எஃகி னியன்ற மொய்ம்புமலி கூர்ம்படை
பலவுடன் சமைத்த உலவாக் கொலைத்தேர்
மேலை நாட்டோர் வியந்துநனி யூக்கக்
கேட்டிகு மாயினும் வேட்கலம் இவையே
வயின்வயி னெழுந்த கணநிரைச் செயிர்தெற

அருட்டிற மொன்றே சாலு மாகலின்
சொல்லா வன்றொழில் பல்பொறி யெல்லாம்
கொல்லா நெறிகைக் கொள்வார் முன்னம்
செல்ல லாகா வென்னும்
நல்லோன் சேவடி சேர்கநன் னெஞ்சே 258

(259)

வரையக விருக்கைப் பிறைநுதற் கடவுட்கு
வரையாப் பணியுடைத் தென்னக வேந்தன்
திரைசூழ் இலங்கை நகர்ப்புறம் துரந்தென
விண்ணக நீவி விரிந்தியங்கு பொறித்தேர்
பலசெய் மாண்பினொடு நிலமிசை யோர்க்கெலாம்
அறிவியல் பெருநெறி யூக்கி யோனே
மின்விளக் காற்றலு முன்னி நன்பல
ஏற்புடை மரபின் நோன்றல் தலைஇய
பழுதில் யாக்கைப் பலருடன் விரைஇ
மன்பதை பேணிய மறைவல் லாளன்
இறவாப் பெருநெறி கண்ட
அறவோர் தலைவனும் அவனென லாமே 259

(260)

நிறையரு ளாளன் வறையறுத் துரைத்த
மறைபொருட் டிறஞ்சில விரிப்பக் கேண்மோ
குறையா நல்லிசைத் துறையூ ராங்கண்
பழங்குடி பேணிய மழவர் கோமான்
கறைமிடற் றெந்தை நகர்வலன் ஏத்துபு
ஒழிவற வியங்கும் அழலி னெழீஇப்
பழையோன் அருணெறி பயிற்றக் காண்டிகும்
நாண்மகி ழிருக்கை மாணச் சேணின்று
பொய்தீர் யாக்கையிற் றோன்றும்
ஐயன் சேவடி அரற்றநன் றாமே 260

(261)

வாலிண ரூழ்த்த வண்கய முளரியும்
சேலலைப் பானாச் சிதறுநீர் துளிக்கும்
ஆனிழ லிருக்கை அரன்கழல் பராஅய்

நைதல் தீர்ந்த நல்லோர் இவரென
மையறு காட்சி மறைநவின் றார்வயின்
நுண்மை ஐந்தெழுத் தோதி
எண்மையின் உய்ந்தோர் எண்ணிறந் தோரே 261

(262)

எல்லா வுயிர்க்கும் இரங்குமின் அதுவே
ஒல்காப் பெரும்புகழ் ஒருவற் காமெனக்
கல்லா னிழலடிக் கடவுட் சேர்மார்
வல்வினை தீர்வர் தேரார் பிறரே
தேர்வீ சிருக்கை ஆரூர்ப் பெருநகர்
நீரார் சடையனை ஏத்த
ஆரார் வரினும் அவர்க்கீ வோனே 262

(263)

மின்இயல் பொறித்தேர் விண்ணுகைப் பானாத்
தென்னன் வரைதோள் திறலற வுழக்கியும்
இன்னிசைக் கிரங்கிய ஈர்ஞ்சடை யார்முனம்
துன்னருந் துப்பின் தொய்யா நிலைபெறப்
பன்னிய நான்மறை பயில்கென நன்பல
முன்னிய மேலோர் பலரே அவருழைச்
சின்னாள் உறைந்திசிற் செலினும்
மின்னேர் சடையர்க் கன்பரா குவரே 263

(264)

அடல்விடை யூரும் அவிர்சடைக் கடவுள்
இடங்கொண் டென்னுள் இருந்தனன் காக்கும்
வடவரைப் பெருங்கற் கவாஅ னாங்கண்
மடங்கலின் உடன்றெழு தென்னன்
தடந்தோள் திறலற அடக்கி யோனே 264

(265)

உடல்மறைத் துய்ந்த பெரியோர் பலரே
உடல்கொண் டேகியோர் அவரினும் பலரே
உடல்விட் டுய்தலும் எண்ணிலர்க் காகிய
நடைமுறை காண்டு மாகலிற் கடைவழி

இனைத்தென யார்க்கும் துணிதற் கிலமே
ஆலமர் செல்வன் அருட்டுணை ஒன்றே
சாலுமென் றிறைஞ்ச லல்லது
ஓலமற் றில்லையிவ் வுலகத் தோர்க்கே 265

(266)

முன்னை வினையற மூவா முதல்வன்
என்னை யன்றாள் ஏத்தினே னாகப்
பின்னை வினையும் பற்றா
தன்னை யப்பனாய் அமர்ந்திருந் தானே 266

(267)

எந்நூ லோர்க்கும் எட்டரி யானவன்
முன்னூல் விரித்த மேன்மை யோனெனப்
பன்னூல் தெரித்த பாங்குணர்ந் தீமே
மூவான் சாவான் முதல்நடு வீறிலாக்
கோவாய் நிற்கும் கொன்றையங் கண்ணியன்
யாவர் அருள்நலம் பரவினும்
மேவு மவருழை மகிழ்ந்திசிற் செலலே 267

(268)

வேலை யலைக்கும் விரிமணற் செந்தில்
வேலோய் காவென வியனகர் வழுத்தும்
வேலை முற்றி மேற்பணி வேண்டுதி
ரேலிஃ துரைப்பக் கேண்மின் நூல்செய
ஏலா தேமையும் ஊக்கிச் சாலி
வேலி விளையுள் வெள்ளரித் தினைமா
ஏலீ ரென்ன இசைக்கும்
நூலோர்ந் தாரை நினைந்திசிற் சென்மே 268

(269)

அறநான் குரைத்தோன் அணிகழல் பெறவே
துறவோர் வேட்பதும் தில்லை யுறவே
மறவிப் பல்பிணிப் பிறவி அறவே
நறவார் சுரும்பிற் குழுமினர்
பிறவோர் நெறியுறாப் பெற்றி யோரே 269

(270)

பொறித்தே ரென்ன விரைதகு சிறுமுயல்
குறியெதிர் வானாக் குருளையொடு பயிலும்
பெருங்கல் விடரக மருங்கிற் சீறரை
வெளிலா டகன்சினை வேம்புமலிந் தோங்கும்
நறுந்தண் சாரல் பலபுறக் கொழிந்தெனத்
திண்டேர் மணன்மடுத் துரற விரைஇ
எண்டோள் இயவுள் இருக்கை காணூஉத்
தண்டமிழ்ச் சாமி பாம்பன் திருநகர்
அண்டி னாரெலாம் அருள்பெற் றாரே
வண்டிமிர் கொன்றை சூடிய
திண்டிறல் வேந்தனைத் தெரிந்திசிற் சென்றே 270

(271)

நிலமிசை யவருறும் அலமரல் தவிரெனப்
பலமுறை இறைகழல் நினைவுற எழுமினே
மலமற உறுவழி இதுவல திலையென
நலமுறு மடியவர் இசைவழி
உலகிடை உலவிட வருவகை தெரிமினே 271

(272)

அதளரைக் கசைத்த நுதல்விழிப் பெரியோற்கு
எதுநாஞ் செய்பணி என்றே மாக
இதுநுமக் காம்பணி என்போன் கதுமென
வண்டமிழ்ச் செய்யுள் வரைகவென் றானே
அணிநடம் பயின்ற மன்று
பணிந்தெழுந் தாரெலாம் பேறுற்ற வாறே 272

(273)

எதுநாஞ் செயவிங் கெண்ணினு மதுநின்
புதுமலர்த் தாள்நெகிழ்ந் தேத்தி னல்லது
கைவரல் பிறவழி ஒண்ணா தாகலின்
ஐய நின்புக ழேத்தும்
மெய்யுணர் வெற்கு முன்னின் றருளே 273

(274)

சிறியோ ராயினும் பெரியோ ராயினும்
நூலுணர்ந் தோர்க்கும் நூனவி லார்க்கும்
சாலநன் றீயும் சிவபெரு மானே
ஆல காலம் அடக்கிய மிடற்றன்
அசுரர்க் காத்தும் அமரர்க் கருளியும்
நடுநிலை பிறழா நீர்ச்சடை யானை
ஓவா தரற்றி உய்கம்
சாவா நெறியிற் சிவணிய பெறற்கே 274

(275)

மதக்களிற் றுரிமுனம்
உடுத்தவற் கடியவர்
சிறப்பனைத் துரைத்தெழல்
செல்லா தாமே
முதலீ றில்லா முழுமுதற் காளாய்
அருளுரு வாகிய அம்பலக் கூத்தனைத்
தெருளா தார்க்கும் தெளிவுசெய் வான்றனைப்
படர்மலி வெவ்வினை பாற்றுகிற் பானை
வடவரை இமய நீடிய
கடவுளர் கோன்றனைக் கழறுநன் னெஞ்சே 275

(276)

உலகியல் உழக்கி னலமந் தாரொடு
திரிதரல் தவிர்நீ தெளிவுநனி கொள்கென
ஆடக வேந்தன் அருளிய கேண்மோ
பாடல் செய்பணி பண்டே நீடிய
கூட லாலவாய்க் கீர்த்தனன்
தேட லானாத் தென்னர்தங் கோனே 276

(277)

துன்று வார்சடைக் கொன்றை வேந்தனை
மன்று ளாடியெம் மயலறுத் தான்றனை
வென்றி வேலனைக் குன்ற நாடனைச்
சென்று நாடொறும் பாடு வாரடி
அன்றி யொன்றெமக் குளதோ
பொன்றா உலகிடைப் புகுவழித் துணையே 277

(278)

அரியயன் காணா ஆல வாயனைத்
தெரியா தெறிந்த வரிசிலைக் காமன்
எரிபட விழித்த புரிசடைக் கடவுள்
திருக்குறிப் பெவரே தெளிதல் வல்லார்
தெளியே மாயினும் அளியோய் பெரியோய்
வளிவான் நெருப்பொடு நீரும் நிலனுமாய்
ஒளிர்வோய் எனஉரைத் தேத்தின்
களிமிகும் என்குப கற்றறிந் தோரே 278

(279)

பாடற் கெட்டாப் பெரியோ னெனினும்
நாட லாகா நிலையோ னெனினும்
நினைவிகந் தோங்கும் நிலையுங் காட்டும்
உளவறிந் துள்ளு வார்க்கெலாம்
களவில ராக வளந்தந்த மாறே 279

(280)

முந்து வந்திலீ ராயினும் செந்தில்
நந்தம திறை நகர் எனவின் றறிமின்
பழந்தமிழ்ப் பெரியோர் பலரிவண் எழுந்து
நற்றமிழ் பேணி நலம்பெற்ற கேட்டிகும்
அருணைத் தேவும் குமர குருவும்
பொருநைக் கரையகக் கோயில்
முருகற் பாடி முழுதுய்ந்த வாறே 280

(281)

பாய்புலி அதளரைக் கசைத்த பரமன்
ஆய்தொடி ஓர்பால் ஆர்த்துகந் தாடும்
பையரா வரைய னாயினும் செய்யன்
தாயினும் நல்ல தில்லையங் கூத்தற்குப்
பேய்கொ டாடலும் ஆகும்
வேய்மலி அகலும் இகலா னாவே 281

(282)

எம்மூர்த் தில்லி இசையுங் கேண்மோ
அடல்விடை யாரடி மறவா வடவர்
விழுச்சீர்த் தலைநகர் மறுகுதொறும் நிறீஇய
கடவுட் கோட்டத்துக் கவின்பெற மிளிரும்
படர்சடை யாருறை கோயில் காண்கம்
கோயி லாங்கண் குவைஇ யோரெலாம்
வயினெழுந் தார்க்கும் பரிசறிந் தீமே
கருவறை இலங்கு கந்தழிக் கன்பொடு
பூவும் நீரும் பால்நிறை வட்டிலும்
மாவும் தேனும் பழவகை பலவும்
தாமே யேந்தித் தலைவற் கிடுவர்
ஓம்நமசி வாய சிவாய நமவென
ஓவா தரற்றி உய்ந்தோர்க் காண்டிகும்
தாந்தம் தொழில்நனி முடிமார்
பாந்தளஞ் சடையர்க்குப் பணியாயினரே 282

(283)

மண்டிணி நிலத்தக மறையோ ராயினும்
விண்ணெழு விறல்கெழு வேந்த ராயினும்
நண்ண லானா நிமிர்சடை யானை
எண்ணா யிரம்பேர் எண்ணினும் சாலாது
எண்ணாச் சீர்த்தி இமய மால்வரை
எண்ணா தெடுத்த இலங்கைக் கோற்கும்
பண்ணா லிரங்கிய பரமனை
அண்ணா மலையனை அரற்றுக நாவே 283

(284)

தண்பூத் தொட்ட வண்டறை நறுந்தார்
வெண்ணூ லாகந் திளைப்ப விண்ணெழுந்
தெய்யா தருளும் ஈர்ஞ்சடைக் கடவுள்
மேலோர்க் கெல்லாம் மேலோன் ஆகலின்
அவன்சீர் முன்மொழி வோரே
தவநெறி சிவணிய தலைவரா குவரே 284

(285)

இறைகழல் சேரலும் இரண்டறச் சேரலும்
என்றிரு வகைப்பே றிங்குள தென்ன
மறைவல் லார்பலர் மொழியக் கேட்டிகும்
எம்மோர்க் கெவ்வகை உய்வா கும்மோ
எவ்வகை யாயினும் ஆகுக
செவ்வேள் அருளிற் சிவணியோ மெமக்கே 285

(286)

ஒல்லென் றிழியும் வல்வாய்க் கொடுஞ்சிறை
பல்லியக் கறங்கலின் ஒக்க மெல்லெனும்
காவிரிக் கரையிமிர் கவின்சிறைத் தும்பீ
நீயறி யளவையின் நவிலுதி ஆயிழை
பாகங் கொண்ட பெரியோ னாகம்
துன்றுவ பன்மல ராயினும்
கொன்றையே நயந்த குறிப்புநனி விரியே 286

(287)

சேலோங் ககன்றுறைச் சிவன்கழற் காமென
மாலோ னிட்ட முளரியிற் சிவண
எருக்கும் கோங்கும் இனமலர் பலவும்
அருகும் சாந்தும் அமைவர ஏந்தி
வில்வம் ஞாழல் விரைமலி கொன்றையொடு
ஆனிழல் அமர்ந்த ஐயற் பேணி
ஆனிலை உலகிடை ஆர்ந்தார் பலரே
ஊனுயிர் வேறாச் செய்து
மேனிலைக் கூக்கிய முறையறிந் தீமே 287

(288)

வான்பெயப் பொதுளிய வள்ளரைக் கோங்கிடை
மீன்பூத் தன்ன விரிமலர் துவன்றத்
தேன்செறி கொன்றையொடு தலைவர்க் கிட்டென
நான்மறை யாளர் நினைஇப் பரவும்
மான்மறிக் கையரை மொழிமதி நெஞ்சே
யான்செய் பாடலும் ஏற்குங் கோன்கழல்
நாநவின் றேத்த லல்லது
வேறெதுந் தேரேன் வியந்திருந் தேனே 288

(289)

அரவே ஈர்ஞ்சடைக் கணியா கும்மே
நிலவே சடையிடைக் கரந்தொளி ரும்மே
ஆறே அகல்விசும் பார்த்தலைக்கு கும்மே
நீறே மேனி நிறைகல னாமே
வெம்புலி அதளரைக் கசைத்த
எம்மோற் கிவ்வகை எழிலாய வாறே 289

(290)

ஆனிலை யுலகினும் மேனிலை யுண்டென
ஆனிழல் இருக்கை அவிர்சடை பராஅய்
வானுற நிவந்த வேய்மலி விடரிடைத்
தேன்செறி கொன்றைத் தாரரொடு பயில்வகை
யானறிந் துய்தலும் ஒல்லுமோ நானிலத்
தூனுயிர் வாழ்க்கை உழந்திசிற் றிரிந்த
மாலயர் வாற்றாச் சிறியேன்
நூலறி வானெதும் தேராத வாறே 290

(291)

அறத்திற் காணிவேர் அறைய லுற்றார்
சிற்றுயிர்க் குற்ற துயரற வூக்கலே
நற்றவ மாமென மொழிப
சொற்றிறம் மலிந்த சிவநெறி யானே 291

(292)

அறத்திற் புறம்பெவர் அறைகுதி ரென்னின்
துயருழப் பார்த்தமைக் காணின் அவரிடர்
ஒல்லுமா றொழியா தகன்று
செல்லுத லான்நனி சிதறி யோரே 292

(293)

இறைவர்க் கன்ப ராகுநெறி குறித்தோர்
சிவனடி யேத்திச் செல்வ ராகவும்
பல்லுயி ரோம்பும் பண்பின ராகவும்
நல்லோ ரீட்டத்து நயந்திசிற் சென்றே
ஒல்லையிற் சிறக்கக் காண்டிகும்
தொல்வினை யாவும் தொலைந்தறு மாறே 293

(294)

வன்றொழில் வலனொடு மலைஇய வானோர்க்
கின்றுணை நின்ற முசுமுகன் பரவும்
தேர்வீ சிருக்கை ஆரு ராங்கண்
வெள்ளேற் றான்கழல் உள்ளிய மள்ளர்
ஆதிரை நாள்வந் தரற்றக் காண்டிகும்
இத்திறப் பேரு ரிக்கை யுட்பலர்
மெய்த்தவ முனிவரி னெழீஇப்
பொய்யா யாக்கையொடு பொலிந்திசி னோரே 294

(295)

உலவாத் தவர்க்கலால் பிறரொடு கலவாத்
தலைவர்க் காளாம் தொன்னெறி பயிற்றி
மலஞ்சிறி தறலும் மேனிலை யுற்றார்
பலர்யாங் காண்டிகு மாயினும் சிலர்வயின்
உலகியில் நெறிக்கே பிறிதுழன் றலந்த
மையிரு ளுண்மையும் அறிந்தா மன்றே
பவக்கடல் நீந்தச் சிவனடி
சிக்கெனப் பிடித்தார் சிறந்துய்ந்த மாறே 295

(296)

மயலற வூக்கிய வயலூர்க் கடவுட்
கயலா னல்லேன் அடித்தொழும் புடையேன்
பண்டெம் மிறைகழல் பயிற்றிய தொண்டர்
பலரொடு விரைஇய பான்மை யாற்சில
நலம்பெற் றெழீஇய நம்மோர்
மலஞ்சாய்த் திகலற மலைந்த மாறே 296

(297)

புழுவா வுணங்கி வினைவயின் நைந்தார்க்குக்
கழுவாய் வடலகச் சாலையுட் காண்கெனப்
பழுதில் யாக்கையர் பயிற்றிய மெய்ம்மொழி
வழுவா நெறிதெரித் தூக்கி எழீஇய
தொழும்ப ராரடித் தொண்டர்
எழுவார் மேனிலைக் கென்றறிந் தீமே 297

(298)

தேத்தமி ழான்மிக வேத்திநின் றாரொடு
பாத்துணு மாறெமக் கீத்தவன் றாள்மலர்க்
கார்த்தெழுந் தேனிது கேண்மின்
கூத்துகந் தான்சீர் கூறிய வாறே 298

(299)

மீன்பாய்த் தன்ன கூன்பிறை யவிர்சடை
நாற்புறஞ் சுழலிய காண்மோ வேற்படை
வலன்திரித் தெழுந்த வள்ளலுங் காண்மென
மூவா முதல்வற் பழிச்சிய நாவினர்
விரைமலர் தூஉயும் சாந்த மேந்தியும்
பரவியும் பேணியும் விரைஇக் கரவாச்
சிவநெறி யாரொடு சிவணி யோங்கலின்
நன்றே நிறைக நானிலம் தழைக
வான்றோய் தேவரும் வணங்கத் தேன்செறி
கொன்றைக் கண்ணியன் நீடுக பெரிதென
நல்லிசை நாடொறும் பாடுகம்
பொல்லா ரிணைமலர் போற்றிசிற் பலவே 299

(300)

யமுனை தந்த யாணர்ப் பொதும்பிடைத்
தமிய ராகித் திரிதரு நல்லோர்
தென்னாட் டார்யாங் காண்டிகு மாக
முன்னாள் சுவடியும் மொழியு மன்றே, இந்நாள்
தில்லை யன்ன நல்லெழில் தில்லியுள்
சிவநெறி யார்பலர் குழீஇத் தவமிக
வான்கிழித் தோங்கிய தேனமர் வரைக்கண்
முருகற் கெழுப்பிய உருகெழு மாடத்துத்
தீந்தமிழ் இசைகொண் டேத்திச்
சேந்தற் பரவுவார் சீர்பெற்ற வாறே. 300

பகுதி - 4

(301)

விரிநூன் மார்ப விண்ணோர் தலைவ
புரிபொற் சடையோய் வரியத ளுடையோய்
அரியோய் பெரியோய் அருள்கென வேத்தி
உரியன பயிற்றுவோர் உளத்தகத் தோனே
தெரியிழை ஆகத் தொளிர நின்றோன்
பரியிவர்ந் தன்று பாண்டியற் கீத்தோன்
திரிபுர மெரித்த விரிசடைக் கடவுள்
வரிசிலை வேள்பட ஒடுக்கிய
குரிசில் இணைக்கழல் கூறுநன் நெஞ்சே 301

(302)

அவிர்சடை யீசன் அருந்திற லோரார்
புவியிடைப் பலவா றலமந் தனரே
குவியிணர்க் கொன்றையன் கழலிணை நவிலத்
தவிருநம் பவமெனத் தேரா தோரே
அவியுணத் தக்கனோ டுக்கித்
தவறிழைத் தோர்முனம் தளர்ந்தலைந் தாரே 302

(303)

ஒல்லா தாகும் ஊழ்வலி தெறலெனப்
பல்லோ ருரைக்கினும் உரைக்க வல்வினை
ஒல்லை தீர்தல் ஊக்கினி ராயின்
தில்லை யூருள் தனிநட மாடும்
வல்லோன் தாள்மலர் வாழ்த்துமின் வாழ்த்தின்
பல்லாற் றானும் பரிந்துவந்
தெல்லோர்க்கு மருளும் எம்பிரான் றானே 303

(304)

பொறிநிறைந் தோங்கிய பெரியோற் காமென
நெறிபல தெரிக்கும் நுண்ணி யோர்வையின்
குறியெதிர்ந் தாடலும் எவனோ வெறிகமழ்
சிறியிலைக் கோங்கின் பெருநிழற் பரப்பிடை
வெறியாட் டயரும் வம்ப மாக்கள்
அறியுமா றன்றே அறஞ்சொல லாகும்
பொறியில ராயினும் பழியிலர்
நெறிநன் றூக்கிய நேர்மையான் எனவே 304

(305)

காந்தளஞ் செங்கைக் குமரற் காமெனத்
தீந்தமிழ் பாடித் திளைக்குநர் பலரே, அதாஅன்று
வேந்தர் வேந்தன் விளம்புத லானாச்
சேந்தனென் றோதுபு சிறந்தோர்
ஏந்திழை பாகனை ஏத்திய வாறே 305

(306)

நண்ண லார்புரம் நைய எரிப்பினும்
பண்ணி னாற்பரிந் தருளும் பண்பினன்
எண்ணி லாவரம் எண்ணு வார்க்கருள்
வெண்ணி லாவணி விரிசடை உறைவிடம்
காண்டிகு மல்லமோ யாமே, ஆண்டகை
தண்புனல் தில்லை யாங்கண்
விண்ணிழி வியனகர் விளங்கிய வாறே 306

(307)

மும்மல நீக்கம் முனைகுவி ராயின்
அம்மையொ டரங்கினுள் அயர்வின் றாடும்
செம்மல் நோன்றாள் சிரங்கொண் டேத்துமின்
வெம்புல வன்றொழில் வீணர்செய் மிண்டின்
தெம்பற வடக்கிய தொல்புக ழோயென
வம்பவிழ் கொன்றை விரைமலர்த் தாரன்
எம்மோன் சிவன்கழ லிசைத்தோர்
நம்மோர் பலர்முனம் நெடிதுய்ந்த மாறே 307

(308)

யாணர்க் கழனி இன்னிசைச் சுரும்பொடு
பாணர் பலர்பயில் பெருவெளி யாங்கண்
நீணின் றொளிதரும் நவிலாப் பெருஞ்சீர்
வேணி மலிநீர் வள்ளலென் றோரார்
நாணின் றுடன்ற நீலனோ டயனும்
ஆணவம் சாய அருளியோனே, அவன்சீர்
பேணிய சென்ற புகலியர்ப் போற்றித்
தோணி யப்பரைத் தொழுதனிர் சென்மெனத்

தாணினைந் தேத்தத் துயர்தீரு மன்றே
கோள்நலி வகற்றும் பதிகம்
பூணெனக் கொண்ட புரிசடை யோனே 308

(309)

சேண்விளங் கரங்கிற் சிலம்பொடு சிவணிய
பூண்கொண் டோங்கும் பொலந்தார் மார்பன்
கோணிய பிறையன் குளிர்செஞ் சடையெனப்
பேணி யேத்துமின் பல்புகழ் சிறக்க,
கேணி யூற்றின் கிளரும்
மாணிக் கருளிய மறையோற் கெனவே 309

(310)

பொறிநனி சிறந்த சிறியிலை நெடுவேல்
குறியெதிர் வானாக் குன்றக வேடுவர்
தறியிட லறியாத் திண்டிறல் களிறும்
மறியும் வேங்கையு முளப்பட பிறவும்
செறிமுழை யதிரத் தாக்கிப் பிறிதெதும்
அறியா தலமரல் அழகாங் கொல்லோ
நெறிநன் றோரா நீர்மை யான்மிக
வெறியாட் டயர்ந்த வெற்றர் குழாத்துச்
சிறியோ ரவருயச் செந்தில்
எறிதிரைப் பௌவக் கரையமர்ந் தோயே 310

(311)

வினைவழிப் படூஉம் வெந்துயர்ப் பவமற
நினைகுவி ராயின் நினையாப் பேரொளி
முனைவன் தாள்மலர் முன்மொழிந் தீமே
கனைகட லன்ன இனைஇப் பினை
வினைஏறா தருள்க ஈர்ஞ்சடைப் பெரியோய்
எனையாள் தலைவவென் றேத்துக
தனையொப் பாரிலான் தண்ணளி யறிந்தே 311

(312)

மாயை வினையெலாம் மாய்ந்த ஞான்றும்
ஓயா ஆணவ உள்ளகத் திளைப்பால்

காயங் கரையாக் குறிப்புணர் வீரெனச்
சிவநெறி நல்லோர் செப்பக் கேண்மோ
தவநெறி யிதுவே யாமெனக்
கவற்கடல் நீந்தியோர் கழன்ற மாறே 312

(313)

புரிபுன் சடையர் விரிநூன் மார்பர்
எரியுமிழ் கையர் வரியத ளுடையர்
கறைமிடற் றண்ணல் நிறையரு ளாளர்
பிறைதலைக் கணிந்த பேரா நல்லெழில்
சிறைநீர் மல்கு சிற்றம் பலவர்
அரவணி மார்பர் ஆனிழற் குரவர்
சிரமிசை யரவினர் சிறுமான் கையர்
வரம்பல அருளி னாரென
நிரம்ப ஏத்திநாம் நலம்பெற்ற வாறே 313

(314)

அலைவாய்ச் செல்லினும் ஆலவாய் புகினும்
உலையா இமய உயர்வரை சேரினும்
கல்லுயர் குன்றம் கழுமலம் ஆரூர்
தில்லை நெல்லை மல்லியம் பேரூர்
எல்லையில்பல இருக்கை யேகினும்
சொல்ல லானாச் சிவனே
அல்லால் பிறவோர் ஐயனங் கிலையே 314

(315)

கோங்கம் குரவம் ஓங்ககிற் கூட்டம்
வேங்கை பலவம் வேம்பொடு புளியும்
மாவும் நெல்லியும் ஆலும் என்றிவை
யாவும் பொதுளிய இடனகன் வரைப்பின்
ஓவா துரறும் உரைசால் நீடமைத்
தேறல் மாந்திய தெருளாக் கடுவன்
பொல்லா வினைபல ஒல்லை செய்தெனக்
கல்லாக் கயவர் கலங்கிநின் றாரே
வெல்போர்ச் சூல மேந்தியைச்
சொல்லா தாரெலாம் சோர்வுற்ற வாறே 315

(316)

வேலை நஞ்சம் விறல்கெட விழுங்கிய
நூலணி மார்பர் நீள்சடை யாரெனத்
தேவரெல்லாம் தொழுதுயந் தனரே
யாவ ரேத்தினும் இரங்கும்
மூவர் கோன்கழல் மொழியநன் றாமே 316

(317)

தக்கன் தலையற வேள்வி தகர்த்தவன்
மிக்க வோர்தலை பொருத்திய நக்கனை
அக்கரை யார்த்த ஐயனை
முக்கட் செல்வனை முன்மொழிந்தீமே 317

(318)

தவநெறி தேராத் தக்கனொடு மரீஇ
அவிமறைந் துண்ண அணுகியபகன் திறல்
கவிழ வாங்கிய அவிர்சடை யோற்குச்
செவிமகிழ் பாடல் செய்ம்மின்
பவக்கடல் நீந்தும் பாங்கிது எனவே 318

(319)

அன்றும் பாடினீர் தென்றிசைக் கடவுளை
இன்றும் பாடுமின் எம்பெரு மானடி
என்றும் பாடுவோர்க் கிரங்கு மாதலின்
நன்று நாடொறும் பல்கச்
சென்றுநீர் சிவனடிச் சிறப்புரைத் தீமே 319

(320)

முக்கட் செல்வரை முன்கொண் டியற்றாத்
தக்கன் வேள்வி தகர்ந்திழி ஞான்றின்
வெருவினன் கலங்கிய விசும்புளோர் கோமான்
மருண்டனன் விரைந்தோர் மரக்கிளை யேறி
உரும்மறை வாக்கினன் குயில்வடி வுற்றனன்

மருள்செறி உளத்த னென்றே
தெருளா நீரன் தேர்ந்திசிற் செலவே 320

(321)

தொல்வினை தீர்க்கும் பொல்லா ரிணைமலர்
நல்லோன் சிவன்சீர் நேரா அங்கி
அவிகொள நீட்டலும் அவன்கை கொய்தோன்
அவிர்சடை யோனென் றிசைப்பச்
செவிமடுத் தோரெலாம் சிறப்புற்ற வாறே 321

(322)

மல்லல் ஞாலம் படைத்துடன் செருக்கி
வல்லம் யாமென வியந்தோன் தலையற
ஒல்லை ஒறுத்த உலவாப் பெரியோன்
எல்லா வுயிர்க்கும் இறையெனச்
சொல்லுவா ரெல்லாம் சிறந்துய்ந்த வாறே 322

(323)

பகலோன் பரப்பிய பேரொளிக் கதிரிடை
உகவாத் திறலும் உலகினர்க் குளதெனக்
காவல் நுதலிய கண்ணுதற் கடவுள்
போர்வை யாவொன் றமைத்த
நீர்மை யெண்ணிநாம் நெகிழ்ந்திட்ட வாறே 323

(324)

நோற்பார் பலர்பயில் நெல்லையம் பேரூர்
மேற்றிசை யோங்கிய மால்வரைக் கவாஅன்
நீற்றொளி மார்பன் நிமிர்சடைய வற்குத்
திருந்துவேற் பாண்டியர் விரும்பினர் சமைத்த
பெரும்புகழ்க் களந்தை பாடினிர் சென்மோ
பகடுகொண் டுகைக்கும் பண்டகச் சகட்டிடைச்
சீழ்மரம் பிணித்த அச்சின்
ஏமத் தன்னதிவ் வெழில்நக ரெனவே 324

(325)

வேண்டுவ அருளும் விரிசடைக் கடவுள்
வேண்டா திருப்பினும் வாழ்த்துவ கேட்டு

ஈண்டிய நன்பல ஈயும் பெருமான்
வேண்டிய விண்ணோர் வியர்த்து நின்றேங்கவும்
வேண்டிவந் தாண்ட வாசகர் மறைமொழி
யாண்டும் ஒலிக்கக் கேண்மின்
தாண்டவக் கோன்கழல் தேர்ந்திசிற் செலவே 325

(326)

அறவோர்க் கருளும் ஆல வாயன்
பிறவான் இறவான் பேசாச் சிறப்பினன்
பிறரால் தொழப்படும் பிஞ்ஞகக் கூத்தன்
பிறரெல் லோரையும் பணிகொள் வேந்தன்
நறவுமிழ் கொன்றை நீள்சடை யப்பன்
அரவப் பூணினன் நிறையணி நீற்றன்
கொன்றையந் தாரன் கூறொணாத் திறலன்
இடுப்பிடைப் புலியதள் உடுத்தெனத் தடக்கையில்
உடுக்கை எடுப்போ னன்றே
அடைக்கல நமக்கென் றடுக்கிய வாறே 326

(327)

பெருந்துறை மேஎய பிரானொடு மிருந்தும்
திருந்திய செந்தழல் மருவா தொழிந்த
தீதுகண் டிரங்கும் வாத வூரர்
ஏதும் தேரா இயல்பின ராகிக்
கலுழ்ந்துநின் றெய்த்த கணக்கறி கிலமே
பிறையணி மறையோற் கல்லது
இறையும் தெரியொணா திதுவென மொழிமோ 327

(328)

பின்னர்செய் பிழை என்னவொன் றில்லை
முன்செய் பிழையும் அறியகில் லேனெனத்
தனித்துநின் றெய்த்த தண்ணளி யாளர்
வாத வூரரும் வருந்தின ராகத்
தீதிற் பிரியாச் சிதடரை
ஏதும் சொல்லற் கினந்தெரி யேமே 328

(329)

துணிநிலா வணிந்த தொய்யா நல்லிசை
மணிமிடற் றோன்கழல் மறவா தீமே
பணிசேர் மார்பிற் பல்லிணர் விரித்த
அணியார் கொன்றை அலங்கலும் சிலம்பும்
திணிதோள் ஐயன் திருவடி யாங்கண்
ஊழ்வலி மாற்றலு மாகும்
தாழ்சடை யப்பனைத் தொழுதெழு வார்க்கே 329

(330)

தோணி யப்பரைத் தொண்டர் குழாத்தொடும்
காணிய எழுந்த கழுமல வூரர்
அரத்துறை மேவிய அவிர்சடை யானடி
உரக்கப் பாடி உள்நெகிழ்ந் தாரே
வரம்பல தந்த வள்ளல்
பரந்தருள் கூட்டிய பழமையோ னெனவே 330

(331)

வன்றொழில் அறாஅப் புன்றலைச் சிறாஅர்
தென்றிசைக் கடவுளைத் தேரா தெங்கணும்
சென்றலைந் தேமிக நொந் தழுங்கினரே
மன்றகத் தாடும் மறையோன் தாள்மலர்
என்றுநின் றுள்ளகத் தோங்கப்
பொன்றிகழ் புலியூர் இன்றறிந் தீமே 331

(332)

வயினெழுந் தார்க்கும் வண்டினம் மலிந்து
பயிலிய பகன்றைப் பல்லிணர்த் தாரன்
அயிற்படை யோனென் றவன்கழல் பராஅய்ச்
செயிர்தீர் நிலையிற் சிவணிய நின்ற
அறிவர் பலர்யாம் அறிந்த மாறே, அதாஅன்று
பொறி வல்லாரும் புலவர் பலரும்
செறிபொற் கழனிச் சிற்றம் பலத்துள்
நெறிநின் றுய்ந்த நேர்மை காண்டிகும்
குறிக்கோள் சிவன்கழ லேயென
மறிக்கை ஏந்தியை மொழிந்துய்ந்த வாறே 332

(333)

கூன்பிறைச் சடையனைக் கூறொணாத் திறலனை
வானுறை வோரெலாம் வணங்கும் கடவுளைத்
தேன்செறி கொன்றைத் தாரொடு மிளிரும்
நீனிற மிடற்றனை நினைதற் கரியனைப்
பானிற விடையனைப் பனிமால் வரையனை
நானிலம் காக்கும் நம்பனை
மான்மறி யேந்தியை நான்மொழிந் தேனே 333

(334)

ஊன்செறி புழுவுடல் உதிர்ந்ததற் பின்னர்
ஆனிலை உலகோ மேனிலை யோவென
நாமினைந் துழலலும் எவனோ வானமர்
தேவருந் தேராத் திறமிது வாகலின்
யாவரும் செயற்குரித் தாகவொன் றுளதால்
இறைவன் படைத்த உயிர்த்திரட் கெல்லாம்
நிறையருள் காட்டி நிற்கப்
பறையும்நாம் செய்த பண்டை வினையே 334

(335)

பழுதில் கேள்விப் பாண்டியர் சமைத்தென
விழுநீர்க் களந்தை வியனகர் ஆங்கண்
எழுநிலை மாடத் தீர்ஞ்சடை யார்கழல்
தொழுதெழத் தீரும் தொல்வினைத் திறலே
எழுதாப் பேரொளி இமய மால்வரை
வழுவா தேத்தின் வருவினை சாரா
முழுமுதற் சிவனார் மேஎய
கழுமல மேத்தக் கறைதீர்ந்த வாறே 335

(336)

கூன்பிறை யாரடி கூறி னல்லது
ஆனிலை யுலகத் தவர்நடு விருக்கை
யாங்ஙனம் ஒல்லுமோ இருநிலத் தீரே
தேங்கமழ் கொன்றைத் தாரர்க் கேங்குபு
ஓங்கிய சிறப்பினர்க் கொல்லையிஃ தொல்லும்
ஆணவ மறுக்கும் நீணெறி பேணுமின்

பேணா நாளெலாம் வீணா ளென்குப
நீணிலாச் சடையரை நினைஇக் காழியுள்
ஏணிப் படிமிசை இலங்கும்
தோணி யப்பரைத் தொழவினை யறுமே 336

(337)

பொதிகையின் இழிந்து பொருநையம் படுகைப்
புதுமலர்க் கரையகம் தாக்கிக் கதுமென
விரையுநீர் மறிக்கும் வல்வாய்க் கொடுஞ்சிறை
நிரைநிரை நிறீஇ நெல்வளன் பெருக
ஆனிழல் ஐயர்க் கணிபெறச் சமைத்த
வானுயர் மாடக் கூடம் சிறந்தென
நானிலக் காவல் நெடுவேற் பாண்டியர்
மான்மறிக் கையொடு மிளிரும்
கூன்பிறை யார்கழல் கூடிய வாறே 337

(338)

பாண்டியர்ப் புரந்த பிறையொளி அவிர்சடை
ஆண்டகை பெரியோற் காமென வீண்டிய
பல்லிணர்க் கொன்றையொடு பகன்றையும் சூட்டும்
நல்லோர் பலர்குழாம் நினைஇச் சில்லெனும்
மெல்லியற் சோலை முன்னினி ராகத்
தென்னாட் டிறைகழல் தேர்ந்திசைத் தீமே
முன்னாள் பிழையெலாம் தீர
ஒன்னார்த் தெறலும் ஒல்லுமா லெனவே 338

(339)

வேழம் மிகவுடை விடரகப் பாங்கர்
ஞாழ லோங்கிய நீர்த்துறை யமர்ந்து
ஊழி முதல்வனை வாழியென் றேத்தும்
யாழிசை நல்லோர் ஈட்டம் காண்டிகும்
தாழ்சடை யோன்தாள் தொழுதெழ லல்லது
ஏழ்கடல் உலகுக் கெல்லாம்
ஊழ்தெறத் துணைவே றொன்றிலை எனவே 339

(340)

எவரே யாயினும் இறையடி நினைஇத்
தவறா நோன்பிற் சிவநெறி யல்லால்
பவக்கடல் நீந்தப் பிறதுணை இல்லெனத்
தவமேற் கொண்ட தாவில் கொள்கையர்
துவரார் காழக உடுப்பொடு சிவணிய
நல்லோர் சொல்வழி நிற்க
எல்லா நலனும் எய்தற் குரியரே 340

(341)

மாட மோங்கிய கூடல் நன்னகரும்
வேடன் அடங்கிய வேட்களக் கோயிலும்
ஆடல் செறிந்த அணிசேர் மன்றும்
பாட லானாப் பனிமால் இமயமும்
பீடுசால் மருங்கின் ஆலங் காடும்
வீடுபெற விழைவார்க் காமெனப்
பாடுமின் பாடிப் பலருய்ந்த வாறே 341

(342)

சொல்லருஞ் சிறப்பின் தில்லை மேவியும்
ஒல்லும் வகையான் ஊரூர் சென்றும்
சொல்லாச் சிவனடி சொல்லினிர் ஏத்தின்
நல்லா றிதுவென நவில்வரிவ் வுலகோர்
பல்லாற் றானும் தேரின்
பொல்லா வினைப்பவம் பொசித்திடற் கெனவே 342

(343)

விரித்தது செஞ்சடை
உரித்தது தோலுடை
எரித்தது மூவெயில்
சிரித்தது மென்கொலோ 343

(344)

குருந்தடி இருந்தநம்
பெருந்துறை இறைவன்
மருந்தென உலகர்க்
கருந்துவ தருமே 344

(345)

நீடிய திண்மதில் நாடக மன்றினுட்
கூடிய தொண்டர்தம் கருத்து ளோங்கினான்
சாடிய நஞ்சினுக் காற்றா வானவர்
வாடிய நிலைகண் டிரங்கி
நாடிய வெல்லாம் நல்கி யோனே 345

(346)

திண்டேர் அரக்கன் தலைநெரித் தாண்ட
வண்டார் கொன்றை விரிசடைக் கடவுள்
பண்டே வந்தெமைப் புரந்தநற் செல்வன்
எண்டோள் வீசிநின் றியற்றிய நாடகம்
கண்டோர் பலர்யாங் கணக்கறி யேமே
உண்டோ எமக்குமிப் பேறெனத்
தண்டார் மார்பனைத் தொழுதல்நங் கடனே 346

(347)

நான்மறை நன்பல நவின்று நிற்கவும்
கூன்பிறை யீச குளிர்சடை யோயென
வானவ ரெல்லாம் வந்து வணங்கவும்
யானெதும் ஆற்றா திளைத்தினைந் தேற்குப்
பாடல் நாடொறும் செய்கென
ஆடல் வல்லான் அருளிய வாறே 347

(348)

அமரர் பேணும் அவிர்சடை யோற்குத்
தமரா கியர்பலர் தென்னகத் துள்ளார்
நமரங் காளென அவரொடு மிணங்கின்
நமனார் அங்கு நண்ணவும் மாட்டார்
குமரா தலைவா என்ன
இமையா நாட்டத் திறைகழல் தொழவே 348

(349)

காலற் காய்ந்த கண்ணுதற் கடவுள்
காலங் கடந்த கறைமிடற் றண்ணல்
ஞாலம் போற்றும் ஆல வாயன்
கோல வார்சடைக் கொன்றையங் கண்ணியன்
சால நீள்வரைச் சிவனென
ஓல மிடுமவர் மேல ராவரே 349

(350)

முன்வினை களையும் முக்கட் செல்வ
கன்னெஞ் சகனெனைக் கடைப்புறம் தள்ளேல்
இன்னும் துரிசெதும் யான்செய் யாவகை
மின்னவிர் சடையோய் என்னலம் பேணெனத்
தென்னகத் திலங்கைத் தேவனும் வழுத்தினன்
துன்னரும் சிவன்றா ளேத்தி
ஒன்னார் திறலறுத் தோங்கி யோனே 350

(351)

ஓங்கிய சிறப்பின் தேங்கமழ் சடையன்
வீங்கிள வேனில் விரிந்தென யாங்கணும்
தண்ணளி பரப்பும் அண்ணல் சிவன்கழல்
நண்ணுதற் கரிய நீர்மைத் தெனினும்
எண்ணுவா ரவர்கட் கீயும்
வெண்ணிலா அணியனை வாழ்த்துநன் னெஞ்சே 351

(352)

கானதர் ஊக்கிய கடுவன் சுற்றம்
தேனுமிழ் பகன்றைத் தாதுணத் திரிந்தென
வானகத் தோர்பலர் விரைந்துவந் தேத்துவர்
எய்யா நல்லிசைத் தொய்யில் உலகரும்
பையா டரவம் மெய்யேற் றாடிய
பொய்யா வ்வண்மைப் பெரியோற் போற்ற
ஐயாற் றணிநகர் சேர்வர்
ஐயா காவென் றரற்றிசின் சிறந்தே 352

(353)

அறையொணாச் சீரின் அரன்கழல் பராஅய்
நறையுணற் கிமிர்வன கொல்லோ நிறைமலர்ப்

பிறைமுடிச் சடையிடைச் சிறைவண் டீட்டம்
குறையிரந் தேங்கும் குறிப்பாங் கொல்லோ
யாதே ஆயினும் ஆகுக மற்றிது
மாதோர் பாகனுக் கேற்ற
தீதறு பணியெனத் தேர்கநன் னெஞ்சே 353

(354)

பூசும் பொடியொடும்
ஏசற் றிருத்தலின்
மாசற் றவருழை
பேசும் நமன்தமர்
பாசக் கயிறெதும்
வீசற் கியல்வரோ 354

(355)

முன்னாட் செய்த முரண்வினைத் திறல்கெடப்
பன்னாட் டவரும் பணிந்துவந் தேத்தும்
தென்னாட் டிறைகழல் தேர்கநன் னெஞ்சே
பின்னாள் பிழையெதும் சேரா
நன்னா ளாக நிகழ்தல் குறித்தே 355

(356)

யாதே நினையினும் யாதே ஊக்கினும்
மாதே வல்லால் முன்னிற் பாரெவர்
கோதே புரிந்து வாதிட் டலைவோர்
மாதோர் பாகனை வழுத்தகில் லாராய்
ஏதெது செய்யினும் என்பயன்
தீதறு நெறியில் திளைக்ககில் லாரே 356

(357)

காதார் குழையன் காடுறை முக்கணன்
மாதோர் பாகன் மணிமுடிச் சடையன்
போதார் திருவடி போற்றித் தீதறத்
தாதார் கொன்றையந் தார
போதாய் விரைந்தெமைப் புரக்க என்பிரே 357

(358)

சிலையான் முப்புரம் சிதைய வாங்கினும்
உலையா நோன்பின் உயர்ந்தோர்ப் புரக்கும்
கலையார் நிலவும் கொன்றையொடு சூடும்
அலையார் மாக்கடல் ஆலமும் உண்ணும்
மலையான் மகளும் இடங்கொளும்
தலைவா என்பார் துயரறுந் தாரே 358

(359)

ஆல வாயன் அவிர்சடைக் கடவுள்
நீல மிடற்றன் நெற்றியோர் கண்ணன்
கோலப் பொதுநடக் கோமான் எனவே
சால நான்மறை செப்பிய பயிற்றின்
ஞால முழுதும் தருஉம்
ஏலக் குழலி இடங்கொண் டோனே 359

(360)

பழவினை தீர்க்கும் பரம்பொருள் சிவனென
மழவிடை யூரும் குழகற் பாடிக்
கழுமல வூருள் விழுமிய பயிற்ற
வழுவா தருளும் வள்ளல் கண்டீர்
எழுபிறப் புறினும் எம்மான்
பழுதற நம்மோர்ப் புரந்தருள் வானே 360

(361)

வன்றொழில் தவிராப் புன்றலைச் சிறியேம்
என்றுகொல் இறைகழல் எய்தவல் லேமெனச்
சென்றுசென் றணிசேர் சிற்றம் பலத்துள்
துன்றுபு குழீஇத் தூசற் றிரங்கவும்
கன்றுநினைந் தார்க்கும் ஆவெனப்
பொன்றிகழ் சடையோன் பயிருமால் நமையே 361

(362)

புரமூன் றெரித்த புறந்தாழ் சடைய
நரம்பிசைக் கிரங்கி அரக்கற் கருளியோய்
வரம்பல தரூஉம் வண்மை யோயென
நிரம்பிய கேள்வியர் நவின்றன ராகச்
சிரங்குவித் தேத்திய கையொடும்
பரம்பொருள் மலரடி பணிந்துய்ந்த வாறே 362

(363)

வல்வினைத் திறல்பொர விழையுநர் யாரும்
எல்லையில் தோற்றத் தெம்பிரா னுகக்கும்
தில்லையும் நெல்லையும் தொல்சீர்க் களந்தையும்
நல்லோர் பலர்பயில் வல்லம் படுகையும்
ஒல்லென் றிழிதரல் ஓவாச் சிறைநீர்
மெல்லிசை அலையொடு பல்லியங் கறங்கும்
நெல்வாய் அரத்துறைத் தளியும்
செல்வா ராகிச் சிறப்புற்ற வாறே 363

(364)

அரம்போன் றடுபுலன் ஐந்தொடு மரீஇ
அரன்மலை அசைக்கலுற் றாற்றாத் தென்னன்
நரம்பிசை மீட்டி நிரல்நிரை யார்ப்பப்
புரம்பட எரித்த பொன்றிகழ் சடையோய்
விரலொன் றூன்றியென் விறல்தபுத் தோயெனப்
பரவிநின் றேத்தி வாழ்த்தினன்
சிரங்குவி கையொடும் சிவணி யோனே 364

(365)

அரன்கழ லேத்துமின் அரன்கழ லேத்துமின்
பரஞ்சுடர் வாழ்கெனப் பரவி யேத்துமின்
விரவாப் பெற்றி விறல்செறி அரக்கர்தம்
புரம்படச் செற்ற அரன்கழ லேத்துமின்
கரவா நெஞ்சினர்க் காக்கும்
இறைவா எனப்பல ஏத்திசிற் சென்மோ 365

(366)

ஆறும் நீறும் அணிபெறக் கொண்ட
ஏறூர் செல்வனென் றேத்துகம் வம்மோ
வேறுவே றாக விளங்கிய உலகிடை
நூறுநூ றாயிரம் நுண்ணணு வாகினன்
கூறொன் றேற்ற குழலியொ டாடி
மாறா அடியர்தம் முன்வினை
பாறுமா றருளிய பெரியோன் எனவே 366

(367)

கழலா உடலொடும் கறைமிடற் றான்கழற்(கு)
எழலா மென்றிவண் இசைப்போர் பலரே
பழவினை யாவும் பாற்றின ராக
மழவிடை யாரடி மொழிவோர்க் காண்கம்
அழலுரு வெந்தாய் ஆலமர் செல்வ
மழுவொன் றேந்திய மறையோய்
எழுதாப் பேரொளி இறைவா எனவே 367

(368)

சேற்றிடைப் பட்ட செழுமலர் மான
மேற்றிசை நாட்டிலும் மேலோர் சிலருளர்
ஏற்றுயர் கொற்றத் தெம்மாற் காளாய்
மாற்றரு மொய்ம்பின் கூற்றுவர்க் கஞ்சார்
நாற்றிசை யோரும் காணப்
போற்றிசைத் துய்ந்த பெரியோ ரவரே 368

(369)

நல்லன பலசெய நான்நினைந் தேங்கினும்
ஒல்லா தேனாய் உழல்வதிங் கெவனோ
பொல்லா ஊழின் பரிசுகொல் லிதுவெனல்
அல்லால் மற்றிங் கடியவன்
சொல்லால் விளக்கம் செய்வதொன் றிலனே 369

(370)

கானார் விலங்கிற் கயவர்ச் சார்ந்து
நானா வகையின் நிலைதிரிந் தேங்கி
ஆனாத் துயரான் அலமந் தோரும்

வானோர் தலைவ மானார் கைய
தேனார் கொன்றையந் தாரவென் றேத்தின்
ஊனார் மயல்தெறல் ஒல்லுமென்(று)
ஏனோ தேரா திளைத்திருந் தாரே 370

(371)

அறிவர்ப் புரக்கும் ஆல்கெழு கடவுள்
எறிதிரைப் பௌவத் தெழுவிடங் கருதான்
வெறியார் கொன்றை விரிமலர் சூடும்
மறியொடு மழுவும் ஏந்தும்
செறிபுனற் சடையொடு சிவணி யோனே 371

(372)

சொல்லீர் இவன்யா ரென்னின் இவனே
சில்பலிக் குழன்று பல்மறு கெழுந்த
வல்லோன் சிவன்கழல் வாழ்த்தின னாகப்
பல்சீர் இலங்கை புரக்குங் கோனே
எல்லா வுயிரும் இனியனென் றேத்த
நல்லோன் மகிழும் நீள்வரை மருங்கில்
செல்லாப் பொறித்தேர் நிறுத்தியோ ராரென
மல்லார் தோளொடு மலைபொர வூக்கி
ஒல்லா துழன்ற ஞான்றின் மெல்லென
நல்யாழ் பயிற்றி நம்பற் குகந்த
சொல்லாச் சிறப்பின் சாமநூல் இசைப்ப
வெல்வாள் நாளுடன் பெற்றவன்
தொல்சீர் அரக்கர் தலைமை யோனே 372

(373)

புலனைந் தடங்குறப் பயிற்றிநன் னிலமும்
நிலவளன் சேர்த்திய நெடுவிண் ணலகும்
அலகில் வளியும் வளியனல் நலமும்
நலமலி அனலொடு நீருமென் றிலகிக்
குலவுறு பெருமநின் கழலிணை யலதிங்(கு)
கிலைதுணை எமக்கெனப் பலசொலி
உலைவகன் றாரெம துளத்தகத் தாரே 373

(374)

தேக்குயர் கானநர் தெவ்வர்நின் றலைக்கும்
பெருங்கல் விடரக மருங்கிற் சிறுமுழை
இரும்புலி யுயிர்ப்பின் வெருவுறுங் கடுவன்
நீடமைத் தேறற் கேங்கிக் கோடுயர்
கிளைதொறும் ஆர்ப்பச் சுளைசெறி
பலவுடன் பழுநிய புறவிற் சிலர்பயில்
பொன்செய் முகரியுட் புரிசடை யார்க்குக்
கண்ணிடந் தப்பிய திண்சிலை வேடர்
எண்ணருஞ் சீர்பெற் றாரென
விண்ணவர் கோன்கழல் வாழ்த்துகம் பலவே 374

(375)

ஆடிய பூங்கழற் கணிசெய் தோங்கினும்
தேடிய நான்மறை தெரிதல் இல்லையால்
வாடிய நீர்மையின் வழுத்தின
நீடிய பேரருள் நம்பவென் றிசைத்தே 375

(376)

கூடிய தொண்டர்தம் குழாத்தொடு நம்பர்தாள்
பாடிய நால்வரைப் போற்றி யுய்திரே
சாடிய வேள்வியில் சரிந்த தேவரும்
நாடிய தலைவன் நல்கலால்
வீடிய வன்பவம் வினையும் தீர்ந்தவே 376

(377)

நளியிரும் புறவின் நீளரை வேம்பிடை
வளியுகைத் தலைப்ப வெளிலாடு பைங்கிளைக்
குளிர்நிழல் ஆர்த்த குறுநில வேளிர்
தெளிநீர்ப் பொருநைத் தண்டுறை யாங்கண்
அளிசால் மரபின் அம்பலக் கூத்தற்(கு)
ஒளியார்ந் தமைத்த விழுநகர் காணூஉக்
களிமிகுந் தவரடி கூறுகம்
விளியா தவர்புகழ் விளங்குமா லெனவே 377

(378)

சிறியிலைக் கோங்கெதிர்ந் தலைக்கும் பெருமிறைக்
கிறையும் தளராக் கருமுகில் நிறைத்தென
நிறைநீர்க் கயத்தடி நெல்வளன் குறையாக்
குறுநில உழவர் கூட்டிடை விரிவற
அறநூற் குறிப்பும் அருளியல் மறமும்
மறவாச் சிவநெறி மேன்மையும் நினைவுற
உறவாய் நின்றுயிர்க் குதவியோர் பிறர்போல்
பிறவா ராகலின் இறவார்
இறையருள் அவரைநின் றியக்கவும் சிறிதே 378

(379)

இடிமு ழக்கெனத் துடியெ முப்பினார்க்
கடிய ராயினார்க் கடிமை பூண்மினே
கொடிய முன்வினை இடிக்க லுற்றவர்
நொடியி லேத்தி யுய்வரே
பொடிகொள் மேனியர் முடிய சைக்கவே 379

(380)

பிறையணி சடையொடு கறைமிட றுடையவன்
மறைமலி யுரையொடு மரநிழல மர்பவன்
நிறையருட் சிவனென நவில்வரேல்
துறைதொறும் இலகுறும் சிவவொளி சேர்வரே 380

(381)

ஆலங் காட்டகத் தாடு மெம்மிறை
ஆலம் தெள்ளமு தாக உண்டனன்
ஆலின் தண்ணிழல் ஞால முய்வகை
நாலும் செப்பிய நல்லோன் காண்கென
ஆல யந்தொறும் கூடி யாடுமின்
ஆல வாய்நகர் மாறி யாடிய
கோலங் காண்மின் சீலமா முனிதன்
பாலற் காகக் காலனைக்
கால்கொண் டடர்த்த கழலடிதேர்ந்தே 381

(382)

அடியார்க் கருளும் அம்பலத் தரசனைத்
துடிசேர் முழக்கிடைத் தோன்றிய உலகெலாம்
அடிசேர்த் தொருகால் ஆட்கொளும் தலைவனைக்
கடியார் கொன்றைக் கண்ணி சூடியை
முடியா முதல்வ முப்புரம் செயலறப்
பொடிசெய் பெரும என்பார்
நெடிதிவண் ஓங்கும் நீர்மை யாரே 382

(383)

நீரிடங் கொண்ட நிமிர்சடைப் பெரியோய்
யாரிடம் சொல்கேன் யான்படு துயர்த்தொகை
சேரிடம் தேரேன் சிவபரம் பொருளே
காரிடம் கொண்ட கண்டவந் தருளுதி
பாரிடம் விரைந்து பேண
நேரிடம் ஒரா நீர்மையேம் எமையே 383

(384)

கொடிய முன்வினை ஒடிய விழைதிரேல்
நெடிய வானவர் முடிதாழ்ந் தேத்துபு
பொடிகொள் மேனியர் அடியிற் சேரலும்
நொடியில் உய்ந்தவா நினைமின்
கடிகமழ் தாரன் கழலிணைச் சீரே 384

(385)

பொய்ம்மலி வாழ்க்கைப் புலையனேன் எவர்க்கும்
கைம்மா றியற்றாக் கடையனேன் எனினும்
கைம்மா உரியன் கண்ணுதற் பெரியோன்
நெய்ம்மலி விளக்கின் நீனிற மிடற்றன்
தொய்யில் உலகம் தருஉம் சிவனே
மெய்ம்மறை விரித்த மேலோன் எனப்பல
செய்யநற் றமிழாற் பாடி
உய்ந்தோர் இணைக்கழல் ஓதுநன் னெஞ்சே 385

(386)

ஆரூர் பேரூர் அரத்துறை நீடூர்

போரூர் புலியூர் புகலிநல் லூரே
மேரூர் எறும்பி மறையுயர் காட்டூர்
கோட்டூர் காஞ்சி கொள்ளம் பூதூர்
வேட்களம் களந்தை வல்லம் படுகை
ஆட்கொள வந்த ஆலங் காடிவை
வேட்டுகந் தமர்ந்த வள்ளல்
தாட்டுகள் நம்மோர் தலைக்கணி யாமே 386

(387)

அடிகாண் பேனென் றகழ்ந்திளைத் தோனும்
முடிகாண் பேனென முயன்றயர்ந் தோனும்
முடியா நீளெரி முதல்வற் காணார், அதனெதிர்
படிறுடை அரக்கர் கொடிறுடைத் தாண்ட
பொடியுடை மேனிப் புரிசடை யீச
துடியுடை கைய துகளறு மேனிய
துடியிடை உமையமை துணைவவென் றேத்தி
அடியிணை பரசுநர்க் கெளிதாம்
கடிகமழ் கண்ணியன் கழலடிச் சீரே 387

(388)

கயல்சேர் பொய்கைக் கழுமல மமர்ந்தீர்
அயலான் என்றெனைத் தள்ளா தீமே
மயல்செறி ஐம்புலன் அலைப்ப அலமந்து
உயல்வகை ஏதும் உணரா திளைத்தேன்
நயன்சால் நங்கை பங்கீர்
அயன்மாற் கரிய வியன்புலத் தரசே 388

(389)

பொறிவாய் ஐந்தன் புலன்பட் டயர்ந்து
நெறிநன் றுணரா நீர்மையே னெனினும்
அறிவர் அவைவிட் டகல்வே னல்லன்
அறிவர் அவையகம் அகலே னாகலின்
வெறியாட் டயரும் வீணர்வந் தணுகார்

செறிகா டாடிய சிவன்கழல்
குறித்தோர் பலரையான் கூறிய வாறே 389

(390)

உலகிய லார்பலர் உழன்றுமிக் கழுங்கி
உலந்தலைந் தெய்ப்ப உளநனி நலிந்து
உலைவதிங் கெவனோ உரைக்கெனக் கேட்பின்
உலவா யாக்கை ஒளியுமிழ் பெரியோன்
நலஞ்செய லன்றி நினையான் பிறவெதும்
புலன்தெறும் திறன்தரு புரிசடைக் கடவுள்
இலந்தொறும் ஓங்கி இருப்பினும்
சிலரே அவன்கழற் சீருணர்ந் தாரே 390

(391)

மலமூன் றெரிபட மன்றகத் தாடும்
வலக்கழல் ஆணவ வலிசெற் றாங்கு
வலக்கை அருளும் வேண்டுவார்க் கெல்லாம்
நலமிகு நம்பன் நெடுநகர்
வலம்வந் தேத்தி வழுத்துகம் பலவே 391

(392)

கானார்ந் தாடிய கண்ணுதற் பிரானுழை
வானோர் கடைந்தெழு வெவ்விடம் பொறாஅர்
மீனார் விண்ணிகந் தொருங்குற மிரண்டு(ம்)
மூன்றா நாலுகாற் கஞ்சறு மாறெழுந்
தானாத் துயருற் றலமந் தெய்ப்பரால்
கோன்றாள் மலர்நமக் கெட்டுமோ எனவயர்ப்
பானார் சிறக்கப் பொன்பதித் தமைத்த
வான்றோய் விழுநகர் வழுத்திச்
சான்றோர் பலரொடும் சிவணிய சென்மோ 392

(393)

கவின்செறி தில்லையுட் கூத்துகந் தாடுவீர்
கானிடைத் திரிதலும் ஏனெனத் தேன்செறி

கிளரொளிச் சடையரைக் கேட்பின் நிலவுமிழ்
கீறணி பவர்க்கே யாளாம் சிறப்பின்
குன்றாச் சீருடைக் கடவுட் பெருநகர்
கூறாக் கொற்றம் பலவுடன் விரைஇக்
கெழுதகை யன்பரின் தொழுதெழு வார்க்கெலாம்
கேடில் விழுப்பொருள் கூட்டும் செல்வர்
கைலைமா மலையு ளோங்கும்
கொய்தலை யேந்தியைக் கூறமா லறுமே 393

(394)

அணிசேர் தில்லை அம்பலக் கூத்தற்கு
ஆயிரம் பாடி யாடுமின் ஆடினும்
இன்னும் பாட எண்ணுமின் நன்பல
ஈயும் கண்டீர் இமையோர் தலைவன், அவன்சீர்
உள்நெகிழ்ந் தேத்துமின் ஓவா தரற்றுமின்
ஊனுடம் பெய்தப் பெற்றீர்
வானுல காளும் வகையிதென் றோர்ந்தே 394

(395)

வள்ளெயில் செற்ற ஒள்ளெரிப் பிழம்பின்
தள்ளா வண்மையும் தெரிந்தனிர் சென்மெனக்
கள்ளார் கொன்றைக் கண்ணி சூடி
வெள்ளே றுகைக்கும் விரிசடைக் கடவுள்
புள்ளியல் முப்புரம் பொடிபடச் செற்றும்
அள்ளூ ராக்கை அரக்கர்க் கீத்தமை
உள்கியேத்தி உலகர்க் குரைமின்
நள்ளிரு ளாடியை நினைதிரால் எனவே 395

(396)

அம்புலிக் கீற்றனை அருள்நெறிக் கடவுளை
வெம்புலி யுரியனை வெண்ணீற் றணியனை
நம்பவ வல்வினை பாற்றும் பரமனை
உம்பரார் ஏத்தும் ஒருவனை
எம்பிரான் என்றறிந் திசைக்கநன் றாமே 396

(397)

தொல்லியல் வழாஅர் நல்லோர் பலரொடும்
வல்லெயில் அவுணர் வியக்கச் சில்பலிக்(கு)
ஒல்லைசென் றுழலலும் உழலும் எம்மோன்
சொல்ல லானாச் சிவபுரத் தையன்
நெல்லை யூருள் நிறையரு ளேத்தித்
தில்லை விரையும் தெள்ளி யோர்வயின்
எல்லையுள் அடங்கா இமையோர்க் காண்டிகும்
பல்லியங் கறங்கநின் றாடும்
மெல்லியல் பாகவெம் மயல்தீர்க்கெனவே 397

(398)

அதர்பல நீடிய ஆல்கெழு கானிடை
நுதல்விழிப் பெரியோற் கமைவரச் சமைத்த
புதுமறைக் காடெனப் பொலிந்துநின் றோங்கும்
பொதுமணி மன்றமும் இதுகொல் சொல்லீர்
மதில்சூழ் மாடம் அணிசேர்ந் திலங்கப்
புதன்மறை சுனைநீர்ப் பெருங்கல் மீமிசை
இதழ்விரி முளரியிற் றோன்றும்
முதல்வ னுறைசேப் பாக்கநன் னகரே 398

(399)

மன்னுக சிவநெறி மறையொலி ஓங்குக
தென்னக நாடுகந் தாடும் தலைவனைப்
பன்னக அணியனைப் பாடிப் பரவுக
மின்னவிர் சடையனென் றோதிச்
சென்னியில் சேர்த்த சிவனருள் பெறற்கே 399

(400)

நன்ன வார்புரம் நைய நோக்கிய
என்னி லாதசீர் எந்தை தாள்மலர்
பன்னி வால்மிகப் பாடுமின்
அன்ன வார்கழல் எண்ணி யுய்ம்மினே 400

நூலாசிரியரின் பிற நூல்கள்:

1. நாரையூர் நான்மணி மாலை.
2. திருவேட்கள மும்மணிக் கோவை.
3. சிவப்பாடல்.
4. சைவ மணிமாலை.
5. கந்தர் அணியலங்கல்.
6. திரு அருள்மாலை.
7. திரு அருட்கோவை.
8. சிவப்புகழ்ச் சொல்லணி.
9. களந்தைப் பதிகம், திருக்கழுக்குன்றப் பதிகம், கள்ளில் பதிகம் மற்றும் பல.

ஆசிரியரின் ஆங்கில நூல்கள் :

1. **Sivagnana Deepam (Translation).**
2. **Philosophical Works of St. Vallalar.**
3. **Paripoorananandabotham of Srimath Pamban Swamigal (in the Press).**

நூல் கிடைக்குமிடம்:
மு. குப்புசாமி,
18, மேற்கு பூங்கா சாலை,
செனாய் நகர், சென்னை - 600 030.